
உன்
விழி
உன்னிடம்
தமிழ் நாவல்
நைத்ருவன்

உன் விஜு உன்னிடம்

தமிழ் நாவல்



எண்ணம் - எழுத்து

நைத்ருவன்

eBook: உன் விஜி உன்னிடம்

எழுதிய வருடம்: 2016

@copyright

பதிப்புரிமை அறிவிப்பு:

இந்த நூலில் உள்ள கதை, கதாபாத்திரங்கள், கதைக்களம் மற்றும் அனைத்து உள்ளடக்கங்களும் ஆசிரியரின் சொந்த படைப்பு ஆகும். இந்த நூலின் முழு உள்ளடக்கத்தையோ அல்லது அதன் எந்தப் பகுதியையோ நகலெடுத்து வேறு கதைகள், திரைப்படங்கள், நாடகங்கள், தொலைக்காட்சித் தொடர்கள், வலைத்தொடர்கள் அல்லது வேறு எந்த வடிவிலும் பயன்படுத்தக் கூடாது. ஆசிரியரின் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி இதனைப் பயன்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.

பொறுப்பு துறப்பு:

இந்தப் புனைகதையின் படைப்பில் வரும் கதைக்களம், கதாபாத்திரங்கள், பெயர்கள், இடங்கள், நிகழ்வுகள் என அனைத்தும் எழுத்தாளரின் கற்பனையே. அப்படி நிகழும் சம்பவங்கள் ஒத்திருந்தால், அது முற்றிலும் தற்செயலானதே தவிர, குறிப்பிட்டு எந்த ஒரு தனி நபரையோ, குடும்பத்தையோ, குலத்தையோ, அல்லது நிறுவனத்தையோ, அவற்றை மையப்படுத்தியோ அல்லது புண்படுத்தும் நோக்கிலோ எழுதப்படவில்லை.

இந்தக் கதையின் இலவச வீடியோ/ஆடியோ பதிப்பு, YouTube-ல் @aaramstudio என்ற பதிவில் கிடைக்கும். eBook ஆக படிக்க விரும்புவோருக்காக இந்த மின்னூல் வெளியிடப்படும்.

நைத்ருவன்' எழுதிய கதைகள்

- அப்பாவின் அதிர்ஷ்டம்
- அம்மாவின் அமைதி
- நூல் பொம்மைகள்
- விதியின் குற்றம்
- கணவனுடன் ஒரு ஜென்மம்
- கடனால் வந்த வாழ்க்கை
- ஒன்றான உறவுகள்
- அப்பாவின் பெண்
- பவித்ரா
- அதிகார மனம்
- டைரக்டர்'ஸ் டச்
- துக்கம் ஒரு தொடர்கதை
- நெஞ்சில் சுமந்த பாசம்
- அம்மா அசடுதான்
- பெண்ணே, கலங்காதே!
- யாரோ?
- பேச மறந்தவர்
- கைமாறிய பரிசு
- உன் விஜி உன்னிடம்

படிப்பதற்கு முன்.....

காதலைப் பிடிக்காதது போலக் காட்டிக் கொள்பவர்களுக்கான கதை இது அல்ல.

பொதுவாக நாம் சந்தோஷங்களை விட, இல்லாமல் போனதை ஏக்கங்களோடு அதிகம் கொண்டாடுவோம். சிலர் விதியென்று சொல்லி மனதுக்கு ஒத்தடம் கொடுப்பார்கள். "நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்" என நினைத்துக் கொண்டு பலர் வாழ்க்கையை ஓட்டுவார்கள்.

காதலை விட்டுக் கொடுத்து, பெருமைப்பட்டவர்களும் உண்டு. கொடுத்து விட்டு, வருத்தப்பட்டவர்களும் உண்டு. ஆனால், அவர்களெல்லாம் ரசித்தது அந்த காதலைத்தான்.

அழகையும் ரசிக்க வேண்டும். அவலத்தையும் யோசிக்க வேண்டும். தாக்கங்களை தாங்கக்கூடிய மனங்களால்தான் அந்தக் காதலை உணர முடியும். அவர்களுக்காக எழுதப்பட்ட கதைதான் - **"'உன் விஜி உன்னிடம்"**.

பார்க்க வேண்டிய சூழ்நிலை; பார்க்க வேண்டுமா என்கிற போராட்டம்; பார்க்க வேண்டும் என்ற ஆசை; - இவை எல்லாமே சேர்ந்து நடத்துகின்ற நாடகங்களில் நாம் அகப்படவில்லையா?

அப்படி சிக்கித் தவித்த ஒரு காதலின் கதைதான் '**உன் விஜி உன்னிடம்**'.

உறவுகளைக் கொடுக்க நினைக்கும் அத்தனை நெஞ்சங்களுக்கும் காதல் சொந்தமானது. அப்படி, உணர்ந்து போராடியவர்களின் கதைதான் **"உன் விஜி உன்னிடம்"**

எண்ணம்......எழுத்து......
நைத்ருவன்

உன் விஜி உன்னிடம்

பகுதி - 1 மீண்டும் மாற்றம்

விஜியின் ஏழு வருட கல்யாண வாழ்க்கை தோற்றுக் கொண்டிருந்தது.

அவளுடைய கணவன் விவாகரத்துக்குத் தயாரானான். கல்யாணத்திற்கு முன்பே தனக்குப் பழக்கமான மேரியுடன் இப்போது குடும்பம் நடத்த வேண்டுமாம்! விஜியின் சம்மதத்தோடு முடிக்க அவளிடம் பேசினான்.

துக்கத்தில் துவங்கிய விஜியின் கல்யாண வாழ்க்கை முதல் கொஞ்ச காலத்திற்கு சூதாட்டம் போல் ஜெயித்துக் காட்டி, இன்று மறுபடியும் அவளை வாழ்க்கையில் தோற்கடித்தது.

அன்றைய துக்கம், அவள் விரும்பியவனை விட்டுக் கொடுத்து, மற்றவர்களின் மானத்துக்காக இந்த திருமணத்தை ஒத்துக் கொண்டது.

இன்றைய துக்கம், ஒப்புக்கொண்ட வாழ்க்கையை விட்டுக் கொடுத்து, கணவனின் சுகத்துக்காக இந்த திருமணத்தை முடித்துக் கொண்டது.

விழித்திருந்தபோதே வாழ்க்கையில் தோல்வியைப் பார்த்த முன் அனுபவம் இருந்ததால், இந்த தோல்வியை கனவில் வந்த தோல்வியாகவே உணர்ந்தாள் விஜி.

இதில் தைக்கப்பட்ட கவலைகளை, வெளியே சொன்னால் அவமானம்! சொல்லாவிட்டால் நரகம்! விஜிக்கு அவமானமும், நரகமும் ஒன்றாகவே தெரிந்தன.

அந்த ஏழு வருட கல்யாணத்தின் அடையாளம், நான்கு வயதுப் பெண் குழந்தை ரம்யா. குழந்தையின் எதிர்காலத்துக்காக கணவனின் எண்ணங்களை கேட்டாள்.

“என்ன பண்ணணும்னு நினைக்கறீங்க?”

“நான் மேரியோடதான் வாழப் போறேன் விஜி! அதுக்கு நாம பிரியறதுதான் நல்லது!”

“என்கிட்ட ஏதாவது குறை இருக்கா?”

“உங்கிட்ட எந்த குறையும் இல்ல விஜி! இது என்னோட முடிவு.”

“இது தெளிவான முடிவா?”

“எஸ்”

“ரம்யாக்கு நாலு வயசுதான் ஆறது.... அவ என்னோட இருக்கட்டுமா?”

“தாராளமா இருக்கட்டும் விஜி. அவ உன்னோட வளர்றதுதான் நல்லது!”

வந்த கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

“உங்களோட சுயநலத்தை நினைச்சு, சிரிப்புதான் வருது!”

“அதுக்கல்லாம் நான் வருத்தப்பட முடியாது விஜி!”

“அதான் உங்க பேச்சுலேந்தே தெரியறதே! கதிர் அறுக்கற நேரத்துல உழுததை குறை சொல்ல நான் விரும்பலை! ஆனா, குழந்தையோட எதிர்காலத்தை நினைச்சு யோசனை பண்றேன்.”

“நான் வேணும்னா, செட்டில்மென்ட் இழப்பீட்ட ஒன்-டைம் ஆ கொடுக்கறேன்.”

“ஓ.... செட்டில்மெண்ட் வரைக்கும் எல்லா ஏற்பாடுகளையும் செஞ்சுட்டுதான் நீங்க பேசறீங்களா! உங்க அம்மா, அப்பாக்கு இது தெரியுமா?” -

“தெரியும்”-

“அவா எதுவும் சொல்லலையா?”-

“உனக்கு செய்யறது துரோகம்ன்னு சொல்றா, விஜி.”

“அது உங்களுக்கு தோணலையா?”

“வாழ்க்கைல மாத்தம் வேணும்னா எதையாவது ஒண்ணை துறக்கணும். அதனால, என்னோட இந்த முடிவுல எனக்கு எந்த மாத்தமும் இல்லை, விஜி.”

“அதுதான், எங்களை துறக்கணும்னு முடிவு எடுத்தீங்களா? நான் உங்களைத் துறந்திருந்தா.....?”

“விதி எப்படியோ, வழியும் அப்படித்தான் இருந்திருக்கும்.”

“விளையாட்டா செஞ்சுட்டு விதின்னு சொன்னா எப்படி?”

“நான் வாழ்க்கையில் எதிர்பார்த்த சம்பவங்கள் எதுவுமே எனக்கு நடக்கலை விஜி! அதனாலதான்...!”

“நான் எதிர்பார்த்தது நடந்ததான்னு எப்போவாவது தெரிஞ்சுக்க முயற்சி பண்ணிருக்கீங்களா?”

“ஒத்துக்கறேன், கொஞ்சம் சுயநலமா இருந்துட்டேன்!”

“அப்போ, நானும் சுயநலமா இருந்திருக்கலாமா?”

“முடிவெடுக்கறது அவங்க அவங்க இஷ்டம், விஜி!”

“முடிஞ்சே போச்சு சார்! இப்போ அதைப் பத்தி பேச என்ன இருக்கு! அது போகட்டும்! எவ்வளவு வருஷமா வெளில தொடர்பு இருக்குன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?”

“அது..... நம்ம கல்யாணத்துக்கு முன்னாடியே, எனக்கும் மேரிக்கும் தொடர்பு இருந்தது. அவ அவளோட புருஷன இழந்தவ! நான் அவளைத்தான் கல்யாணம் செஞ்சுக்கணும்னு நினைச்சேன். என்னோட ஆசைகளை ஒத்துக்க இந்த சமுதாயத்துக்கும், சம்பிரதாயத்துக்கும் மனசு வரலை! எனக்கோ, வீட்டுக்கும், வெளி உலகத்துக்கும் பயம். அதனால சொல்ல முடியலை!”

“இப்போ அதெல்லாம் மாறிப் போச்சா?”

“இல்லை, நான் இப்போ மனசளவுல தைரியாமாயிட்டேன், விஜி!”

“அப்போ, நம்ம கல்யாணத்துக்கு முன்னாடியே கொஞ்சம் தைரியமா இருந்திருக்கலாமே? என்னையும், இந்த குழந்தையையும் இந்த நிலைமைல விடறது கோழைத்தனம்னு உங்களுக்குத் தோணலையா?”

“இதுக்கு மேல எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியலை, விஜி!”

“அப்படின்னா இந்தக் குழந்தைக்கு வாழ்க்கை ஒரு பலப் பரீட்சைதானா?”

“படைப்போட நோக்கங்கள தெரிஞ்சு மனுஷன் பொறக்கல விஜி. என் சூழ்நிலை, இந்த மாத்தத்தை, நீ ஏத்துண்டுதான் ஆகணும்.”

“நோக்கங்களே தெரியாம பொறந்த இந்த குழந்தைக்கு என்ன பதில் சொல்றது?”

“நீ அவளை வாழ வைப்பேன்னு, எனக்கு உன்மேல நம்பிக்கை இருக்கு, விஜி.”

“உங்களுக்கு நிம்மதி கிடைக்கும்னு நம்பிக்கை இருக்கா?”

“என் சூழ்நிலைகள் சுகமா இருந்தா நம்பிக்கை கிடைக்கும்!”

“அப்படிப்பட்ட சூழ்நிலை எப்பவுமே உங்களுக்கு சாதகமாவே இருக்குமா?”

“அப்படீன்னு நான் நம்புகிறேன், விஜி.”

“உங்கள நான் இவ்வளவு வருஷம் நம்பினேனே சார்!”

“அப்படி சொல்லாத! நீ இருந்த வரைக்கும் சுகமா இல்லையா?”

“ராத்திரி ஆனா மயங்கறதும், குழந்தை பெத்துகறதும் மட்டும் தான் சுகம் நீங்க நினைச்சது தப்பு!”

“அது நீ பார்க்கிற விதம் விஜி...”

“இப்போ மூச்சுக்கு முன்னூறு விஜி சொல்ற நீங்க, கல்யாணத்துக்கு முன்னாடி மூணு நிமிஷம் செலவழிச்சு ஒங்க முடிவை என் கிட்ட சொல்லியிருக்கலாமே!

“என்னால அப்போ அந்த முடிவை எடுக்க முடியலை! போதுமா?”

“சரி, நீங்க இப்போ ஒரு முடிவுக்கு வந்தாச்சு. நானும், என் பொண்ணும் இனிமே உங்களுக்கு வேணாம். அவலந்தான் வாழ்க்கைங்க்கிற நிலைமை எனக்கு இன்னும் வரலை சார்! நான் படிச்சவ! தைரியமாத்தான் இருக்கேன். இனி நாம பிரிஞ்சு போறதுல எந்த தப்புமில்லை. ஸோ, மிஸ்டர் .....” கணவனின் பேரைச் சொல்ல வந்தவள், சற்று நிறுத்தி, “ஓகே, நீங்க யாரா வேணும்னாலும் இருந்துட்டுப் போங்க..... லெட்ஸ் மூவ் தெ பேப்பர்ஸ்...!” எனச் சொல்லி அந்த பேச்சை முடித்துக் கொண்டாள்.

கோபம், வலி, ஆதங்கம், ஏமாற்றம் - இவை எல்லாமே அந்த கடைசி வார்த்தைகளில் தெரிந்தது.

சில மாதங்களிலேயே, அந்த விவாகரத்திலிருந்து விடுகதையில்லாத விடுதலை கிடைத்தது.

அவர்கள் இருந்த, அந்த வாடகை வீட்டிலயே குழந்தையோடு இருந்தாள். அங்கிருந்த உள் அறையும், நாற்காலியும்தான் விஜியின் பிரதான இடம். ஜன்னலுக்கு வெளியே, சற்று தூரத்தில் தெரிந்த அமைதியான இடுகாடு. அங்கிருந்த கல்லறைகள், புதியவர்களுக்கு இடமளிக்காமல், பழைய உடல்களை மட்டும் மூடி பராமரிப்புக்காக எதிர்பார்த்துக் காத்திருந்த அமைதி அங்கு தெரிந்தது.

கல்யாணமான புதிதில் அவளுக்கு பிடித்த இடம் அதுதான்.

அந்த சமயத்தில் சண்டிகர் என்ற ஊரும் புதிது; உறவும் புதிது. பாஷையும் புதிது. பழகிய மக்களும் புதிது.

ஆனால், அந்த அறையை மட்டும் பழையதாக ஆக்கிக் கொண்டாள். முதலில், கல்லறையைப் பார்த்தால் பயமாக

இருந்தாலும், கொஞ்ச நாட்களில் அந்தச் சூழ்நிலைக்குப் பழக்கிக் கொண்டாள். இன்னும் சொல்லப் போனால், இப்போது, தன் சோகத்தை நினைத்துப் பார்க்கும் இடமாகவே அந்த அறையை மாற்றிக் கொண்டாள்.

தமிழ்நாட்டில் பி.காம் படித்த விஜி, சண்டிகருக்கு வந்த சில வருடங்களில் சி.ஏ. படித்து முடித்தாள்.

ரம்யா பிறந்ததால், வேலைக்குப் போகாமல் இருந்தாள். படித்த படிப்பிற்கு, வேலை தேட வேண்டிய வேளை வந்தது.

ஆற்று வெள்ளத்தில் தத்தளித்தவளுக்கு கரை தெரிந்தது போல, 'ஃபினான்ஸ் அனலிஸ்ட்' வேலையை அங்கேயே தேடிக் கொண்டாள்.

ரம்யாவையும் படிக்க வைத்தாள்.

வருடங்கள் ஓடின.

ரம்யா படித்து முடித்தவுடனேயே சென்னையில் இருந்த ஐ.டி கம்பெனியில் வேலை கிடைத்தது.

வேலைக்குச் சேருவதற்காக, அவள் முன்னமேயே, சென்னையில் இருந்த அவளது பெரியம்மா ஹேமாவின் வீட்டிற்கு வந்து விட்டாள். விஜி, சண்டிகரில் இருந்த எல்லாவற்றையும் செட்டில் செய்து விட்டு, பின்பு டில்லியிலிருந்து சென்னைக்கு ரயிலில் கிளம்பினாள்.

அவளது 21ம் வயதில், 1985ல் கல்யாணமாகி மெட்ராஸிலிருந்து சண்டிகருக்குப் போனவள் சுமார் 26 ஆண்டுகளுக்குப் பின்னால் சென்னையாக மாறிய மெட்ராஸுக்கு ரயிலில் வந்து கொண்டிருந்தாள். உணர்வுகளுக்காக போராடிய இடத்தை மறக்கவில்லை.

அந்த ரயில் அழகான மலைகளையும், ஆறுகளையும், தோட்டங்களையும், பசுமையான இடங்களையும் காண்பித்துக் கொண்டு வந்தாலும், பிரிந்தவர்களை நினைத்துக் கொண்ட விஜியின்

நினைவுகள் இந்த இயற்கை அழகுகளை விட இன்னும் அழகாகத் தெரிந்தன.

பழைய நினைவுகளும், புதிய எண்ணங்களும் மாறி மாறிப் போட்டி போட்டுக் கொண்டன.

இரவு பகலை மாற்றிக் கொண்டிருந்தது.

எதிரே உட்கார்ந்திருந்த ஒரு இளஞ்ஜோடியைப் பார்த்தாள். சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். உடல்களின் நெருக்கத்தில், அவர்களின் மனதுகளின் நெருக்கமும் தெரிந்தது. அவர்கள் உட்கார்ந்திருந்த இடம், விஜியைத் தவிர யாருக்கும் முழுதாகத் தெரியாமல் இருந்தது. அந்த மங்கலான விளக்கும், அந்த இரவும் அவர்களுக்கு ஒத்துழைத்தது.

'காதலில் இருப்பவர்களுக்கு கண்கள் தெரியாது, காது கேட்காது, வாய் மட்டும் பேசும்!' என்று எழுதிய சூர்யா விஜியின் நினைவுக்கு வந்தான்.

காதலை உணர்ந்தவர்கள்தான் அப்படிப்பட்ட வசனக்கவிதைகளை ரசிக்க முடியும் என்று சொன்னவனும் அவன்தான்.

அந்த சமயம் எதிரே இருந்த இளைஞன், ஒரு சிகரெட்டைப் பற்ற வைக்க, உடனே அந்தப் பெண் அதைப் பிடுங்க, மறுபடியும் அவளிடம் போராடி அவன் அதை எடுத்து மீண்டும் பற்ற வைக்க, மறுபடியும் அவள் அதை எடுத்து தூக்கி விசிறியெறிய.... உடனே அவன் வேறோரு சிகரெட்டைக் கொளுத்த.....- அந்த விளையாட்டைப் பார்த்துக் கொண்டிருந்தாள் விஜி.

சூர்யாவிடம் அவள் பேசியது ஞாபகத்திற்கு வந்தது.

"எவ்வளவு சிகரெட் பிடிக்கறடா. நீ பிடிக்கிற சிகரெட் எனக்குத் தாங்கல.... எப்பதான் நான் சொன்ன பேச்ச கேப்பயோ?"

"வாழறதை ஜாலியா வாழணும் விஜி"

“சிகரெட் பிடிக்கறது ஒரு ஜாலியா? உயிரோட இருந்தாதான் வாழ முடியும்”

“அப்போ, நீ இருக்கிற வரைக்கும், எனக்கு கவலையில்லை”

“என்ன உளர்ற?” முகத்தைக் கோணலாக வைத்துக் கொண்டு கேட்டாள் விஜி.

ஒரு பேப்பரை எடுத்து பேனாவால் ஏதோ கிறுக்கி அதை விஜியிடம் கொடுத்தான் சூர்யா. “விஜியென்றால் உயிரென்பேன்” என எழுதியிருந்தது. அவன் சொன்ன சிலேடையின் அர்த்தம் அப்போது புரிந்தது.

“அந்த சின்ன வரிகள்.....! அவன் க்ரேட்.” என மனதுக்குள் சொல்லிக் கொண்டே, அந்த சம்பவத்தை நினைத்துக் கொண்டாள் விஜி.

அந்த ரயிலின் வேகம் கூடியது. விஜிக்கு தூக்கம் வரவில்லை. மறுபடியும் எண்ணங்கள் உருண்டன.

“காதல்ல கேர்ஃபுல்லா இருக்கணுமா?” - குறும்புத்தனமாக கேட்ட கேள்வி ஞாபகத்துக்கு வந்தது.

“கட்டாயமா விஜி ! பழகத் தெரியாத நெஞ்சமும், விலகத் தெரியாத நெஞ்சமும் என்னைக்குமே குழப்பத்தை விட்டு வெளில வர்ற முடியாது!”

“ஹே...என்ன, நான் விளையாட்டுக்கு கேட்டா, நீ சீரியஸா பதில் சொல்ற?”

“நானும் உங்கிட்ட விளையாடித்தான் பாக்கறேன்!” என சொல்லி விட்டு அவனுக்கு உண்டான பிரத்யேகச் சிரிப்பை சிரித்தான்.

“அது சரி விஜி! இவ்வளவு கேள்வி டெய்லி என்னை கேக்கறயே! நான் ஒரே ஒரு கேள்வி கேக்கறேன். பதிலை சொல்றயா?”

“கேளுடா... என்ன பயமுடுத்தறயா! நானும் உன்னை மாதிரி கவிதையும், கட்டுரையும் எழுதறவதான்! கேளு....ஸ்டார்ட்!”

“விஜி...உனக்கும் எனக்கும் ஒத்து போற மிகப்பெரிய ரெண்டு விஷயங்கள் இருக்கு. கரெக்டா சொல்லு பார்ப்போம்.”

அவனுடைய விளையாட்டு தொடங்கியது.

“அறிவும், பாசமும்” - ரொம்பவும் யோசிக்காமல் சொன்னது விஜியின் ஞாபகத்துக்கு வந்தது.

“ஹ...ஹா...ஹா.. உங்கிட்ட இல்லாத அறிவைப் பத்தி சொல்ற.” தனக்குண்டான சிரிப்பை சிரித்து, “சங்கீதமும், சமரசமும்தான்”

”மண்ணாங்கட்டி! சங்கீதம்னு நீ சொல்றது, உன்னோட ரசிப்புல மட்டும்தான்! நீ பாடினா, நான் ஓடியே போயிடுவேன். இருந்தாலும், அதை ஒரு மாதிரியாக ஒத்துக்கறேன், அது சரி, சமரசம்னு, நீ எதை சொல்ற?”

“இதோ பாரேன்....நீ எவ்வளவு அட்வைஸ் பண்ணினாலும் நான் கேட்டுக்கிறேன். நான் அட்வைஸ் பண்ணி நீ கேட்கலைன்னாலும், நாம ரெண்டு பேரும் ஒண்ணாவே இருக்கோம் பார்த்தியா!. இதுதான் சமரசம்” - எனச் சொல்லி பெரியதாகச் சிரித்தான் சூர்யா.

“இல்லையே ... ! கேக்கலியே .....! சிகரெட்டை நிறுத்துன்னு சொன்ன அட்வைஸ நீ கேட்டதே கிடையாது ! அப்புறம் எங்க சமரசம். சும்மா அடிக்காதடா !” பதிலுக்கு விடாமல் சொல்லிவிட்டு முகத்தை மறுபடியும் கோணலாக வைத்து அழகு காட்டியது இன்று விஜியின் கண்களுக்கு முன்னால் நின்றது.

“சரிடா, இன்னைக்கு உனக்கு கடைசியா ஒரு டெஸ்ட். என்னை ஒரு காதலியா எப்படிப் பாக்கற?”

“உண்மைய சொல்லட்டுமா, இல்லை உனக்காக சொல்லட்டுமா?”

“பரவாயில்லை, கிண்டலாவே சொல்லு!”

“உன்னை நான் பல கோணத்துல பாத்தாலும், நான் நினைக்கிற கோணத்துல என்னால இது வரைக்கும் பாக்கவே முடியலை!

மனைவியா பாத்தா, தாயா மாறி அட்வைஸ் செய்யற! தாயா பாத்தா, காதலியா மாறிடுற! காதலியா பாத்தா, ஃப்ரெண்ட்லியா பேசறே! ஃப்ரெண்ட்லியா இருந்தா, குழந்தையா மாறிடுற! பொதுவா, நான் எதிர்பார்க்கற பாத்திரத்துலேயே நீ இருக்க மாட்ட! நான் உனக்காக என்னை மாத்திகறேன் பாரு... அதுதான் உண்மை......" - அதைச் சொல்லி விட்டு சிரித்தான்.

"ஒன்னை...." கையிலிருந்த பேனாவை அவன் மேல் எறிந்தாள்.

"சே...சே... அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல விஜி! நீயில்லாத வாழ்க்கையே இல்லைன்னு நினைச்சு வாழறேன். விளையாட்டுக்குத்தான் சொன்னேன்." அவனுடைய பேச்சு சீரியஸாக மாறியது.

ஓடும் ரயிலில், அந்த இரவில் அவனை ரசித்துக் கொண்டிருந்தவளுக்கு, "யார் அந்த சூர்யா?" என்ற ஆரம்பகட்ட கேள்வி அவளுக்குள் எழுந்தது.

ஒரு வாக்கியத்தில் சொன்னால், 'அவனுடைய காதலின் உணர்வுகளை, உரிமையோடு சொன்ன ஒரு தைரியசாலி' என நினைத்தவள், அவன் அந்த காதலை சொன்ன விதத்தை ரசித்துக் கொண்டாள்.

25 வருடங்கள் கழித்து பிடித்த இடத்தை நோக்கி பயணம் எனும்போது, அவளுக்கு மயக்கமும், குழப்பமும் இருந்தது சகஜம்தான்.

அவளைப் போலவே தூங்காமல் வந்த அந்த ரயில், விடிவதற்காக காத்திருந்த அந்த இருட்டிலேயே சென்னை-சென்ட்ரல் ப்ளாட்பாரத்துக்குள் நுழைந்தது.

விஜியின் கால்கள் சென்னையில் பட்டதும், அவள் மனதுக்குள் வந்த மாற்றத்தை உணர்ந்தாள்.

டாக்ஸியைப் பிடித்து வளசரவாக்கத்தில் இருந்த அக்கா வீட்டிற்குப் போனாள். அன்று மெட்ராஸாக இருந்த இடம், இன்று

சென்னையாக மாறியதைப் பார்த்தும் அதிகமாக ரசிக்கவில்லை. அந்தப் பழைய நண்பர்களையும், சூர்யாவையும் அதிகமாக நினைக்க ஆரம்பித்தாள்.

பகுதி - 2 நேசமும் காதலும்

“ஹாய், ஐ யம் லதா. பக்கத்து வீட்டுல இருக்கேன். நீங்கதான் இந்த வீட்டுக்கு புதுசா வந்திருக்கீங்களா? உங்களை இன்னைக்கு காலேஜுலயும் பாத்தேன்.”

“ஹாய், ஐ யம் விஜி. ஆமா, எங்க அக்கா வீடுதான். நான் அவளோட தங்கியிருக்கேன். ஹாம்... நானும் உங்களை காலேஜ்லேயும் பாத்தேன். அதே காலேஜுலதான் நானும் பி.காம் ஃபைனல் இயர்.” சிரித்த முகத்தோடு கையைக் கொடுத்த படியே சொன்னாள் விஜி.

“நான் செகண்ட் இயர், பி.காம். உங்களை மீட் பண்ணினதுல ரொம்ப சந்தோஷம்”

மறுபடியும் கையைக் கொடுத்த விஜி, “நீங்க, வாங்க, போங்க, இதெல்லாம் இல்லாம, நல்ல ஃப்ரெண்ட்ஸ்ஸா இருக்கலாமே! என்ன சொல்றீங்க லதா?” - சொல்லியபடியே, லதாவின் பதிலுக்காக காத்திருந்தாள்.

“ஹோ...! அப்போ எதுக்கு, ‘ங்க’ போடற! சரிடி விஜி! அப்படியே இருக்கலாமே!” எனச் சொல்லி அசத்தினாள் லதா.

அந்த புது நேசத்திற்கு ஒரு வார வயது கடந்தது.

சூர்யா - குமார் - கண்ணன்

இந்த மும்மூர்த்திகளும் சென்னையில் ஒரே தெருவில் வளர்ந்த இறுக்கமான நண்பர்கள். ஒரே ஸ்கூல்; ஒரே க்ளாஸ்; ஒரே காலேஜில் படித்து முடித்து மேலே படித்துக் கொண்டிருந்தார்கள். “கெட்டிக்கார நண்பர்கள்” என்ற வரையறைக்கு உதாரணமானவர்கள். படிப்பு விஷயத்தில் முழுக் கவனம் இருந்தாலும், பொழுது போக்குக்கு பஞ்சமில்லாமல் இருந்தவர்கள்.

கிரிக்கெட் ஆடுவது, அதைப் பற்றி பேசுவது, சினிமாப் பாடல்கள், மற்றும் எம்.ஜி.ஆர் படங்களை ரசிப்பது என்றால் உலகத்தையே மறந்து விடுவார்கள்.

கண்ணன், உலக ஆசைகளில் மோகமில்லாத ஒரு நல்லவன். மற்றவர்கள் வம்புக்கு போக மாட்டான். தானுண்டு, தன்னுடைய பிள்ளையார் கோயிலுண்டு என இருப்பான். இயல்பாக பழகுவான். சூர்யாவுக்காகவும், குமாருக்காகவும் உயிரை விடக்கூடிய உண்மையான நண்பன்.

கண்ணனின் தங்கை லதா. மற்றவர்களுக்கு உதவி செய்வாள். தோழமைக்கு உயிர் கொடுப்பாள். சண்டையென்று வந்தால், விட மாட்டாள். மனதில் பட்டதை நேராகச் சொல்லும் ஒரு அழகானப் பெண். மனதார வாழ்த்த வேண்டிய ஒரு நல்லவள். அண்ணனிடம் ஆயிரம் விளையாட்டாக சண்டை போட்டாலும், கண்ணனை விட்டுக் கொடுக்காத ஒரு சகோதரி.

குமார், நல்ல பரோபகாரி. நல்ல அறிவாளி. ஆபத்தில் கூட நிற்கும் நல்ல மனிதன். சூர்யாவுக்கு தனிப்பட்ட நண்பனாக இருந்தாலும், எல்லோருக்கும் அவனைப் பிடிக்கும்படி நடந்துகொள்வான்.

சூர்யா - கண்ணன் வீட்டிற்கு நேர் எதிரான வீடு. குமார் வீட்டிற்குப் பக்கத்து வீடு. புத்திசாலி, போராளி, வெளிப்படையாகப் பேசுபவன். துணிச்சலானவன். நண்பர்களை நம்பிக்கையோடு பார்ப்பவன். கவிதைகளை ரசித்து எழுதுபவன். பாட்டில் கேள்விஞானம் அதிகம்; ஆதலால் நன்றாகப் பாடுவான். நம்பி நின்றால் நல்ல நண்பன். பெண்கள் திரும்பிப் பார்க்கும் அளவுக்கு இருந்த ஒரு அழகான ஆண்-கலவை அந்த சூர்யா.

சூர்யாவின் அப்பா விசுவநாத ஐயர். இம்போர்ட்ஸ் & எக்ஸ்போர்ட்ஸ் பிசினஸ். சொந்த ஊர் புதுக்கோட்டை. ஆனால் சென்னையில் அடைக்கலம். அந்தஸ்தை தக்க வைத்துக் கொள்வார்.

அழுத்தமான கோபம், நெறிமுறைகள், கண்டிப்பு, கட்டுப்பாடு - இந்த குணங்களுக்குச் சொந்தமானவர்.

சூர்யாவின் அம்மா நீளா வெகுளி. கணவன் விசுவநாதன்தான் இமயம். அவர் பேச்சைத் தட்ட மாட்டாள். உறவுகளின் சக்தியை புரிந்த ஒரு நல்ல ஜீவன்.

வித்யா - சூர்யாவின் அக்கா. அப்பாவின் பாதி குணமும், தனக்கென பாதிக் குணமும் கொண்டவள். திறமைசாலி. அவளுக்கென்று ஓர் மனம்! கல்யாணமாகி லண்டனில் செட்டில் ஆகிவிட்டாள். சூர்யாவைப் பிடிக்கும். ஆனாலும், அவனது முற்போக்கான எண்ணங்களுக்கெல்லாம் தடை போடத் தயங்க மாட்டாள்.

அந்த மூன்று குடும்பங்களும் நல்ல குடும்ப நண்பர்களாகவும், ஒன்றாகவும் இருந்தார்கள். எதிரெதிர் வீட்டில் இருந்ததால், அந்த மூன்று நண்பர்களும் எந்த வீட்டிலும் சாப்பிடுவார்கள். எந்த வீட்டிலும் தூங்குவார்கள். அந்த அளவுக்கு நெருக்கமான பழக்கம்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை, 7 மணி இருக்கும்.

சூர்யாவுக்கு அறிமுகமானாள் விஜி.

கண்ணன் வீட்டில் சூர்யாவும் கண்ணனும் அவர்கள் வாங்கிய புது கிரிக்கெட் பேட்டிற்கு பதம் ஏற்றிக் கொண்டிருந்தார்கள்.

“அல்மோஸ்ட் சீசன் ஆச்சுடா! இன்னும் ஒரு ஓவர் போட்டா போறும்!” - கிரிக்கெட் பேட்டுடன் விளையாடிக் கொண்டே சொன்னான் சூர்யா.

“போறுண்டா! டயர்டா இருக்கு! பசிக்குது. கிளம்பலாம்.” மெட்ராஸ் பாஷையில் கொண்டே பௌலிங்க் போட்டான் கண்ணன். அந்தப் பந்து, வேலியைத்தாண்டி பக்கத்து வீட்டிற்கு போய்விட்டது.

அதை எடுக்க சூர்யா போனான்.

விஜி அந்த நேரம் பார்த்து அங்கு வர, கிடந்த பந்தை எடுத்துக் கொண்டாள்.

“இதென்ன, கிரௌண்டா? இங்க கிரிக்கெட் ஆடினா எங்களுக்கெல்லாம் டிஸ்டர்ப்பிங்கா இருக்கு.” என்று சொல்லி விட்டு பந்தை மறைத்துக் கொண்டாள்.

விஜியைப் பார்த்த சூர்யாவுக்கு பந்து எடுக்க வந்தோம் என்பது மறந்து விட்டது.

தன்னை மறந்தான் சூர்யா. கற்பனை செய்து கவிதைகளில் கொட்டிய அவனுடைய கதாநாயகியும், அந்த கற்பனைகளும் தோற்று, செத்தும் போயின. அவனுக்கு அவளைப் பிடித்தது.

அவன் பார்த்த பார்வையில் விஜியும் தன்னை சற்று மறந்தாள். “ஸ்மார்ட்” என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டாள்.

தைரியசாலியான சூர்யாவுக்கு விஜியிடம் பேச ஆசை. ஆனால் ஏதோ ஒன்று, அவனது துணிச்சலைத் தடுத்தது. சண்டை போட்டுவிட்டால், அவளைப் பார்க்க முடியாது என தெரிந்து கொண்டான்.

“என்ன பார்க்கறீங்க! விளையாட மாட்டேன்னு சொல்லுங்க!” - விஜி சொன்னது காதில் விழுந்தது.

லேசாக சிரித்தவாறே திரும்பி, “டேய் கண்ணா! தர மாட்டாங்களாம்! நீயே போய் கேளு.” வேலியைத் தாண்டிக் கொண்டே சொன்னான்,

கண்ணன் விஜியின் அருகே போய் ஏதோ பேசினான். பந்து வந்து விழுந்தது. ஆனால், அங்கு சூர்யாவும் விஜிக்காக விழுந்தான்.

மேலும் அவளைப் பற்றி தெரிந்து கொள்ள பேச்சு கொடுத்தான்.

“யார்றா அவ? நம்மள மிரட்டறா மாதிரி பேசறா?”

“இந்தப் பொண்ணு, புதுசா வந்துருக்குடா. அவ அக்கா ஃபேமிலியோட வீட்ல இருக்குடா. லதா காலேஜ்தான். ஃபைனல் இயர், பி.காம். தஞ்சாவூர் பொண்ணாம்! லதாக்கு ஃப்ரெண்ட்!”

“பேரு தெரியுமா?”

“தெரியலடா! ஏதோ லக்ஷ்மி.....” சொல்லிக் கொண்டே உள்ளே போனான் கண்ணன்.

காலைப் பொழுது கடந்தது.

சூர்யாவுக்கு அவன் வீட்டில் இருப்பு கொள்ளவில்லை. கண்ணன் வீட்டுக்குப் போனால் அவளைப் பார்க்கலாமென்ற ஐடியா, ரொம்ப நேரமாக ஓடிக் கொண்டிருந்தது. மதியம் கண்ணன் வீட்டிற்குப் போனான். கண்ணன் வீட்டில் இல்லை. லதாவும், சூர்யாவும் பேசிக் கொண்டிருந்தார்கள். வாசல் கதவு திறந்திருந்தது.

விஜிக்கும் அந்த பரபரப்பு இருந்தது. சூர்யா இருப்பதை தெரிந்து கொண்டு, லதாவைப் பார்ப்பதுபோல் அங்கே வந்தாள். வந்தவள் உட்காரத் தயங்கினாள்.

தற்செயலாக மற்றவர்களுக்குத் தெரியாதபடி செய்வது, காதலர்களின் தனிச்சையான செயல்கள் என்று காதலித்தவர்களுக்குத்தான் தெரியும்.

“வா விஜி!” லதா கூப்பிட்டாள்.

“நான் அப்புறம் வர்றேன் லதா!” சற்று நடிப்பைக் காட்டினாள்.

“ஒண்ணுமில்லை, வா! இவந்தான் சூர்யா! நாங்களெல்லாம் நல்ல ஃப்ரெண்ட்ஸ்.”

“அவங்க என்னைப் பாத்து பயப்படறாங்க போல இருக்கு. நீங்க பேசுங்க. நான் உன்னை அப்புறமா பாக்கறேன் லதா.” எனச் சொல்லி கிளம்பிய சூர்யா, விஜியைப் பார்த்து தைரியமாகப் பேசினான்.

“ஹலோ... நான் சூர்யா!”

“ஹலோ. என் பேர்… விஜி!”

“பாதி பேர்தான் வந்திருக்கு. முழுப்பேர் இனிமேதான் வருமா?” கிண்டலடித்தான் சூர்யா.

“ஓ…… ஓகே..! விஜயலக்ஷ்மி எங்கிற விஜி, போதுமா!” பதில் வந்தது.

சூர்யா அவளைத் தவிர எதையுமே பார்க்கவில்லை; ஆனால் ஏதோ கற்பனையில் இருந்தான்.

“எனக்கேத்த உயரம். எனக்குப் பிடிச்ச அழகு. ஐயர் ஜாடை. மூக்குக் கண்ணாடி செயற்கையா இருந்தாலும், அதுல ஒரு அழகு. மார்பழகு தெரியாமலிருக்க அவள் தோள்களை சுருக்கிக் கொண்ட விதம். காதுகளை தொட்டுக் கொண்டு போன அழகான தலைமுடி. சற்று நீளமான முகமாக இருந்தாலும், அதற்கேற்ற கழுத்து!….. - மனதுக்குள் அளவு எடுத்துக் கொண்டிருந்தான். விஜியால் சூர்யாவின் பார்வையை மட்டும் சுலபமாக உணர முடிந்தது.

விஜியும் அந்த அறிமுகத்தின் சில நொடிகளிலேயே சூர்யாவை அளவெடுத்தாள். அழகுக்கு குறைவில்லாத ஆண்மைத் தனம்! எந்தப் பெண்ணுக்கும் அவனைப் பிடிக்கும் என்கின்ற தோற்றம்.” என்று தன் மனதிலேயே கேட்டுக் கொண்டாள்.

“ஹலோ….!” என்று லதா கூப்பிட்டதும், இருவருமே சுதாரித்துக் கொண்டனர்.

தொடர் பேச்சுக்கு ஏங்கிய சூர்யா, “உங்க பேர் ரொம்ப நல்லா இருக்கு. வெல்கம் டு அவர் க்ரூப்” சற்று அசடு வழிந்து கொண்டே விஜியைப் பார்த்தான்.

என்ன பேசுவதென்று தவித்த விஜியும் அவளையும் அறியாமல் தலையை லேசாக தாழ்த்தி கண்களை ஒருமுறை மூடித்திறந்து சொன்னாள்! “ஓ…..பேர் ரொம்ப அப்நார்மலா இருந்தாதானே கஷ்டம். டங்க் ட்விஸ்டரா இல்லையே! தென் இட்ஸ் ஓகே.”

சொல்லிவிட்டு மெதுவாக சிரித்தாள். அந்தப் பதிலில் சூர்யா மயங்கிக் கிடந்தான்

காதலில் மயங்குகிறோம் எனத் தெரியாதவர்களுக்கு இது புதியதாகத்தான் இருக்கும்.

“ஹே... சூர்யா.....இவள் என் ஃபிரண்ட் ‘விஜி’. “ஃபைனல் இயர் பி.காம். என்னோட காலேஜ் தான். நடுவுல சேர்ந்திருக்கா ! இத்தனை வருஷமா தஞ்சாவூர்ல படிச்சா. அஷோக் நகர்ல இருக்கற அவளோட அக்கா வீட்டுல முன்னாடி இருந்தா. நம்ப வீட்டுப் பக்கத்திலே அவ இன்னொரு அக்கா வீடு இருக்கு. அங்கதான் இப்போ இருக்கா.” நம்மளோட இருக்கப் போற இன்னொரு ஃப்ரெண்ட்” - லதா அழகாக அறிமுகப் படுத்தினாள்.

“ஹோ... தட்ஸ் க்ரேட். நான் எதிர் வீட்ல இருக்கேன்’ - சூர்யா தன் வீட்டை அடையாளம் காட்டினான்.

லதாவுக்கு, இருவரும் ஜொள்ளு விடுவது தெரியாமல் இல்லை.

அடுத்த கேள்வியை தைரியமாக கேட்டான் சூர்யா. “ஏன் உங்க நெத்திப் பொட்டை, இன்னும் கொஞ்சம் பெருசா வெக்கலாமே!” என நேரடியாக கேட்ட சூர்யாவை, ‘இவன் கட்டாயமா வித்தியாசமானவன்’ என நினைத்துக் கொண்டே, “ம்...ம்..ம்... யோசிக்கிறேன்” என்று பாஸிடிவ்வாக பதிலைச் சொன்னாள் விஜி. அந்த கேள்வி கேட்ட தைரியத்தை விஜி மனதுக்குள் பாராட்டிக் கொண்டாள்.

காதலில் இருப்பவர்கள் எதற்கெல்லாம் பாராட்டுவார்கள் என காதலில் இல்லாதவர்களுக்குத் தெரியாது.

அவர்கள் சந்தித்த பார்வைகள் கொஞ்சம் கூட சிந்திக்காமல் எதையோ தந்துவிட்டு, சாதித்ததைப் போன்ற ஓர் உணர்வைத் தந்தன. விஜி அவளது பார்வையை வெட்கத்தால் கீழே இறக்கினாள். பொதுவாக ஆண்களுக்கு அத்தகைய வெட்கத்தை ரசிக்கத்தான் தெரியும். அதனால், சூர்யா அவளை ரசித்தான்.

அந்த சமயத்தில் கண்ணனும், குமாரும் அங்கு வர, லதாவால் மறுபடியும் மற்றவர்களுக்கு அறிமுகமானாள் விஜி. முடிந்தவுடன் ஆண் பிள்ளைகள் மூவரும் வெளியே வந்தனர்.

“என்னடா ரொம்ப ஜொள்ளு வுடற போல இருக்கு! பாத்து மச்சி... கவுந்தட போற....! இப்போதான் சி.ஏ சேர்ந்திருக்க. படிப்பு முக்கியம்.” - வேடிக்கையாக சொன்னாலும், கச்சிதமாகச் சொன்னான் குமார்.

“என் கிட்ட எவ்வளவோ பேர் ப்ரபோஸ் செஞ்சிருக்காங்க. எனக்கு ஷாக் அடிச்சா மாதிரி இருக்க வெச்சவ விஜிதாண்டா! நான் அவகிட்ட இதைப் பத்தி பேசத்தான் போறேன்!” சூர்யா சொன்னதுதான் தாமதம்.

“எதைப்பத்தி பேசணும்? லவ்வா...? இது உனக்குத் தேவையாடா? என்னடா பெரிய...லவ்! பொண்ணுங்க்க! ....எனக்கு என்னமோ பிடிக்கவேயில்ல... வேலையைப் பாத்தோமா, வந்தோமா... கிரிக்கெட் ஆடினோமா ... தூங்கினோமான்னு இல்லாம...இந்த லவ், கத்திரிக்காய், புடலங்காயெல்லாம் ... நமக்குத் தேவையில்லடா சூர்யா.......” அமைதியாக இருந்த கண்ணன் ஆவேசத்துடன் பொங்கினான்.

சூர்யாவுக்கு, அப்போது அவனுடைய அன்பு தெரிந்தது; கோபம் தெரியவில்லை. இருந்தாலும், “நீ ஏண்டா இவ்வளவு டென்ஷன் ஆகணும்....கொஞ்சம் அமைதியா இருடா..!” சாந்தமாகச் சொன்னான் சூர்யா.

குமார் சூர்யாவைப் பாத்துப் பேசினான். “இதெல்லாம் உனக்கு ஒத்து வருமா, இல்லை, உங்க வீட்டு ஹிட்லருக்கு ஒத்து வருமா? எதையுமே, நூறு தடவை யோசிச்சுட்டு பேசற உனக்கு என்னடா ஆச்சு? ஏதோ தத்து பித்து மாதிரி பேசற! ஆசைல சொல்றதுக்கும், ஆவேசத்துல சொல்றதுக்கும் வித்தியாசம் இருக்குடா சூர்யா! முட்டாள் மாதிரி பிஹேவ் பண்ணாத! அப்படி என்னடா அவகிட்ட மயங்கற அளவுக்கு இருக்கு?

“என்னவோ தெரியலை. எவ்வளவோ அழகாயிருந்தாலும், இந்த நிலாக்குள்ள ஒரு சோகம் இருக்கு பாரு. அதை எவ்வளவு பேரால உணர முடியும்னு நினைக்கற. அதுபோலத்தான் அவளை நான் பாத்தவுடனே, அவதான் என்னோட வாழ்க்கைன்னு சொல்றது.”

“யப்பா, கவிதை-நாயகா....உன்னோட உவமைகளும், காதலும் எனக்கு தலை சுத்துது. கொஞ்சம் நிறுத்து.” குமார் சொன்னவுடன் கண்ணனும் சிரித்துக் கொண்டே, ‘இவனுக்கு பைத்தியம் பிடிக்கப் போறதுன்னும் நல்லா தெரியுது’ என்று சொல்லி சிரித்துக் கொண்டார்கள்.

அந்த சூழலோடு அன்றைய நாள் முடிந்தது.

பகுதி - 3 இனிய உறவு

ஒரு வாரம் போனது.

விஜியைப் பார்க்க முடியவில்லை. சூர்யாவுக்கு லதாவிடம் கேட்கத் தயக்கம். ஒன்றுமே ஆகாததுபோல் நடித்தாலும், ஏதோ படிப்பு, ஏதோ சாப்பாடு. ஏதோ பேச்சு. எதிலும் நாட்டமில்லை. காதலை வெளியில் சொல்லாமல் இருந்த போதே உரிமையில்லாத அந்தப் பிரிவு, அவனைத் தனிமையை நோக்கித் தள்ளிக் கொண்டிருந்தது.

விஜியின் மேல் ஒரு வருத்தமும் வந்தது.

"என்கிட்ட சொல்லிட்டுப் போனா என்ன?" என்ற கேள்வி, விஜி இவனது கட்டுப்பாட்டுக்குள் வந்தது போல ஒரு நினைப்பில் எழுந்தது. அந்த பிரிவில் வந்த உணர்வுகள், கவிதைகளாக அவனுடைய தனிப் புத்தகத்தில் எழுதப்பட்டன.

பிரிவின் வேதனையை முதன் முதலாக உணர ஆரம்பித்தான். வேறு வழி தெரியாமல் லதாவைப் பார்த்து இதைப் பற்றி பேசப் போனான்.

"நினைச்சண்டா! இன்னைக்கு காத்தாலயே நீ வருவேன்னு." லதா அவளுடைய பரிபாஷையில் சொன்னாள்.

அவள் சொன்னதைச் சாதகமாக எடுத்து கொண்டாலும், "ஏன்? என்ன ஆச்சு?" என ஒன்றுமே தெரியாமல் போல் கேட்டான்.

"விஜி ஊருக்கு அவ அப்பாவை பாக்கப் போயிருக்கா. இன்னும் நாலு நாள் கழிச்சுதான் வருவாளாம்!"

"அதனால? அவ எப்போ வந்தா எனக்கென்ன?" நடித்தான் சூர்யா.

"டேய் பீடி! நடிக்காதடா! அவளைக் காணுமேன்னு கேக்கத்தான் நீ என்னப் பாக்க வந்தேன்னு எனக்குத் தெரியும். லெட்டர் போட்டிருக்கா. அதுல, உன்னைப் பத்தியும் எழுதியிருக்கா."

லதாவை சூர்யா "குச்சி" என கூப்பிடுவது வழக்கம். அவளும் அவனை 'பீடி' என்று கூப்பிடும் வழக்கம் அந்த அண்ணன் தங்கைக்குள் இருந்தது.

"அப்படியா? என்னன்னு எழுதியிருக்கா?" கேள்வி கேட்டதிலிருந்தே அவனுடைய நடிப்பை விட்டுக் கொடுக்கத் தயாரானான் சூர்யா.

"உங்கிட்ட ஊருக்கு போறதை தெரியப்படுத்தலை. சாரின்னு சொல்லி, நீ எப்படி இருக்கன்னு கேட்டுருக்கா." - சொல்லிக் கொண்டே அந்த இன்லான்ட் லெட்டரை அவனிடம் கொடுத்தாள் லதா.

"ஓ....அப்படியா" எனச் சொல்லி ஆர்வத்தோடு தன்னைப் பற்றி எழுதியிருப்பதை மட்டும், மூன்று முறை படித்தான்.

"நீ எங்க வர்றன்னு எனக்குத் தெரியும். விஜிக்கு இந்த லவ்வெல்லாம் பிடிக்காதுன்னு நினைக்கிறேன். அதைத்தவிர, அவ ரொம்ப மூடி கேரக்டர். ஒரு சில சமயம், சந்தோஷமா இருப்பா; இன்னொரு சமயம் வாழ்க்கைய... வெறுத்துப் பேசுவா. உன்னோட டைப்புக்கு அவ சத்தியமா செட் ஆக மாட்டா. ஒன்னோட டைம் தான் வேஸ்ட்." - பளீரென்று சொன்னவள் மேலும் தொடர்ந்தாள்.

"உன் பின்னாடி நிறைய பொண்ணு சுத்தறாங்க! உனக்கு என்ன பைத்தியமா?? ஏன் அந்த, விஜி? ஒரு காரணம் சொல்லுடா பாப்போம்!" - ரொம்ப ஸிம்பிளாக ஒரு கேள்வியைக் கேட்டாள்.

"குச்சி, காரணம் தெரிஞ்சு காதல் செஞ்சா அது காதலா இருக்காது, வாழ்க்கைங்கறது கணக்கு! வழிமுறைகள் மாறலாம். தகுந்த ஃபார்முலா கிடைச்சா, ஆன்ஸர் ஈஸியா வந்துடும்."

"அடேய்....பீடி.....! வர்ற கோவத்துக்கு.... இதுல கவிதை நடை.... வேற....தாங்க முடியலை...! கேவலமா இருக்கு!"

"ஹே......! மக்கு! இது கவிதை இல்லை. வெறும் ஸ்டேட்மெண்ட். ரெண்டு பேருக்குமே பிடிச்சிருந்தா, வாழ்க்கை ஸ்வீட். தெரியுமா உனக்கு? ஐ திங்க் இட்ஸ்-ட்ரூ இன் அவர் கேஸ்....."

“இப்போ என்னங்கற?” - சலித்துக் கொண்டாள் லதா.

“ஓகே....நான் அவளோட பேசணும். அதுக்கு நீதான் ஒரு ஐடியா கொடுக்கணும்.”

“நானா... சான்ஸே..இல்ல.... அதுவும், இந்த லவ் மேட்டரை பேசினேன்னு எங்கப்பாவுக்கோ, கண்ணனுக்கோ தெரிஞ்சுதுன்னா .....நாம ரெண்டு பேரும் காலி. அதுகூட அட்ஜஸ்ட் ஆயிடும்! உங்கப்பா ‘ஹிட்லரு’க்குத் தெரிஞ்சா உனக்கு உயிரோட கில்லட்டின்.......லூஸு மாதிரி ஏதாவது பண்ணாதே. வேற ஆளப் பாரு !....நான் மாட்டேன். இந்த விஷயத்துகெல்லாம் நான் இல்லைடா சூர்யா.”

“ஓகே... .அவளுடைய ஃபேமிலியப் பத்தி மட்டும் சொல்லு.” விடாமல் லதாவை துறுவினான்.

“என்ன ஏன் சொறிஞ்சுப் பாக்கற ? எனக்கு ஓரளவுக்குத்தான் தெரியும்.”

“தெர்ஞ்சதை சொல்லு! மத்ததை நான் பாத்துக்கறேன்!” - கொஞ்சம் திமிறாகவே பேசினான் சூர்யா.

“அவாளுக்கு தஞ்சாவூர்ல திருவிடைமருதூர். அவளோட அப்பாவுக்கு. நிலங்கள் இருக்கு. விவசாயம் பண்றார். நாலு பொண்ணு... ரெண்டு பிள்ளைகள். இவள்தான் கடைசி. விஜியின் எட்டு வயசும்போதே அவ அம்மா போயிட்டா. அதனால்தான் இவ படிப்ப முடிச்சவுடனேயே கல்யாணம் பண்ணனும்னு பாக்கறா. ஆனா, இவளுக்கு இன்னும் படிச்சு பெரிய வேலைக்குப் போகணும்னு ஆசை. ஆனா அவா வீட்ல யாரோ ஒருத்தர் லவ் மேரேஜ். அதனாலத் தான் இவளுக்கும் சீக்கிரம் கல்யாணம் பண்ணனும்னு பாக்கறா. தஞ்சாவூர்ல காலேஜ் சரியா வரலைன்னு இங்க சேந்து படிக்கிறா! ..... ரெண்டு அக்காவும் அண்ணனும் சென்னைல இருக்கா.... அவா வீட்லதான் இவ மாறி மாறி இருக்கா.” - இவ்வளவுதான் எனக்குத் தெரியும். இதுக்கு மேல என்னை குடையாத!”

- "இட்ஸ் ஓகே. ஐ வில் ஹேண்டில் இட்" - சொல்லிய சூர்யா கொஞ்சம் சீரியாஸாக யோசித்தான்.

"ஏன்....உன் ஃப்ரண்ட் கண்ணனை, என் அண்ணனை ஹெல்ப் பண்ணச் சொல்லேன்! அவனுக்கு அதெல்லாம் பிடிக்காது. அதனால, நீ அவனைக் கேட்க மாட்ட.....! அவங்கிட்ட உனக்குப் பயம்!"

"உண்மையத்தான சொல்ற...! அவனோட தாட்ஸ்ஸே வேற......! அவனை நான் இன்வால்வ் பண்ண மாட்டேன். நான் பாத்துக்கிறேன். சரி, நான் கிளம்பறேன்..... கண்ணன் வந்தா குமார் வீட்டுக்கு வரச்சொல்லு!" சொல்லிக் கொண்டே வெளியே கிளம்பினான்.

தன்னுடைய படிப்பிலும், இன்ஸ்டிட்யூட் போவதிலும் பொறுப்பாக இருந்தான்.

அந்த நான்கு நாட்கள் போனது.

அடுத்த நாள் காலை விஜியும், லதாவும் காலேஜுக்கு போக ரெடி ஆனார்கள். விஜி லதா வீட்டு வாசலில் காத்துக் கொண்டிருந்தாள். சூர்யா வேண்டுமென்றே கண்ணனைப் பார்ப்பது போல வீட்டுக்கு வந்தான். விஜிக்கு ஹலோ சொல்லிவிட்டு, பார்க்காதது போல உள்ளே போக இருந்தான்.

தன்னைப் பார்க்கத்தான் வந்தான் எனத் தெரிந்ததும், விஜி மெதுவாக அவனைப் பார்த்து கிண்டலாக சிரித்தே விட்டாள். சூர்யாவுக்கு கொஞ்சம் வெட்கமாகப் போய்விட்டது.

கண்ணன் வீட்டில் இல்லை எனச் சொல்லிக் கொண்டே லதாவும் காலேஜுக்கு கிளம்ப வெளியே வந்தாள். சூர்யா அவளுடைய அம்மாவைப் பார்க்கப் போவதாக சொல்லி உள்ளே போனான்.

போனவன், அவர்கள் கிளம்பியதும், வேகமாக வெளியே வந்து தன்னுடைய சைக்கிளை எடுத்துக் கொண்டு வேறு வழியாக போய், மூலையில் இருந்த நாயர் கடையில் ஒரு சிகரெட்டை வாங்கி கொளுத்தினான். அந்த வழியாகத்தான் அவர்கள் போவார்கள். அந்த

சமயத்தில் சில நிமிஷங்கள் விஜியைப் பார்ப்பதில், அவள் கூடவே இருப்பது போல உணர்ந்தான் சூர்யா.

இந்த சின்ன விஷயங்கள் அவர்கள் இருவருக்கும் சில சந்தோஷங்களைக் கொடுத்தன.

ஒரு நாள், சூர்யா முடிவெடுத்தான். விஜியிடம் அவன் விரும்புவதைச் சொல்லத் தயாரானான்.

அடுத்த நாள் சனிக்கிழமை.

அன்று சாயங்காலம் லதாவும், விஜியும் ஆஞ்சனேயர் கோவிலுக்குப் போவதாக இருந்ததை லதாவின் பெரியப்பா மகளான நித்யாவின் மூலமாகத் தெரிந்து கொண்டான் சூர்யா.

மூவரும் கோவிலுக்கு போய்விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

எதிரில் தனியாக வந்த சூர்யாவை மற்றவர்கள் கவனித்தார்களோ இல்லையோ, விஜி பார்த்து விட்டாள். சற்று இடைவெளி அதிகமாகத்தான் இருந்தது.

'தன்னுடன் பேசத்தான் வருகிறான்' என்பதை தூரத்திலிருந்தே புரிந்து கொண்டாள். அவளுக்கு என்னமோ பிடிக்கவில்லை.

"க்ராஸ் பண்ணலாமா லதா?" - தெரியாதவள் போல் கேட்டாள். சொல்லிக் கொண்டே அந்த தெருவின் வலது பக்கத்திலிருந்து இடது பக்கத்துக்கு மாறினாள். மற்றவர்களும் அவளைத் தொடர்ந்தனர்.

சூர்யா கொஞ்சம் தடுமாறினான். இருந்தாலும் விடவில்லை. அவனும் பாதையின் பக்கத்தை மாற்றினான். அவர்களுக்கு எதிரே சென்றான்.

ஆச்சர்யத்துடன் அவனைப் பார்த்த லதா, "ஹே ... பீடி .....இங்க எங்க.....? கோவிலுக்கா...? நீ எப்படி இந்த நேரத்துல..?" - வெகுளியாகக் கேட்டாள் லதா.

நால்வரும் நின்றுவிட்டனர். லதா பேசிக்கொண்டிருக்கும்போதே, "விஜி, நான் உன்கிட்ட கொஞ்சம் பேசணும். இஸ் இட் ஓகே?" - தன்மையாகக் கேட்டான் சூர்யா. 'வாங்க, போங்க...' என்பதையெல்லாம் மாற்றி சற்று உரிமையோடு பேசினான்.

எதிர்பார்த்தாள் விஜி. இருந்தாலும் அவள் தயாராக இல்லை. பயத்தில் விஜியின் முகம் அந்த சாயங்கால கலராகவே மாறியது. கைகள் லேசாக நடுங்கின. தன்னையறியாமல் கண்கள் மூடியது. "நோ" என்பதுபோல தலையை ஆட்டினாள்.

அந்த கொஞ்ச மைக்ரோ செகண்டுகளில் இது எனக்குத் தேவையா என்று அவள் முடிவெடுத்தாள். இருந்தாலும், "ம்ம்ம், சொல்லுங்கோ சூர்யா...!" - என்று பரிபாஷையில் ஆரம்பித்த விஜி சற்று தள்ளி வந்து அந்த ப்ரைவேட் ஸ்பேஸை அவனுக்குக் கொடுத்தாள். அவள் இன்னும் மரியாதையாகத்தான் பேசினாள்.

அந்த இடத்தில் நேரத்தை வீணடிக்கவில்லை சூர்யா.

"உன்ன பார்த்ததுலேர்ந்து... எனக்கு உன்ன...... ரொம்ப பிடிச்சுது. நான் உன்னை கல்யாணம் பண்ணிக்கனும்ணு ஆசைப்படறேன். எவ்வளவு டைம் ஆனாலும் வெயிட் பண்றேன்." தைரியமாகச் சொல்லி முடித்தாலும், அவனுக்குள் இருந்த அழுத்தம் தெரிந்தது.

எதிர்பார்த்த சம்பவம் என்றாலும் அவன் பேசிய விதம் விஜிக்குப் பிடித்தது.

இருந்தாலும்.....

"ஹோஹ்ஹோ.....சூர்யா.....நான் உங்களோட அந்த மாதிரி பழகறேனா ...ன்னானு....தெரியல! அது..... இல்ல.... எனக்கு நீங்க ஒரு நல்ல ப்ரதராக் கூட நீங்க இருக்கலாமே ! அது வந்து.......நான்.....சொல்ல வர்றது.... என்னோட ஃபேமிலி...." என்று மென்னு முழுங்கினாள்.

"இல்ல விஜி. எனக்கு ஏற்கனவே லதா மாதிரி தங்கையும், வித்யான்னு ஒரு அக்காவும் இருக்கா! ஐ டோன்ட் வான்ட் அனெதர்

சிஸ்டர். நீ யோசிக்க நேரம் எடுத்துக்கோ. நாட் எ ப்ராப்ளம். ஆனா, நல்ல முடிவா எடு, ப்ளீஸ்....!" - இதைச் சொல்லும் போது சூர்யாவுக்கு சிறிது கூட நடுக்கமேயில்லை.

ஆனால் விஜி பயத்தில்தான் இருந்தாள். இருந்தாலும், அவனை "நான் நழுவ விடக் கூடாது" என்று விஜியின் உள்-மனம் சொல்லிக் கொண்டே இருந்தது. ஆனாலும் தன்னுடைய குடும்பச் சூழல் அவள் மனதில் வராமலில்லை.

அவள் விலகி விடுவாளோ என்ற பயம் இன்னும் சூர்யாவையும் ஆக்கிரமித்துக் கொண்டுதான் இருந்தது. அவனே அதற்கு ஒரு தீர்வைக் கொடுத்தான்.

"நீ என்னைப் பாத்து பேசக்கூட வேண்டாம். உன்னைப் பாத்தாலே புரிஞ்சுக்கிற அளவுக்கு ஒரு ஐடியா சொல்றேன். உனக்கு ஓகேன்னா, யோசனை பண்ணு!"

மௌனமாயிருந்தாள் விஜி. அவளுடைய மௌனத்தைச் சம்மதமாக எடுத்துக் கொண்டு.....

"ஓகே....நாளைக்கு சாயங்காலம் அன்னிக்கு நீ கட்டிண்டு வந்தயே; அந்த எல்லோ சாரி; அதை உன்னோட டெசிஷனுக்கு அடையாளமா இருக்கட்டும். நீ மஞ்சள் புடவைல வந்தா, நம்ம வாழ்க்கைக்கு நீயும் ரெடி! இல்லைன்னா.... அதுக்கப்புறம், நான் உன்னை டிஸ்டர்ப் பண்ண மாட்டேன். இதுதான், உங்கிட்ட பேசற கடைசிப் பேச்சு! ஐ மீன் இட்! - கொஞ்சம் கூட டென்ஷனாகாமல் தனக்குத் தோணியதை நேரடியாகச் சொன்னான்.

"இல்ல...நான் சொல்றது என்னன்னா.....!" தன் வீட்டுப் பாஷையில் பேச ஆரம்பித்தாள்.

அவளை மேலும் பேச விடாமல், "ஒண்ணும் அவசரமில்லை. நீ யோசனை செஞ்சுட்டு சொல்லு. ரொம்ப தேங்க்ஸ் விஜி.." - சொல்ல

வந்ததை பரபரவென்று சொல்லி முடித்து, அந்த இடத்திலிருந்து கிளம்பினான் சூர்யா.

விஜி அவன் பேசியதை லதாவிடமும், நித்யாவிடமும் சொன்னாள்

லதாவுக்கு சூர்யா தைரியமாக பேசியதில் ஏகப்பட்ட ஆச்சர்யம்; அவன் தைரியத்தையும், சொல்லவந்த விஷயத்தை நாகரீகமான முறையில் சொன்னதையும் ரசித்தாள்.

இன்னொரு பக்கத்தில் விஜியை பார்த்தாள். "நீ உன் வாழ்க்கைக்கு எது சரின்னு பாக்கறதுதான் உத்தமம். ப்ளீஸ் டேக் யுவர் டைம்...!" அவள் அட்வைஸை சொல்லத் தவறவில்லை.

இதையெல்லாம் பார்த்துக் கொண்டு இருந்த நித்யா வியந்து போனதோடு மட்டுமல்லாமல், பயந்தும் போனாள்.

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி.

மும்மூர்த்திகள் கண்ணன் வீட்டில் 12 மணிக்கு ஆஜர்.

"என்னடா.....நேத்து.....விஜிக்கு ப்ரபோஸ் பண்ணதா கேள்விப்பட்டேன். ஏன்?....சார் வந்து எங்க கிட்டயெல்லாம் சொல்ல மாட்டீரோ...." - நக்கலாக முணுமுணுத்தான் கண்ணன்.

"என்னடா சொல்ற....அப்படியா?" குமார் ஆச்சர்யமாகக் கேட்டான்

"ஆமாண்டா...அவனே சொல்லட்டும்.." - கண்ணன் மீண்டும் நக்கலாக சொன்னான்.

சூர்யா பேசினான்.

"யெஸ்....டா....! எனக்கு விஜியை பிடுச்சிருக்கு. இருந்தாலும் இதுக்கு அவ ஒத்துப்பாளான்னு தெரியல. எனக்கும் என்ன ஆகும்னும் தெரியல. நான் உங்கள யாரையும் இந்த ப்ராப்ளத்தில கொண்டுவர விரும்பல. இது பாசிடிவ்வா இருந்தா சொல்லலாம்னு இருந்தேன். சொல்லக்கூடாதுன்னு கிடையாது. தப்பா நினைச்சுக்காதீங்கடா !"

“தேவையில்லாத பிரச்சனையை கிளப்பறடா... அவ்வளவுதான் சொல்ல முடியும்” - குமார் சொல்லி முடித்தான்.

“எவடா அவ விஜி....! இவன் தேவையில்லாம வம்பை விலைக்கு வாங்கறாண்டா. பட்டாதாண்டா தெரியும் அவனுக்கு! படட்டும் விடு!” - வீட்டு பாஷையில் சொன்னான் கண்ணன்.

இந்த டாபிக் ஆரம்பித்தவுடன் அமைதியாக ஒரு பத்து நிமிஷம் அந்த டீ கடையில் உட்கார்ந்திருதார்கள். சூர்யாவும், குமாரும் ஒரு திருட்டு ‘தம்’ அடித்து விட்டுக் கிளம்பினார்கள்.

விஜியின் வருகைக்காக மத்தியானத்திலிருந்தே காத்துக் கொண்டிருந்தான் சூர்யா. மாலை மணி ஐந்து பத்து. குமார் வீட்டில் நண்பர்கள் 10 பேர் சேர்ந்து அண்டராம்ஸ் கிரிக்கெட் ஆடிக்கொண்டிருந்தார்கள். சூர்யா கிரிக்கெட் ஆடும்போது மற்றவைகளை மறந்து விடுவான். ஆனால் அன்று கிரிக்கெட்டை மறந்து விஜியை நினைத்துக்கொண்டே கனவுலகில் இருந்தான்.

அடிக்கடி தெருமுனையை மாறி மாறி பார்த்துக்கொண்டே இருந்தான். மஞ்சள் புடவையென்று சொன்னதால் கண்ணில் பட்டது எல்லாம் மஞ்சளாகவே தெரிந்தது.

எதிர்பார்த்ததுபோல் விஜி தெருவின் முனையில் திரும்பினாள். ஒருமுறைக்கு இரு முறை விஜிதானே என்று ஊர்ஜிதப்படுத்த கொஞ்சம் தலையை திருப்பிப் பார்த்தான்.

அவளேதான்! அதே மஞ்சள் புடவையில்!

ஆச்சர்யம், சந்தோஷம், திகைப்பு, உண்மை, அந்த ஐடியாவைக் கொடுத்த புத்திசாலித்தனம் - இவை அனைத்தும் ஒன்றாய் சேர்ந்து சூர்யாவை ஆட்டி வைத்தது.

பக்கத்தில் இருந்தவனிடம், “எனக்கு கொஞ்சம் வேலையிருக்கு. நான் அப்புறம் வர்றேன்!” என சொல்லிக்கொண்டே, தெருவின் பக்க சுவரிலிருந்து சைடாகக் குதித்து விஜியைப் பார்த்து ஓடினான். .

“என்னடா.... பாதியிலயே போற .....போடா...” என நண்பர்களில் ஒருவன் அலுத்துக்கொண்டான்.

குமாரும், கண்ணனும் பார்த்தும் பார்க்காததுபோல் இருந்தார்கள்.

விஜியின் கண்களும் அவனைத் தேடியது. சூர்யாவைத் தெருவில் பார்த்தவுடன் ஒரு பெருமூச்சு விட்டாள்.

இருவரும் தெரு முனையில் பார்த்துக் கொண்டார்கள். சில நிமிடங்கள் தான் பேசுவதற்குக் கிடைத்தது. யாராவது பார்த்துவிடுவார்களோ என்ற பயம் இருவருக்கும் இருந்தது. ஆனால் அதற்கும் மேலாக இரு மனங்களும் ஒத்துக் கொண்டதை நினைத்து சந்தோஷப் பட்டார்கள்.

என்ன பேசுவது என்று இருவருக்கும் தெரியவில்லை. “ரொம்ப தேங்க்ஸ் விஜி...என்னை நம்பினதுக்கு. எப்பவும் உன்னைக் கைவிட மாட்டேன்.” - மிகவும் உணர்ச்சி வசப்பட்டுச் சொன்னான் சூர்யா.

“ஹே.....என் மனசுக்கு இது சரின்னுப் பட்டுது. எனக்குப் பிடிச்சுது. ஐ யம் இன் லவ் வித் யூ! வேற என்ன வேணும்...நான் எடுக்கிற டெஸிஷன் கரெக்ட்ன்னு எனக்குத் தோணித்து! அவ்வளவுதான்....!” சிம்பிள் வார்த்தைகளில் முடித்தாள் விஜி.

அவளது தைரியத்தை பார்த்து அசந்து போனான் சூர்யா. அவளை அப்படியே கட்டிக் கொண்டு தன்னுடைய சந்தோஷத்தை தெரிவிக்க வேண்டும் போல தோணியது.

“ஸோ....வி ஆர் இன் லவ்......” -பெருமையோடு சொல்லி ஒரு அழகான புன்னகையால் அசத்தினான். விஜி பதில் பேசவில்லை. அவளும் புன்னகையிலேயே தலையை மேலும் கீழும் அசைத்தாள். அதில் வெட்கம் இருந்தது, ஆனால் அந்த நிமிடம் சூர்யாவுக்கு அது வெட்கமாகத் தெரியவில்லை. அவள் அழகாக சொன்னதை மட்டும்தான் அவன் ரசித்தான்.

அந்த சில நிமிடங்கள், அவர்களுக்கு எதிர்காலத்தைப் பற்றி யோசித்துப் பார்க்கத் தெரியவில்லை.

சரியோ, தவறோ - முன் பின் தெரியாத இலக்கை நோக்கி பயணத்தைத் தொடங்கினார்கள். விருப்பங்களை அவர்கள் மனதில் சுமந்த வரையில் பலத்தையும் பலவீனத்தையும் பற்றி யோசனை செய்யவில்லை.

'விஜி' அன்ற அந்தப் பெயர் உலகத்திலேயே அவனுக்கே சொந்தம் என்பது போல அவள் பெயரை ரசிக்க ஆரம்பித்தான். 'காதலில் இருப்பவர்களுக்கு கண்கள் தெரியாது. காதும் கேட்காது! வாய் மட்டும் பேசும்!' என்று உவமையோடு எழுதியவனும் சூர்யாதான்.

அந்த சந்திப்பிற்குப் பிறகு, சேர்ந்து வாழ்ந்துக் காட்டினால் போதும்' என்னும் சின்ன தத்துவத்தை மட்டும் வைத்துக் கொண்டார்கள். அதனால் தனியாகப் பேச இடமும் நேரமும், ஒதுக்கும் அளவிற்கு முனையவே இல்லை. தங்களைப் பற்றியும் தங்களுடைய குடும்பங்களைப் பற்றியும் தெரிந்து கொண்டார்கள். அவர்களைச் சுற்றி இருந்தது படிப்புதான். படிக்கும்போது கவனத்தை அதன் மீது மட்டும் வைத்தார்கள்.

காலேஜுக்குப் போகும்போதும், வரும்போதும் பார்த்துக் கொள்வார்கள். அவரவர்கள் வீட்டைக் கடக்கும்போதும் பார்த்துக்கொள்வார்கள். அவ்வளவுதான்!

மூன்று மாதங்கள் போனது.சூர்யாவின் அப்பா அடையாரில் ஒரு வீடு வாங்கினார். தி.நகர் வீட்டை காலி செய்யும் நேரம் வந்தது.

விஜியும் அவளுடைய தி.நகர் வீட்டிலிருந்து அசோக் நகரில் இருந்த இன்னொரு அக்கா வீட்டிற்கு மாறினாள்.

படிப்பு ஆண்டுகள் கடந்து, சூர்யா காலேஜை முடித்து சி.ஏ படிக்க ஆரம்பித்து ஒரு வருடம் தாண்டியது. விஜி காலேஜை முடிக்கும் காலம் வந்தது.

அந்த சமயம் வரை சூர்யா அடையாரிலிருந்து அசோக் நகருக்கு காலையில் சைக்கிளில் போய் பார்த்து விட்டு வருவது வழக்கம். டபுள்-டேங்க் ரோட்டுக்கு அருகே, அவர்களுக்கென்று ஆளே நிற்காத, ஒரு பழைய பஸ் ஸ்டாண்ட். அதில் 30 நிமிடங்கள் பேசுவார்கள். மழையானாலும், வெய்யிலானாலும் சைக்கிளில் 30 கிலோமீட்டருக்கும் மேலாக விஜிக்காக போய் வருவான் சூர்யா.

விஜியும், டைப்பிங் க்ளாஸ் சேர்ந்து அதை சாக்காக வைத்து வெளியில் வருவாள். அந்த சமயத்தில் ஒருவரைரொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பகுதி - 4 நிஜங்களின் தொடக்கம்

கல்லூரி படிப்பு முடிந்தது. வாழ்க்கைப் படிப்பு அவர்களுக்கு விரைவாக ஆரம்பமானது. பரம்பரை, அந்தஸ்து, பெற்றோர்களின் சட்டங்கள், மற்றும் இருந்த சோதனைகளால் நம்பிக்கைகள் ஆடத் தொடங்கின.

விஜி படிப்பு முடிந்தவுடனே, கல்யாணத்திற்கு பார்க்க ஆரம்பித்தார்கள். அவள் படிப்பைத் தொடற நினைத்தாள். நடக்கவில்லை. கொஞ்ச காலம் வேலையாவது செய்ய நினைத்தாள். வீட்டில் ஒப்புதல் கொடுக்கவில்லை.

ஆரம்பமானது ப்ரச்சனைகள்.

விஜியும், சூர்யாவும் என்ன செய்வதென்பதைப் பற்றி பேச அமைதியான இடத்தில் பேச நினைத்தார்கள். வள்ளுவர் கோட்டம் அமைதியான இடமாகப் பட்டது.

சூர்யா, கோட்டத்திற்கு எதிரே, சாலையில் காத்திருந்தான். விஜி தன்னுடைய தோழி மங்களாவுடன் வந்தாள். மங்களா தன்னை, அறிமுகம் செய்து கொண்டு உடனே போய் விட்டாள்.

சாலையைக் கடக்க நின்றார்கள். சூர்யா வாழ்க்கையில் முதன் முறையாக விஜியின் கையைப் பிடிப்பதற்காக நீட்டினான். முதலில் தயங்கிய விஜியின் விரல்கள், பின்னர் மயங்க ஆரம்பித்தன. விரல்கள் ஒவ்வொன்றாக இணைந்தன. பத்து விரல்களும் சேர்ந்த போது, இதயங்களும் படபடத்தன. இருவருக்கும் இருந்த முதன்முறை ஸ்பரிசம் கொஞ்ச நேரம்தான் இருந்தது. சாலையின் மறுபக்கம் வந்ததும் கைகளை விலக்கிக் கொண்டார்கள். அதில் விஜிக்கு கொஞ்சம் வருத்தம்தான்.

அந்தப் பிடி விஜிக்குப் பிடித்திருந்தது. 'என்னதான் இருந்தாலும், கைபிடிக்கப் போறவன் அவன் தானே' என்று நினைத்ததனால், கையைக் கொடுத்து விட்டாள்.

சூர்யா காதலை விண்ணப்பித்த முறையே அவளை அசத்தியது. அந்த உருவாக்கத்தில் அவனை தன்னுடைய 'சகோதரனாக்க' முயன்ற பங்கை நினைத்து, தானே சிரித்துக் கொள்வாள். ஆனால் 'இந்தப் பிடி' எப்போதும் நிலைக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டாள்.

இருவரும் சமூக நாகரீகத்துடன் சற்று இடைவெளி விட்டு அமர்ந்தார்கள். அவர்களுக்குள் காமம் தலைதூக்கவில்லை. காதல்தான் இருந்தது.

"எப்படி நம் வாழ்க்கையை ஆரம்பிக்கலாம்?" - என்ற கேள்வியுடன் தொடங்கினான் சூர்யா.

விஜிக்கு சிரிப்பு வந்தது.

"என்ன நீ....சமையலா பண்ணப் போற...? மெனு ப்ளான் மாதிரி இருக்கு...!" அவளுடைய பாஷையில் சொல்லி உரக்கச் சிரித்தாள்.

"நீ" என்று சொன்ன விஜியின் நெருக்கத்தை சூர்யா மிகவும் ரசித்தான். அவன் ரசித்ததை அவளும் கூர்ந்து பார்த்தாள்.

'நீ" ன்னு கூப்பிடறது பிடிக்கலையா?" என்று எதிலுமே படாத மாதிரி கேட்டாள்.

"இந்த உரிமை எனக்கு பிடிச்சிருக்கு விஜி" - சொல்லும் போதே ரசித்து சொன்ன விதம் விஜியை இன்னும் கவர்ந்தது.

விஜி சற்று சீரியஸாக அவர்களது வீட்டு பாஷையில் பேசத் தொடங்கினாள். "சூர்யா....நான் சொல்றதைக் கேளு. என்னுடைய அப்பாவுக்கு வயசாகிண்டே வருது. நான்தான் இப்போ என்னோட வீட்டில் பெரிய சுமை. என்னைத் தவிர எல்லா அக்காக்களும் அண்ணங்களும் செட்டில் ஆகியாச்சு. என்னோட கனவுகளையும் கற்பனைகளையும் யோசிக்கிற நிலைமையிலை யாரும் இல்லை. எனக்கு அம்மா இருந்திருந்தால் இந்த நிலை வந்திருக்குமா என்று அடிக்கடி நான் என்னையே கேள்வி கேட்டுப்பேன்." - சொன்னவளின் கண்களில் சட்டென்று வந்த கண்ணீரைப் பார்த்தான்.

“ஹேய்...என்ன இது....” - என சூர்யா சொல்வதற்குள், விஜி குறுக்கிட்டாள்.

“இதக் கேளு...டாபிக்கை டைவர்ட் பண்ணாதே. இவள் எப்படா படிப்ப முடிப்பா...எப்படா கல்யாணத்த....பண்ணலாம்னுதான் காத்துண்டுருக்கா. என் அண்ணன் என்னை ஊருக்குப் போகச்சொல்லி கட்டளையிட்டாச்சு. என் அக்காக்கு அவளுடைய ஆபீஸ், மாமியார், ஆத்துக்காரர், பொண்ணு வளர்ப்பு... இந்த மாதிரி சவால்கள். எனக்கு சென்னையில் இருக்க இடமில்லை. நான் உனக்காகத்தான் இருக்கேன். இதுக்கு மேல் முடியுமான்னு தெரியல சூர்யா. நான் வேலைக்கு போகறதுல வீட்ல யாருக்கும் இஷ்டமில்லை.” - என சொன்னவள், கண்ணாடியை அவிழ்த்து விட்டு துடைக்கலானாள்.

“உணர்ச்சி வசப்படாமல் இருக்கறதுதான் நமக்குள்ள இருக்கிற அற்புதமான விஷயம். நம்மகிட்ட இருக்கர்றது நிபந்தனையில்லாத ஒரு அன்புதான். எனக்கு ஒரு வாரம் டைம் கொடு. அதற்குள் எல்லாம் தெளிஞ்சிடும்.” - சூர்யா தன்னுடைய தன்னம்பிக்கையில் பேசினான்.

விஜி சூர்யாவை விடத் தெளிவாக இருந்தாள்.

“அவசரமே பட வேணாம். எல்லாருக்கும் சொல்லிட்டே கல்யாணம் பண்ணிக்கலாம். எனக்கு, இந்த ஓடிபோறதெல்லாம் சரியான முறைன்னு படலை. தானா, சிலது நடக்கும். அது எதுவோ, அந்த பாதையிலேயே போலாம்.” பொறுமையாக சொன்னாள் விஜி.

“நான் வேணும்னா, என் அப்பா, அம்மாவோட பேசட்டுமா?”

“இதோ பார் சூர்யா! நீ உன் அப்பா அம்மாவுக்கு ஒரே பிள்ளை. எனக்கு உன் அப்பா, அம்மாவைப் பத்தி தெரியும். நம்மளோட விஷயத்துல அவங்க எல்லாரையும் கஷ்டப்படுத்தறது நியாயமே இல்லை! நமக்குள் ஜாதிப் ப்ரச்சனை இல்லைன்னாலும், சோஷியல் ஐடெண்டிடி ஒரு பக்கமாத்தான் இருக்கும். அதுலேந்து வெளில வர்றது

அவ்வளவு சுலபமில்லை. அதை நம்ம ஃபேஸ் பண்ணித்தான் ஆகணும்."

"என்ன பண்ணனும்னு சொல்ற? நான் வேணும்னா உங்க அண்ணனை பாத்து பேசட்டுமா?" - நிஜமாகவே புரியாமல் கேட்டான்.

"வேணாம். நான் என் அண்ணங்கிட்ட பேசவேண்டிய டைம் வந்தாச்சு. இந்தக் கட்டத்தில் நான் உன்னை விட்டு தற்காலிகமாக பிரிய வேண்டிய நிலை வரலாம். இல்லை, உன்னை பார்க்க முடியாமலும் போகலாம். அந்த நிலைமை வேதனையானதுதான். அது எப்படி என்ன ஆகும்னு எனக்குத் தெரியல....! இதுக்காக நீ அப்செட் ஆகிடாத" - தன் மனதின் ஆழத்தை வெளியிட்டாள்.

சூர்யாவும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டான்.

"நாளைக்கு நீ நம்ம பஸ் ஸ்டாப்புக்கு காத்தால 8 மணிக்கு வந்துடு. அதுக்குள்ள நான் பேசிடறேன்." என்றாள் விஜி.

வேறு எதையோ பேசியபடி... வள்ளுவர் கோட்டத்தை விட்டு வெளியே வந்தார்கள். வீட்டை நோக்கி நடந்தார்கள்.

அடுத்த நாள் காலை. டபுள் ரோடு பஸ் ஸ்டாப். சூர்யா 7.30 க்கே ஆஜர். அன்று 12 மணி ஆகியும் விஜி வரவில்லை. இரண்டாம் நாள் காலை. அதே இடம். விஜி வரவில்லை. அதற்கு அடுத்த நாளும், அவள் வரவில்லை. இந்த மூணு நாட்களுக்குள் பேக்கட் பேக்கட்டாக் சிகரெட்டை ஊதித் தள்ளினான் சூர்யா.

நேராக லதாவிடம் ஓடினான். விஜியின் அண்ணன் வீட்டு அட்ரஸ் அவளுக்கும் தெரியாமல் போக, லதா மெதுவாக விஜியின் அக்கா வீட்டில் விசாரித்தாள். விஜி ஊருக்குப் போய் விட்டதாகச் சொன்னாள் விஜியின் அக்கா ஹேமா.

சூர்யாவுக்கு அது பொய்யெனப் பட்டது. இருக்குமிடம் தெரியாமல் போனது. அசோக் நகரில் அக்கா வீட்டிற்கு தெரிந்த நண்பனை வைத்து அவள் அங்கே இருக்கிறாளா என கண்டுபிடிக்கச் சொன்னான். அவள்

அங்கேயும் இல்லையெனத் தெரிந்தது. முடிவாக அண்ணன் வீட்டிற்குப் பேசப் போன விஜியை, அங்கேயே வைத்துக் கொண்டதாக யோசித்தான்.

விஜியைப் பார்ப்பது நின்றது. நொந்து போனான். என்ன செய்வதென்று தெரியாமல் வாழ்க்கையைத் தொலைத்தவன் போல் இருந்தான். குமாரிடமும், கண்ணனிடமும் கூட பேசுவதைக் குறைத்துக் கொண்டான்.

முடியும்போதெல்லாம் விடியும் என கண்ணதாசன் சொன்னது போல, ஒரு அதிசயமான செயல் நடந்தது.

ஐந்து நாட்கள் கடந்து வெள்ளிக்கிழமை வந்தது. இன்ஸ்டிட்யூட் நண்பர்களுடன் எதிரில் இருந்த டீ கடையில் பேசிக் கொண்டிருந்தான். வழக்கம் போல், சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தான்.

முள்ளின் மீது உட்கார்ந்து அந்த வலியிலும் ரோஜாவை ரசிப்பதுபோல மற்றவர்களுக்காக சகஜமாக இருப்பது போல நடித்துக் கொண்டிருந்தான்.

அவனை அதிகமாகத் தெரிந்த விக்னேஷ், நேரடியாகப் பேசினான். “ஏண்டா... ரொம்ப டல்லா இருக்க?”

““ஐயோ...அத...கேக்காதடா.......ரொம்ப நொந்து போயிருக்கேன் மச்சீ. செத்துடலாம்னு இருக்கு!” - என்றான் சூர்யா.

“லூசு...... சாகற அளவுக்கு என்னடா ப்ராப்ளம்.”

நடந்த முழுக் கதையை விக்னேஷிடம் சொன்னான் சூர்யா.

அப்போது அங்கு நடந்தது ஆச்சர்யமாக இருந்தது. உலகம் எவ்வளவு சிறியது என்பதற்கு கிடைத்த விடையா, இல்லை, கடவுள் இருக்கிறான், ஆனால் கண்ணுக்குத் தெரிவதில்லை என்கிற கூற்றா எனத் தெரியவில்லை.

“மச்சீ.....ஒரு நிமிஷம் ஸ்டாப்..... அவ பெயர் விஜயலக்ஷ்மியா? - என்றான்.

“ஆமாம்.” - இன்ஸ்டன்டாக பதில் சொன்னான் சூர்யா.

அவ அண்ணன் பேரையும் சொன்னான். வேலையைச் சொன்னான். மனைவியைப் பற்றியும் சொன்னான். வீட்டையும் சொன்னான். ஊரையும் சொன்னான். விஜி குடும்பத்தை பற்றி முக்கியமான விவரங்களைச் சொன்னான். விஜி அங்கேதான் இருப்பதாகவும் அக்கா மூலமாக தெரிந்த விஷயத்தையும் சொன்னான்.

“டேய்....அந்த ஃபேமிலிக்கு....நீ என்னடா....வேணும்....” என்று வாய் விட்டு கேட்டுவிட்டான் சூர்யா. முகத்திலே அளவுக்கில்லாத சிரிப்பு...பொது இடமென்று பார்க்கவில்லை...

“என் சிஸ்டரோட ஹஸ்பெண்ட்தான்டா அவளுடைய அண்ணன்!” என்றான் விக்னேஷ்..

கடவுள் எப்படி துணையிருப்பார் என்பதை சூர்யா அந்த இடத்தில் உணர்ந்தான். எதிரே இருந்த திருமலை தேவஸ்தானத்தின் வாயிலில் இருந்த பெருமாளை கைகூப்பி சேவித்தான்.

போன உயிர் வந்தது. அந்த சந்தோஷ நேரத்தை சூர்யாவுக்கு எப்படி அனுபவிப்பதென்றே தெரியவில்லை.

“எப்படிடா இது சாத்தியம். அங்க சுத்தி...இங்க சுத்தி.... எங்கெங்கேயோ சுத்தி....... இவ்வளவு சிம்பிளாக சொல்யூஷன் கொடுக்கிறானே....அந்தக் கடவுள் க்ரேட்.....” என்று வாய் விட்டுச் சொன்னான்.

“சரி..உனக்கு இப்போ என்ன ப்ராப்ளம்?” என்றான் விக்னேஷ்.

“முதல்ல எனக்கு அந்த அட்ரஸைக் கொடு. நீ அங்க எனக்காகப் போ. அவளைப் பாத்து நான் கொடுக்கற சீட்டைக் கொடுத்துடு. தட்ஸ் ஆல்.”

“அவ அங்க இருந்தான்னா, கொடுக்கிறேன்.”

“முதல்ல அட்ரஸை கொடு.” - என்றான் சூர்யா. அவனும் கொடுத்தான்.

விக்னேஷுக்கு தன் முதல் மரியாதையை செலுத்திவிட்டு, அவனை திங்கள் கிழமைப் பார்ப்பதாக சொல்லிவிட்டு அங்கிருந்து மனது நிறைவாக கிளம்பி வீட்டிற்குப் போனான்.

அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை. அன்று லீக் மேட்ச். மூன்று நண்பர்களும் விளையாடினார்கள். இந்த காதல் விவகாரத்தைப் பற்றி பேச்சு வரவில்லை.

மேட்ச் முடிந்தது. மாலை 6 மணி இருக்கும். “அம்மா....” என கூப்பிட்டுக்கொண்டே வீட்டிற்குள் நுழைந்தான் சூர்யா. ரொம்ப அமைதியான வீட்டு சூழ்நிலை. அப்நார்மலாக உணர்ந்தான். நார்மலாக ரேடியோவோ அல்லது டேப் ரிகார்டரோ ஏதாவது ஒன்று பாடிக் கொண்டுதான் இருக்கும். அம்மாவும் அப்பாவும் ரூமில் ஒவ்வொரு பக்கம் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

“ஏன்...என்னாச்சும்மா?” என்று அம்மாவைக் கேட்டான்.

“இன்னும் என்ன ஆகணும்.... உன்னால மானம் போச்சு....உன் கூட பேசறதே பாவம்..டா!” என்று சொல்லி விருட்டென்று எழுந்து ஹாலுக்குப் போனாள். ஆப்பாவிடம் பேச முயன்றான். முகத்தைக் கூட தன் பக்கம் திருப்பாமல் இருந்ததைப் பார்த்ததும், மறுபடியும் ஹாலுக்கு வந்து அம்மாவிடம் பேச விருப்பபட்டான்.

“என்னன்னு சொன்னாதானே தெரியும். சொல்லும்மா....! என்று கெஞ்சினான்.

“நான் சொல்றேண்டா.... அவளை ஏண்டா கேக்கற? வதச்சது போதாதா?...? - என்று கோபத்துடன் பேசிய அப்பாவைப் பார்த்ததும் தன்னுடைய விஷயம்தான் ஏதோ விஸ்வரூபம் எடுத்திருக்கிறது என்று புரிந்தது.

“உனக்கும் அந்த விஜிக்கும் எவ்வளவு வருஷம் பழக்கம்?” - இதுதான் அவரது முதற் கேள்வி.

“ஒரு வருஷம் இருக்கும்.” - தைரியமாகச் சொன்னான்.

“இனி நீ அவளை மறந்துடு.” - என்று சினிமாவில் வரும் அப்பாவைப் போல் சொன்னார்.

“முடியாதுப்பா” .

“டேய்... யாருகிட்ட என்ன எப்படிப் பேசறே?” என்று அம்மா கோபித்தாள்.

“என்ன அப்பான்னு கூப்பிடாத..... ராஸ்கல்.....” என்றார் விஸ்வநாதன்.

“ப்ராப்ளம் என்னன்னு சொல்லாமலேயே ரெண்டு பேரும் கோவிச்சுப் பேசுவதுல அர்த்தம் எதுவுமில்லை.” -என்றான் சூர்யா.

பேச்சு வலுத்தது....

“ஏவனோ ரெண்டு பேர் என் வீட்டுக்கு வந்து உன் கல்யாணத்தைப் பத்தி பேசுவாங்களாம்... நாங்க கேக்கணுமாம்....என்னடா நடக்குது இங்க.....” - கோபத்தில் இலக்கணங்களை எறிந்து விட்டுத்தான் பேசினார் விஸ்வநாதன்.

““.:.புல்லா நடந்தத சொல்லு....என்ன இழவு ஆச்சுன்னு..!.” - சூர்யா படபடப்பில் அவனுக்கே உண்டான பரிபாஷையில் பேசினான்.

“யாரோ விஜியாம்! நீ லவ் பண்றயாம்....! வந்த ஆளோட தங்கையாம். அவ அப்பாவுக்கு வயசாடுத்தாம். அதுக்குள்ள கல்யாணம் பண்ணனுமாம். அவங்களுக்கு லவ்வுல இஷ்டமில்லையாம். இருந்தாலும் நீ ஏதாவது பண்ணிப்பியோன்னு எங்கக் கிட்ட வந்து சொல்றாங்களாம்.” - மேலும் தொடர்ந்தார்.

“உனக்கு வேலையே இல்ல! கல்யாணம் கேக்கறதா ?...மானத்த வாங்கறயேடா! ...அந்த ஆளோட மச்சினனாம்...அவனும் வந்தான்.

என்ன....கழட்டற வேலை பாக்கறன்னு ... இப்போ....... என்னடா லவ்....... நம்ம குடும்பம் ...எப்படிப் பட்ட குடும்பம்..... பணக்கார ஃபேமிலிடா..... அதுவும் அந்த பொண்ணுக்கு...பிள்ளை நிச்சயம் பண்ண போறாளாம்..... இந்த காரணத்தால.... அவ கல்யாணம்.... தள்ளிப் போச்சுன்னா.... அவங்க குடும்பத்துல எல்லாருக்கும் கஷ்டமாம்..... ஏண்டா அந்தப் பொண்ணோட வாழ்க்கைய கெடுக்கற...... நீ இப்போ வெளிய போய் ...அந்த பொண்ண காப்பாத்த முடியுமா? சம்பாத்யமே இல்ல்யேடா உனக்கு....." - என்று சற்று மூச்சு விட்டார்.

சற்று அமைதியானார். "சூர்யா...நான் சொல்றத கேளு. அந்தப் பொண்ணை வாழவிடு. ஒன்னால.... இப்போ ஒண்ணும் பிடுங்க முடியாது..... தேவையில்லாம ஒரு புது ப்ரச்னைய கிளப்பாதே... படிக்கறது மட்டும்தான் உன்னோட கடமை .... அத விட்டுட்டு ஏதாவது ஏடாகூடம் பண்ணாத.....!"

உட்கார்ந்து இருந்த சூர்யா, விருட்டென்று எழுந்தான்.

'உனக்கு என்ன ஜாதிப் ப்ரச்னையா? பணப் ப்ரச்னையா? இல்ல, அந்தஸ்துப் ப்ரச்னையா? அவனுங்க யாரோ எவனோ சொல்றதை வச்சுப் பேசாத. எனக்கு விஜியைப் பிடிச்சிருக்கு. அவளுக்கு எல்லாத் தகுதியும் இருக்கு. இப்போ நானோ, இல்ல அவளோ .... யாரும் கல்யாணத்துக்கு அலையல.. அதுக்குன்னு ஒரு நேரம் வரும். அது வரைக்கும் வெயிட் பண்ணுவோம்." சற்று சாந்தமானான்.

"நீ... அவளை ஒரு தரம் பாரு ... பேசவும் பேசு....அப்புறமா முடிவ எடு.... நான் எல்லோருக்கும் நல்லது பண்ணனும்னுதான் நினைப்பேன்.... ரொம்ப சாரி... இதுல நான் என் முடிவ...மாத்தறாமாதிரி இல்ல...." - என்று கோபத்தில் அப்பனுக்கு தப்பாமல் இருந்த பிள்ளையாகப் பேசினான்.

"அப்போ, இப்போவே வீட்ட விட்டு வெளியே போடா..." என்று சீறீனார் விஸ்வநாதன்.

“ரெண்டு பேரும் அவசரப் படாதேள். நிதானிச்சு பேசுங்கோ....” - என்றாள் நீளா.

“டேய்...சூர்யா... நீ இப்படி இருக்கணுங்கற காரணுத்துக்காக உன்ன பெத்து வளர்க்கலடா...! அப்பாவையே எதிர்த்து பேசற அளவுக்கு நீ துணிஞ்சுட்டன்னா, அந்தப் பொண்ணு மேல உனக்கிருக்கிற பைத்தியம் தான். நமக்குன்னு, நம்ம குடும்பத்துக்குன்னு ஒரு தரம் இருக்கு. அதுக்கு ஏத்தா மாதிரித்தான் நாம் வாழணும். நீ... பிச்சக்காரனா... சுத்தறதை... நாங்க பாக்கணுமா? வாழ்க்கைங்கர்றது ரொம்ப கஷ்டம். நிறைய அட்ஜெஸ்ட் பண்ணும்படியா இருக்கும். இந்த சின்ன வயசுல எல்லாம்...நல்லாத்தான் தெரியும். உலகமே உன் கையில இருக்கிறா மாதிரிதான் இருக்கும். அவா பேசின பேச்செல்லாம் பார்த்தா, அந்த பொண்ணுக்கு ஒரு நல்ல வேளை வந்து நடந்துண்டுருக்கு ! அதைக் கெடுக்காதடா.... ! அவாளுக்கு ஏதோ கஷ்டமாம்... வந்த ரெண்டு பேரும் சொன்னா.... நாங்க பேசினா, அவ சரியா ஆகிடுவா..... ஆனா... உங்க பையன் ... ஏதாவது ப்ரச்னைகளப் பண்ணா, நாங்க என்ன பண்ணுவோம்னு கேட்டா..! அம்மா சொல்றத கேளு சூர்யா..... போதும் ....அந்த பொண்ணு நல்லாயிருக்கட்டும் ...... இதையெல்லாம் விட்டு வெளியே வாடா...!” என்று அவர்களுடைய பரிபாஷையிலேயே பொரிந்து தள்ளினாள் அம்மா.

“ரொம்ப சாரிம்மா...! நீங்க அவளை கூப்பிட்டு அவக்கூட பேசறதா இருந்தா, நான் இந்த வீட்ல இருக்கேன். இல்ல, இப்போவே வெளில போறேன். எனக்கு எப்படி அப்பன் துட்டு இல்லாம பொழைக்கணும்னு தெரியும். இவருக்கு சம்பாதிக்க தெரிஞ்சா மாதிரி எனக்கும் தெரியாதா?” என்று இளமையின் துடிப்பில் சூர்யா கடுங்கோபத்தில் வார்த்தைகளை உமிழ்ந்தான்.

“வெளில போடா...ராஸ்கல்....பேசறான் பேச்சு ...என்ன சொல்ல வர்றோம்னு புரிஞ்சிக்காம பேசிண்டுருக்கே.... நாங்க அந்த பொண்ண பாக்கணுமாம், இல்லைன்னா, சார் எங்கள மிரட்டுவாராம் .... போடா ...

நான் பார்த்து வளர்ந்த கழுதை ....நீ... வெளில போடா....." - என்று மிகுந்த கோபத்தில் பேசினார் விஸ்வநாதன்.

விருட்டென்று உள்ளே போனான் சூர்யா. கிரிக்கெட் ட்ரஸ்ஸை கழட்டினான். வேறு உடைகளை மாற்றிக் கொண்டான். தன்னுடைய சர்டிஃப்பிகேட்டுகளை எடுத்துக் கொண்டான். வெளியே கிளம்பத் தயாரானான்.

ஒருமுறை செய்வது சரியா என்பதை யோசித்தான். 'நான் கடைசிவரை கூட வருவேன்' என்று விஜிக்கு கொடுத்த நம்பிக்கைக்காக வீட்டை விட்டு வெளியேறினான்.

அம்மா தடுத்தாள். கையை மட்டும் கொடுத்துவிட்டு, "உன்னை வந்து பார்க்கிறேம்மா" என்று மிகுந்த கனிவோடு சொல்லி விட்டு புறப்பட்டான்.

எங்கே போவது .என்று யோசித்தான். கண்ணன் குமார் வீடுகளுக்குப் போக முடியாது. அடையாருக்கு வீடு மாற்றிப் போனபின் நண்பனான பாலாஜி. பிரின்டிங்க் ப்ரெஸ் வைத்திருந்தான். திருவான்மியூரின் கடைசியில், அது ஒரு வீடு போல இருந்தது. அங்கு தஞ்சமானான். அங்கு தங்கியதை அங்கிருக்கும் சில நண்பர்களைத் தவிர குமார், கண்ணன் உட்பட யாருக்கும் தெரியப் படுத்தவில்லை.

விஜியைப் பார்த்தால் ஒரு வேலையோடுதான் பார்க்க வேண்டுமென்று உறுதியாக இருந்தான்.

அடுத்த நாள் திங்கட்கிழமை. விக்னேஷைப் பார்த்து பேச வேண்டிய நாள். இன்ஸ்டிடுட்டுக்கு சென்று விக்னேஷைப் பார்த்தான்.

"சூர்யா...அவ அங்கதான் இருக்கா. போனில் தான் அக்காவுடன் பேசிக் கண்டு பிடிச்சேன். ஆனால் என்னால் நேரா போக முடியவில்லை. அதனால், நீ எழுதிய சீட்டைக் கொடுக்க முடியவில்லை. ரொம்ப ஸாரிடா..." என்றான் விக்னேஷ்.

“சரிடா.. நோ ப்ராப்ளம்ஸ். நான் பார்த்துக்கறேன்” எனச் சொல்லி, விக்னேஷுக்கு ஒரு நன்றி சொல்லிவிட்டு திருவான்மியூருக்குத் திரும்பினான்.

ஒரு வாரத்திற்குப் பிறகு, விஜியின் அண்ணன் வீட்டிற்கு தைரியமாகப் போய் பேசினான்.

“சார், என் பேர் சூர்யா! உங்க தங்கை விஜியை நான் என்னோட உயிரைப் போல பத்திரமா வெச்சுக் காப்பாத்தறேன் சார்! என்னோட பொறுப்பு சார்! நீங்க சரின்னு சொல்றது, எங்க ரெண்டு பேருக்குமே உயிர் கொடுத்தா மாதிரி இருக்கும் சார்! ப்ளீஸ்...”

“இதோ பாரு தம்பி! நீ நல்ல பையன்னு என் தங்கை சொல்லவே தான் நான் உங்க வீட்டுக்கு வந்தேன். ஆனா, உங்கப்பா பேசினதைப் பாத்தா என் தங்கை, அந்த வீட்ல நல்லாயிருப்பான்னு எனக்கு சந்தேகமா போச்சு! நான் தரை மட்டத்துலேந்து பேசினாலும், உங்கப்பா வானத்துலேந்துதான் பேசினார். இப்போ, நான் உன்னை சந்திக்கறதே, எங்களுக்கு ஆபத்தா போயிடும்! நீ கிளம்புப்பா!” அமைதியாகப் பேசினான் விஜியின் அண்ணன்.

விஜியைப் பார்க்கவேண்டும் என்று கேட்டான் சூர்யா.

“தோ பாருப்பா! அவளோட கல்யாணம் ஃபிக்ஸ் ஆயிடுத்து. அவளும் அதுக்கு சம்மதம் கொடுத்துட்டா. நீ தயவுசெய்து கிளம்பு.” கொஞ்சம் கோபத்தைக் கலந்து பேசினான்.

சூர்யா விடவில்லை. “சார், அதை நீங்க சொல்லவேணாம் சார். அவ சொல்லட்டும்! எங்கிட்ட சொல்லட்டும்! நான் போயிடறேன்.”.

“என்ன...உங்கப்பனை மாதிரி முறைக்கிறயா? முடியாதுன்னு சொன்னா என்னடா பண்ணுவ....” பேச்சு வலுத்தது.

“சார், இப்படி பேசதற்குப் பதிலா, அவளைக் கேட்க எனக்கு ஒரு சான்ஸ் கொடுங்க சார்.” இறங்கி வந்து பேசினான் சூர்யா.

விஜியைக் கூப்பிட்டான் அவளுடைய அண்ணன். அவனது மனைவியும் இருந்தாள். இருவரும் சற்று தள்ளி நின்றார்கள்.

“விஜி........” என்று சூர்யா கூப்பிட்டவுடன், விஜியின் உடம்பு நடுங்கியது. மௌனமாக தலையைக் குனிந்தபடியே நின்றாள். அவனைப் பார்ப்பதில் பயம் இருந்தது.

“விஜி, நீ இந்த கல்யாணதுக்கு ஒத்துண்டையா?” என்று அவர்களுடைய பரிபாஷையில் சற்று சத்தமாகவே கேட்டான் சூர்யா.

‘ஆமாம்’ என்பதுபோல் தலையை ஆட்டினாள்”.

“வற்புறுத்தினாங்களா?” பதில் வரவில்லை.

“சொல்லு விஜி...” கொஞ்சம் அமைதியாகக் கேட்டான்.

“இல்லை.....” - பயத்தில் வாய் வெளுத்தது. உதடுகள் காய்ந்தன.

“உங்க வீட்டில் உன் அப்பா ஒத்துக்கலையாம். அதனால.......” சற்று தயங்கினாள் விஜி.

“அதனால....?” சற்று அதட்டினான் சூர்யா.

மேலும் தொடர்ந்தாள்,

“உங்கப்பா சொன்னாராம்... நீங்கள் தைரியமாக கல்யாணத்தை நடத்துங்கள். வி ஆர் பேவிங் த வே ஃபார் யுவர் ஸிஸ்டர்ஸ் மேரேஜ்ன்னு சொன்னாராம்.” - மௌனமாகித் தொடர்ந்தாள்.

“அதனால் தான் சூர்யா...நான் இந்த முடிவுக்கு.....” பேச்சை நிறுத்திக் கொண்டாள்.

விஜியின் கைகள் நடுங்கியதைப் பார்த்தான். முகம் தொங்கிக் கிடந்தது. கண்ணீரில் இருந்தவள் தன்னை மறந்தாள். கண்ணீர் அவளின் மேலாடையை நனைத்தது. உலர்ந்த உதடுகளை நாக்கு அவளையறியாமலேயே அவ்வப்போது துடைத்து விட்டுக் கொண்டிருந்தது. கண்கள் சுருங்கியிருந்தது. உடம்பு சூடாகியது.

பயத்தில் வந்து கொண்டிருந்த ஸ்வாஸம் சூடாக இருந்தது. அவள் சூர்யாவைப் பார்க்கலானாள். ஆனால் அவளது கண்ணீர் அவனை மங்கலாக்கியது.

சூர்யாவுக்கு அவளைப் பார்க்க பாவமாக இருந்தது.

"போதுமா ....இப்போ நீ கிளம்பலாம்" அண்ணன் சற்று அதிகாரத்துடனே சொன்னான்.

சட்டென்று, கையிலிருந்த சீட்டை அண்ணனுக்குத் தெரியாமல் விஜியிடம் கொடுத்தான். பதிலுக்கு சொல்லி வைத்தார்போல் விஜியும் அவனிடம் ஒரு சீட்டைக் கொடுத்தாள். சில வினாடிகளில் இருவரும் மனதால் எழுதியவைகளை மாற்றிக் கொண்டார்கள்.

மெதுவான குரலில் சொன்னான் சூர்யா.

"எதுக்கும் கவலைப் படாதே. நீ என்னோட வாழறது நிச்சயம். நம்பிக்கையோடு இரு!"

பேசியதைக் விஜியின் அண்ணன் கேட்டு விட்டு சூர்யாவின் தோளை அன்பாகப் பிடித்துச் சொன்னான்.

"உங்க ரெண்டு பேரையும் பார்த்தா... பாவமாத்தான் இருக்கு. ஆனா என்னால இதுக்கு மேல எதுவும் செய்ய முடியாது. எனக்கு சம்மதமா இருந்தாலும். உங்கப்பா பேசின பேச்சுதான் உங்க உறவுக்குத் தடையின்னு தெரிஞ்சா போதும்."

"அதில்லை சார்...!" தயங்கி நின்றான் சூர்யா.

"உங்கப்பா சொல்றதும் தப்பியில்லையேப்பா! உனக்கு வேலை கிடைக்க நாலு அஞ்சு வருஷங்கள் ஆகலாம். அது வரைக்கும் விஜிக்கு கல்யாணம் செய்யாம இருக்கறது, எங்க குடும்பத்துல இருக்கிற ஒரு ப்ராப்ளம். நீ கிளம்பி, உன்னோட வாழ்க்கையைப் பாருப்பா!"

அமைதியாகப் பேசி சூர்யாவை அப்போது அனுப்பினான்.

வெளியே வந்து விஜி கொடுத்த சீட்டைப் பார்த்தான். "என்ன எப்படியாவது கூட்டிண்டு போ. நீ இல்லன்னா நான் செத்துடுவேன்." என்று கிறுக்கலாக எழுதியிருந்தது.

சூர்யா மனசு உடைந்து போனான்.

சிகரெட்டைக் கொளுத்தினான்.

விஜி வேண்டுமென்றால் ஒரு வேலை வேண்டுமென்று முடிவு செய்தான். சி.ஏ படிப்பை விட்டான். வேலையைத் தேடினான்.

இரண்டு மாதங்கள் ஆனது. விஜியைப் பார்க்கவில்லை.

ஒரு நல்ல வேலை கிடைத்தது. குடிசை வீட்டில் வாழ்ந்தாலும், குறையில்லாத குடும்பம் நடத்தலாமென நினைத்தான்.

விஜியிடம் இருந்த நம்பிக்கையை சூர்யா இழக்கவில்லை. வேலை கிடைத்ததும், அவள் அண்ணனை மறுபடியும் சந்தித்தான். அங்கே சில உறவுக்காரர்களும் இருந்தார்கள். தெரு முனைக்கு கூட்டிக் கொண்டு வந்து அங்கு பேசினார்கள்.

தனக்கு வேலை கிடைத்ததை சொன்னான். இருந்தாலும், விஜியின் அண்ணன் ஏதோ காரணத்தால் சூர்யாவை, அங்கிருந்து விரட்டினான்.

சூர்யா ஏதோ கோபத்தில் பேச, விஜியின் அண்ணன் சூர்யாவை தள்ளிவிட்டான். அந்த காம்பௌண்ட் சுவரில் சூர்யாவின் முகம் பட்டு முகத்தில் ரத்தம் கொட்டத் தொடங்கியது. அந்த உறவுக்காரர்களில் ஒருத்தன் சூர்யாவை, முகத்திலேயே ஓங்கி அறைந்தான். அவர்கள் அவனை அந்த இடத்திலிருந்து போக வைக்க முனைந்தார்கள்.

அதற்கு மேல் அந்த இடம் பாதுகாப்பாகப் படவில்லை. ஆனால் அதில் ஏதோ உள் அர்த்தம் இருந்ததை சூர்யா உணர்ந்து அங்கிருந்து கிளம்பினான்.

இன்னும் நான்கு நாட்கள் போனது.

சூர்யா அந்த வார புதன்கிழமை வேலைக்குச் சேர்ந்தான். அந்த வாரத்தை ஒட்டி, திங்கள்கிழமை குமார், கண்ணன், மற்றும் லதாவைப் பார்த்து நடந்ததைச் சொல்ல அவள் வீட்டுக்குப் போனான். வீட்டில் லதா மட்டும்தான் இருந்தாள். வாங்கி வந்த சாக்லேட்டுக்களை அவளிடம் கொடுத்தான்.

"என்னடா ஆச்சு?. முகத்துல காயம்!" அன்போடு கேட்டாள் லதா.

"ஒன்றுமில்லை" என்று சொல்லிவிட்டு, நடந்ததைச் சொன்னான். அவனுக்கு வேலை கிடைத்ததையும் சொல்லி, விஜியைக் கூப்பிட்டு வரப் போறதாகவும் கொஞ்சம் அதிகாரத்தோடுதான் சொன்னான்.

லதா ஏதும் பேசாமல் மௌனமாக இருந்தாள்.

மெதுவாக் நடந்து வந்த இருவரும், வீட்டு வாசலில் இருந்த பென்ச்சில் உட்கார்ந்தார்கள்.

"சூர்யா....நேத்தே...அவள் மேரேஜ் முடிஞ்சு போச்சு....." சோகத்தோடு லதா சொன்னாள்.

"ஹே.....ஹே....என்ன....என்ன சொ..ல்..ற.......லதா..... நிஜமாவா? யூ மீன் சண்டே.....நேத்தைக்கு...3ம் தேதி......சீரியஸ்லீ....! ஹே.....ஹே .... சும்மா .... சொல்லாத ...... திஸ் இஸ் நாட் த டைம்.... ரியலாத்தான் சொல்றயா? விளையாடதே..."

லதா மௌனமானாள். சூர்யாவின் ஏமாற்றத்தை அவளுக்குப் பார்க்க சகிக்கவில்லை. கவலையாக இருந்தவள், தலையை மட்டும் ஆட்டி 'ஆமாம்' என்பதாக சைகை செய்தாள்.

ஒரு சிகரெட்டை கொளுத்தினான்.

"கேம் ஓவர்! 'விஜிதான் என்னுயிர்' னு சொல்வேன் ....அவ இனி என்னோடயில்லை ..... நடுவுல .... வந்தா ... நடுவுலேயே போய்ட்டா." மீண்டும் மெல்லிய குரலில் தன்னுடைய துக்கத்தை காட்டாதவாறு பேசினான்.

லதா அவனை அப்படிப் பார்த்ததில்லை; இப்போது அந்த கோலத்தில் அப்படிப் பார்க்க பிடிக்கவில்லை.

சடாரென்று........ தனிமையை விரும்பினான்.

“லதா...என்ன மன்னிச்சுடு.... நான் போகணும்...தனியா இருக்கணும்னு தோண்றது. என்ன பத்தி கவலைப் படாதே..நான் அவளை நினச்சுண்டே.... காலத்த ஓட்டிடுவேன்.

இன்னொரு சிகரெட்டை கொளுத்தினான்.

“டேய்...ரொம்ப சிகரெட் பிடிக்கறடா....ஜாக்ரதைடா....எனக்கு என்னமோ ..... பயமா இருக்கு .... இன்னைக்கு...எங்க வீட்டில தங்கிட்டு நாளைக்கு போ...” பதறினாள் லதா.

“இல்லை. நான் போகணும். குமார், கண்ணன் கிட்ட சொல்லிடு... கொஞ்ச நாளைக்கப்புறம் பார்க்கறேன்....” சொல்லிக் கிளம்பினான் சூர்யா.

இரண்டு வாரங்களில் நண்பன் வீட்டை காலி செய்து விட்டு வீட்டிற்கே போய் விட்டான். ஆனால், எவரோடும் பேசுவதை குறைத்துக் கொண்டான், அந்த மூன்று நண்பர்களைத் தவிர!

ஒரு மாதம் ஆனது. விஜியின் அக்கா வீட்டிற்கு போனான். விஜியின் சின்ன போட்டோ ஒன்றை பத்திரமாக வைத்திருந்த சூர்யா, அதை அவள் அக்காவிடம் திருப்பிக் கொடுத்தான். “அவளே என்னை வேணாம்னு சொன்னப்புறம், அவ ஃபோட்டோ எனக்கெதுக்கு!” என சொல்லி கோபத்தில் திருப்பி கொடுத்துவிட்டு திரும்பிப் பார்க்காமல் வந்துவிட்டான்.

மாதங்கள் கடந்து போயின.

அவக் எங்கேயோ வடநாட்டில் இருப்பதாகக் கேள்விப் பட்டான்.

‘விஜியை எப்படியாவது ஒருமுறை பார்க்க வேண்டும்’ என நினைத்தான்.

அவள் எங்கோ இருப்பதை அறிந்து, சூர்யா அவளைப் பார்க்க குமாரை கூட்டிக்கொண்டு ஒருபுறம் அலைந்தான். நண்பனுக்காக குமாரும், அவனோடு போனான். முடிவில், இருக்குமிடம் தெரியாமல் போனது.

"நான் அவளை தேடறது சரிதானா? என்னோட விஜி இப்போ வேற ஒருத்தனோட மனைவி. நான் தலையிட்டா அவளோட வாழ்க்கையில போராட்டங்கள் வரும்! தேவைதானா...?" - இதை அடிக்கடி யோசிப்பான். குமாரும் அதையே அடிக்கடி அவனுக்குச் சொன்னான்.

ஆனால் தன் வாழ்நாளில் இன்னொரு முறை அவளைப் பார்ப்போமென்ற ஒரு நம்பிக்கை இருந்தது..

விஜியின் நினைவுகள், அவனுடைய வலிகளுக்கு மருந்து போட்டுக் கொண்டிருந்தன.

பகுதி - 5 வளர்ந்த முதிர்ச்சி

விஜி - சூர்யா பிரிவுக்குப் பிறகு சுமார் 25 வருடங்கள் போனது.

48 வயதைக்கடந்து கொண்டிருந்த சூர்யா இன்னும் சுருசுருப்பாக உலகமெங்கும் ஓடிக் கொண்டிருந்தான். ஆனாலும், பழைய வலிகளை நிரந்தர வடுகளாகப் பழக்கிக் கொண்டான். கல்யாணம் செய்து கொள்ளவில்லை. குமார், கண்ணன், லதா - அதே ஃப்ரெண்ட்ஸ், அவங்க குடும்பங்கள்லதான் சூர்யாவோட குடும்பமா இருந்தது.

அம்மா நீளா போனப்பிறகு, அப்பா விஸ்வநாதன், வித்யா அக்காவோடு லண்டனில் செட்டில் ஆகி விட்டார். அவர்களையும் பார்த்து விட்டு வருவான்.

குமாருக்கு கல்யாணமாகி மலேஷியாவில் இருந்தான். அவன் படித்த படிப்புக்கும், டெக்னிகல் மூளைக்கும் ஐ.டி இண்டஸ்ட்ரியில் மிகப் ப்ரபலமானவனாக இருந்தான். சித்ரா குமாரின் மனைவி. அமைதி, அடக்கம், மரியாதை - இவற்றையெல்லாம் ஒன்று சேர்த்த ஒரு நல்ல பெண். ப்ரியங்கா, குமாரின் ஒரே மகள். குமாரைப் போலவே சரியான 'படிப்பிஸ்ட்'. சூர்யாவுக்கு மிகவும் பிடித்தவள். சூர்யாதான் அவளது படிப்புக்குப் பொறுப்பை ஏற்றுக் கொண்டான். பணத்துக்காக இல்லை. பாசத்துக்காக! குமாருக்கு செய்யும் ப்ரதிபலனாக எடுத்துக் கொண்டான்.

கண்ணன் பெரிய ரியல் எஸ்டேட் ப்ராபர்டி டெவலப்மென்ட் கம்பெனி வைத்து நடத்திக் கொண்டிருந்தான். அதே குணம். அதே பிள்ளையார் கோயில். அதே கிரிக்கெட். இன்றும் பழைய கிரிக்கெட் ரிகார்ட்ஸை துல்லியமாக சொன்ன ஒரு கிரிக்கெட் வெறியன். வாழ்க்கையின் ரியாலிடியைப் பார்த்தே காய்களை நகத்தியவன். எந்த ரிஸ்க்கும் எடுக்காமல் அமைதியான வாழ்க்கை. அவனுக்கேத்த மனைவி விமலா. அவன் சாமியாராகி விடுவானோ என்ற

பயத்திலேயே, அவனை கட்டாயப் படுத்தி லௌகீக வாழ்க்கைக்கு கொண்டு வருவாள். அவள் அழகாக வளர்த்த 'பத்ரி' ஒரே பிள்ளை. அப்பா மாதிரி கிரிக்கெட் ப்ளேயர். கிரிக்கெட் பைத்தியம்.

லதா கவர்ன்மென்ட் வேலையில் இருந்தாள். சூர்யாவிடம் என்றைக்கும் ஆசையாக இருந்தவள். வாரம் நான்கு தடவையாவது போன் பண்ணி விடுவாள். சூர்யா பேசவில்லையென்றால், உரிமையோடு சண்டை போடுவாள். மோகன் அவளது வீட்டுக்காரர். ஐ.ஐ.டி யில் ப்ரொஃபஸராக இருந்தான். இருந்தாலும் லதா எடுக்கும் முடிவுகளில்தான் குடும்பம் நகர்ந்தது. மூத்த பையன் ஜெயந்த், அவனுடைய அப்பா மாதிரி வாய் பேசாமல், யாரையும் குறை சொல்லாமல் இருந்த ஒரு நல்ல பையன். இரண்டாவது பெண், சஞ்சனா. செல்லமான வாயாடிப் பெண். மனதில் பட்டதை நேராகக் கேட்கும் ஒரு குட்டி லதா. அவளை, 'குட்டிப் பாட்டி' என சூர்யா செல்லமாக கூப்பிடுவது வழக்கம்.

சூர்யா இன்று வியெஸ் கம்பெனிகளின் க்ரூப் சேர்மேன். இன்று இந்தியாவில் இருக்கும் ஒரு முக்கியமான தொழிலதிபராக இருந்தான் சூர்யா. இருபது வருடங்களில் பதினைந்து கம்பெனிகளுக்குச் சொந்தக்காரன். முக்கியமாக, உலகமெங்கும் ஆரம்பிக்கப்பட்ட ஐந்து ஐ.டி நிறுவனங்கள், ரிஸர்ச் அமைப்புக்கள், டெக்னிகல் ட்ரெயினிங் இன்ஸ்டிட்யூட்ஸ், அனாதை ஆஸ்ரமங்கள், முதியோர் இல்லங்கள், என மிகப்பெரியவனாக வளர்ந்து நின்றான் ஆயிரக் கணக்காண பேர் அவனது க்ரூப்பில் வேலை செய்தார்கள்.

சூர்யா என்கிற சாதாரண மனிதன், தன்னுடைய தோல்வியை மூலதனமாக வைத்து சாதனையாக மாற்றினான். புத்திசாலித் தனமாக பிஸினெஸ்ஸில் ஈடுபட்டான். பணத்தை சம்பாதிக்கையில் லாபத்தையும் நஷ்டத்தையும் பார்த்தான். நிறைய பேருக்கு வேலை கொடுத்தான். பொது அறிவையும், பிஸினெஸ் அறிவையும் அதிகமாக வளர்த்துக் கொண்டான். முழுநேர கவனத்தையும் பிஸினெஸில்

போட்டான். புதிய டெக்னாலஜிகளை ஊக்குவித்தான். அவைகளில் நிறைய பணத்தை முதலீடு செய்தான். பெரிய உலகத்தைப் பார்க்கத் தயாரானான்.

அவனை மனிதனாக்கியது, நண்பன் குமார்தான். லதாவின் பங்கீடும் ஆறுதலாக இருந்தது.

வியெஸ் க்ரூப்பில் சூர்யாவுக்கு அடுத்து மதிக்கத் தக்கவர் 'பாலு சார்'. எல்லோரும், அவரை 'பாலு சார்' என அழைக்க ஆரம்பித்ததால், அது அவருடைய பேராகவே மாறியது.

இவர்களோடு, அர்ஜுனனுக்கு கண்ணன் கூட இருந்தது போல் சேர்ந்தவர், பாலகிருஷ்ணன் என்கிற "பாலு சார்". சூர்யாவை விட 10 வயது மூத்தவர். முதன்முதலாக சூர்யா பிஸினெஸ் தொடங்கியபோது கூட இருந்தவர். இன்பத்திலும், துன்பத்திலும் சிரித்துக் கொண்டே சூர்யாவை புகழின் உச்சிக்கு கூட்டிச்சென்று உலகத்தைக் காட்டியவர். சூர்யாவின் வளர்ச்சிக்கு இவரும் ஒரு காரணம். வியாபாரத்தில் பழகியவர், இன்று சூர்யாவின் காட்ஃபாதராக ஆனார். பணத்துக்கும், பதவிக்கும் ஆசைப்படாத ஒரு உத்தமர். அவருடைய ஒரே மகன் அமெரிக்காவில் இருந்தான். அவர் தன் மனைவியோடு சென்னையிலிருந்தார்.

ஒரு நாள், குமார் சூர்யாவைப் பார்க்க அவனது ஆஃபீஸுக்கு வந்தான். சூர்யாவும், பாலு சாரும் எதைப்பற்றியோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

"டேய், எப்பப்பாரு என்னடா பிஸினெஸ் பேச்சு. உங்க ரெண்டு பேருக்கும் போறடிக்கலை?" சொல்லிக் கொண்டே உள்ளே வந்தான் குமார்.

"வாடா... குமார்! ஒரு மாதிரி வேலைய விடப் போற! சூப்பர்!" சூர்யா சொல்லி சிரித்தான்.

“குட் மார்னிங் பாலு சார். நிஜமாவே இவன்கூட உங்களுக்கு போரடிக்கலையா சார். எப்பப் பாத்தாலும் பிஸினெஸ் டாக்ஸ்.!”

பாலு சார் சிரித்தார். “எங்களுக்கும் பொழுது போகணுமே, குமார். உன்னை மாதிரி நாங்க என்ன பெரிய ஆளா?” என்று கிண்டலடித்தார்.

“அப்பாடான்னு இருக்குடா! ஐ.டி ல அதுவும் பெரிய கம்பெனில பெரிய பொஸிஷன்ல இருந்தா, பாக்கறவன்லாம் சூப்பர்னு நினைப்பான். வேலை செய்யறவனுக்குத்தான் தெரியும், எங்கெங்கல்லாம் கிழியும்னு! ஒரு ஒரு நாளைக்கு ஒரு ஒரு கன்ட்ரி. வேதனையான ட்ராவல். என் பொண்டாட்டியோடவும், எனக்கிருக்கற ஒரே பொண்ணோடவும் டைம் ஸ்பெண்ட் பண்ணவே முடியலடா! போறும்..! ப்ரைவேட் கன்ஸல்டண்ட் ஜாப் பெஸ்ட்டுன்னுதான், வேலையை விட்டுட்டேன்.”

“உனக்கென்னடா! இண்டஸ்ட்ரில பெரிய ஆளு! அப்புறம் என்ன?”

“அப்படியே ஒண்ணுமில்லைன்னாலும், உன் கம்பெனில ஒரு ப்யூன் வேலை கிடைச்சாலே போதுமே! ஐ.டி சம்பாத்யம் வருமே....”

மூவரும் சிரித்தார்கள். பாலு மெதுவாக எழுந்து தன்னுடைய ரூமுக்குப் போனார்.

“எங்க இந்த லூஸுப் பய, கண்ணன்? வர்றேன்னு சொன்னானே?” குமாரைப் பார்த்துக் கேட்டான் சூர்யா.

“வரலையாம்! அவன் பொண்டாட்டிக்கு உடம்பு சரியில்லையாம். அவன் பிள்ளை எங்கேயோ வெளியூர் போயிருக்கானாம். சரியான குடும்பஸ்தன்னா அவந்தான்!” குமார் தெரிவித்தான்.

“அது சரி, அப்பாவும், அக்காவும் எப்படியிருக்காங்க?” குமார் விசாரித்தான்.

“அம்மா போனப்புறமே, அப்பா டல்லா ஆயிட்டார்டா. அக்கா வித்யாவோடத்தான் லண்டன்ல இருக்காரு! இங்க வர்ற மனசு

கேக்கலை. அவராலதான், நான் கல்யாணம் பண்ணிக்கலைன்னு, அவருக்கு மனசுல ஒரு குறை!"

"சே...அதெல்லாம் என்னடா! ஏன் அப்படி நினைக்கறார்? நீ பேசுடா!"

"விஸ்வநாதனுக்கே இருக்கற டாம்பீகம்....இப்போ மாறிட போறதான்ன? போட்டும் போடா....!"

"மோகன் நம்மளப் பார்க்க இங்க வர்றேன்னு சொன்னான்! அவனையும் காணும்!" தெரிவித்தான் சூர்யா.

"யாரு, லதா ஹஸ்பெண்ட் மோகனா? அவனுக்கு லதாவை மேய்க்கவே நேரமிருக்காது. அவளுக்கு கவர்ன்மெண்ட் ஜாப்! ரூல்ஸ் பேசுவா! அவன் ஐ.ஐ.டி ப்ரொபஸர் வேற! சப்ஜெக்ட்டதான் பேசுவான். அது சரி... லதா எப்படியிருக்கா? பாத்து 4 மாசம் ஆச்சு."

"நன்னாயிருக்காடா! மூணு நாளைக்கு மேல என் கிட்டேந்து போன் போகலைன்னா, அந்தக் காலத்துலேந்து இருக்கிற ராட்சஸ குணத்தோட கத்துவா! அதே மாதிரி, அவ போன் பண்ணி நான் எடுக்கலைன்னாலும் அதே கதிதான். அவதான் நமக்கு இருக்கிற நல்ல சொந்தம். அதுனால, அவ எது செஞ்சாலும், நான் கோபப்படறதில்லைடா!"

"அவளோட பையனுக்கு கல்யாண வயசு! இல்லைடா? பொண்ணு சின்னவ! ஏன் சைலண்டா இருக்கா?"

"இப்போ வருவான் அவ புருஷன் மோகன்.......அவனையே கேளு!"

சொல்லி முடிக்கவில்லை. அதற்குள் மோகனிடமிருந்து சூர்யாவுக்கு போன் வந்தது. தன்னால் வரமுடியவில்லையென தெரிவித்தான். போனை வைத்தான் சூர்யா.

"சரி, சொல்லு.... ஏதோ ந்யூ ஏரியால ஸ்டார்ட் பண்ணனும்னு சொன்னயே! எது,.....என்ன...?" குமார் ஆரம்பித்தான்.

"கொஞ்சம் இரு. பாலு சார் வரட்டும்"- சூர்யா சொன்னான்.

“எனக்கு உங்கிட்ட பிடிச்சதே, அந்த ட்ரஸ்ட்தாண்டா! சின்னதா ஆரம்பிச்ச தொழில்ல உன்னோட வாழ்க்கைத் தோல்வியை முதலீட்டாப் போட்டு, பாலச்சந்தர்னு ஒரு பிஸினெஸ் காட்ஃபாதரை வெச்சுண்டு, இண்டியாலேயே 15 கம்பெனி ஆரம்பிச்சு, இன்னைக்கு வெளி நாடுகள்ள கம்பெனிகளை ஆரம்பிச்சு, அதை வீயெஸ் க்ரூப்பாக்கி, அதைத் தவிர ஆர்ஃபனேஜ், ஸீனியர்ஸ்காக ஹோம்ஸ், ஸ்பெஷலைஸ்ட் ஆர் அண்ட் டி, ந்யூ டெக்னாலஜீன்னு பலருக்கு உதவி செய்யறயே....அதுதாண்டா... இன்னைக்கு இண்டியா லெவல்ல ஒரு பெரிய இண்டஸ்டிர்யலிஸ்டா உன்னை காட்றது.....நீ க்ரேட் டா...!” உண்மையான நட்போடு சொன்னான்.

“ரொம்ப சிம்பிள்டா. ஐ ட்ரஸ்ட் ஹானஸ்ட் பீபிள் அண்ட் ஐ வொர்க் வித் தெம். தெ வில் டேக் கேர் ஆஃப் ஆல் திங்க்ஸ் அண்ட் ஐ ஜஸ்ட் மேனேஜ் தெம்.”

“கரெக்ட்டு....டா”

அத்தோட, பாலு சார் எனக்கு கிடைச்சது பெரிய பாக்கியம். என்னோட பிஸினெஸ் இவ்வளவு பெரிசா க்ரோ ஆயிருக்குன்னா, அவர்தாண்டா காரணம். நான் எந்த பிஸினெஸ் முடிவையும் அவரைக் கேக்காம எடுக்க மாட்டேன். பதவிக்கோ, பணத்துக்கோ ஆசைப்படாத அவர், எனக்கு நல்ல ஒரு பர்ஸனலாவும் ஒரு நல்ல கார்டியன்.”

“ஆமாம்....கரெக்ட் சூர்யா.” ஆமோதித்தான் குமார்.

“உனக்கு தெரியாதது ஒண்ணுமில்லை! ஆனா நான் செத்துப் போய் 25 வருஷத்துக்கும் மேல ஆச்சுடா குமார்! எனக்கு எப்பவுமே கிட்டேயே இருக்கிறது, இந்த சிகரெட்டுதான். நான் வாரத்துக்கு ஒரு நாள் கட்டாயமா குடிக்கிறேன். ஆனா அந்த தினத்துல, விஜியைத் தவிர, எதைப் பத்தியும் நினைக்க மாட்டேன். எவ்வளவோ பொண்ணுங்க என் பின்னாடி அலைஞ்சாலும், ஒரு லெவல்ல வெச்சுதான் பேசுவேன். காரணம், எல்லாமே விஜிதாண்டா! அவ

இருக்கிற இடத்துல வேற யாரையும் பாக்க முடியலை! அதேமாதிரி, தெய்வ நம்பிக்கைய இன்னும் கைவிடலை!"

"இப்போ எதுக்கு இதையெல்லாம் கிளரணும். வுடுடா...." குமார் பேச்சை மாற்றினான்.

"இல்லை குமார். அவளோட பர்த்டே அன்னிக்கும், கல்யாண நாள் அன்னிக்கும் கோவிலுக்கு போய் அர்ச்சனை செய்யாம இருக்க மாட்டேன். அப்படி வெளியூர்ல இருந்தா, ஜஸ்ட் வேண்டிக்கவாவது செய்வேன்! இதெல்லாம் எதுக்குன்னு யாரும் கேக்கலாம்! அவளை மறக்க முடியலைடா!"

"சரிடா...அதெல்லாம் முடிஞ்ச கதை! பிஸினெஸ்ஸை பாருடா!"

"அப்படியில்லைடா! நான் இருக்கறதைக் கூட அவ கண்டுக்கலைன்னு போது, எனக்கு கஷ்டமாயிருக்கு. இன்னும் கூடவா, என் மேல கோபமாயிருக்கான்னு தோணுறது! நான் இருந்தாலும், இல்லைன்னாலும் ஒண்ணுதாண்டா! சாகறத்துக்கு நான் ரெடி! ஆனா, எப்படி சாகறதுன்னு எனக்கு தெரியலடா குமார்!" மிகவும் நொந்து கொண்டு பேசினான் சூர்யா.

"உன்னை விடுடா!... எங்களையும் மதிச்சு ஒரு கால் கூட பண்ணலை! நாமல்லாம் அவளுக்கு வேண்டாம்னு நினைச்சிருப்பா! போகட்டும் போடா! வேலையைப் பாரு.....!" சமாளித்தான் குமார்.

பாலச்சந்தர், கதவைத் தட்டினார்.

"வாங்க பாலு சார்! குமாரை வெச்சு ஒரு புது ப்ராஜக்ட்ல இறங்கலாம்னு ஒரு ப்ளான். ஏ.ஐ டெக்னாலஜி, ஐ.ஓ.டி, அண்ட் ரொபொடிக்ஸ் கலந்த சில ஆடோமேஷன். ஆஸ்ட்ரேலியா கிரிக்கெட் போர்ட் அண்ட் க்ரௌண்ட்ஸ் மேனேஜ்மெண்ட்ல ஆடோமேஷன் நிறைய செய்யணுமாம். அதெல்லாம்தான் ஃப்யூச்சர் டெக்னாலஜீஸ். அதுக்கு ஒரு சான்ஸ் வீயெஸ் க்ரூப்புக்கு வந்திருக்கு. ப்ராஜக்ட் ப்ளஸ் மெயிண்டனென்ஸ்! ஆரம்பமே, அப்ப்ராக்சிமேட்லி 10 மில்லியன்

டாலர்ஸ். அதைப் பத்தி உங்ககிட்ட பேசலாம்னுதான் கூப்பிட்டேன் சார்” விளக்கிச் சொன்னான்.

“ம்ம்ம்....ம்ம் கட்டாயம் பாக்கலாமே! எவ்வளவு வொர்த்துனு தெரிஞ்சுக்கணும். ஃபினான்ஷியல்ஸை நான் ரெடி செய்யறேன்.” பாலு சார் சொன்னார்.

“பண்ணலாண்டா! ஒண்ணும் கஷ்டமில்லை! ஸ்பெஷல் ரிஸோர்சஸ் தேவையான்னு தெரியணும். ஆன்சைட் வொர்க் ப்ரபோஷன் அண்ட் ரெக்ருட்மெண்ட் டைம் தெரியணும்.” குமார் சொன்னான்.

“இந்த ஆர்டர் நம்ம கம்பெனிக்கு ஒரு பெரிய விஷயம். குமாருக்குத்தான் தேங்க்ஸ் சொல்லணும். அவன் இல்லேன்னா நமக்கு இந்த கபாசிடி கிடையாது. என்னடா சொல்ற குமார்? எடுக்கலாமா?”

“ம்ம்ம்...எடுடா... செய்யலாம்!”

“சரி, நான் ஃபாலோ பண்ணுட்டு சொல்றேன். மேபி, இன் அனொதெர் 4-5 மந்த்ஸ்ல வந்துடும். எடுத்தப்புறம் கண்டின்யுயஸ் ப்ராஸஸ் அண்ட் ட்ராவல் டு ஆஸ்ட்ரேலியா.... பரவாயில்லையா?” மீண்டும் குமாரைக் கேட்டான்.

சிகரெட்டைக் கொளுத்தினான் சூர்யா.

“முதல்ல...எடுடா....அதையெல்லாம் அப்புறம் பாத்துக்கலாம். அதுக்கு முன்னாடி, உன் ஃபினான்ஷியல்ஸை ப்ளான் பண்ணிக்கோ!” குமார் ஈஸியாக சொன்னான்.

பாலு சாரும் ஒத்துக் கொண்டார்.

“ஓகே.... அப்போஅ நான் கிளம்பறேண்டா! ஃபோன் பண்ணு!” சொல்லி விட்டு கிளம்பினான்.

“டேய்... நான் லண்டனுக்கு போய் அப்பாவையும், வித்யாவையும் பாக்க போறேன். எனக்கு என்னமோ மனசு சரியில்லை. ஒரு தடவை பார்த்தா நல்லாயிருக்கும்னு நினைக்கிறேன்.”

“போயிட்டு வாடா..... அவாளுக்கும் ஆதரவா இருக்கும்” குமார் சொன்னான்.

“பாலு சார், இந்த நியூ மேனேஜ்மெண்ட் பொஸிஷன்ஸை சீக்கிறம் க்ளியர் பண்ணுங்க சார். எஸ்ப்ஷெலி, அந்த க்ரூப் ஃபினான்ஷியல் கண்ட்ரோலர் பொஸிஷன். அந்த பொஸிஷன், இப்ப நாம பேசற ப்ராஜக்ட் ஆரம்பிக்கறதுக்கு முன்னாடியே, ஃபில் ஆகணும். எனக்காக வெயிட் பண்ண வேணாம் பாலு சார். எல்லாத்தையும், நீங்களே பாத்து அப்பாய்ன்மெண்ட் குடுத்து முடுச்சுங்க சார்! எனக்கு ஃபில் ஆச்சுங்கற இன்ஃபர்மேஷனை மட்டும் கொடுங்க.” சூர்யா பாலு சாரிடம் சொன்னான். பாலு சாரும் சரியென்று ஒப்புக் கொண்டார்.

சூர்யா இன்னொரு சிகரெட்டைக் கொளுத்தினான்.

குமார் கிளம்பினான். கிளம்பும் போது பாலு சார் மடக்கினார். “குமார்... ஒரு ரிகொஸ்ட்! உன் ஃப்ரெண்டை சிகரெட்டை குறைச்சிக்க சொல்லேன். நான் எவ்வளவோ சொல்லிப் பாத்துட்டேன். பிரயோஜனமில்லை! நீயாவது கொஞ்சம் சொல்லி..........!”

சூர்யா சிரித்தான்.

குமாரும் சிரித்து கொண்டே சொன்னான், ‘அவன் யார் சொல்லியும் கேக்க மாட்டான் சார். விஜின்னு ஒருத்தி இருந்தாளே, அவளே நேர்ல வந்து இந்த ஆஃபீஸ்ல காலடி எடுத்து வெச்சு, அவ சொன்னாத்தான் இவன் கேப்பான்!”

சூர்யா மறுபடியும் சிரித்தான். “என்னோட வாழற விஷயத்தை நான் என்னிக்குமே விட்டுத் தந்ததில்லடா.” சொல்லி விட்டு இரண்டு கண்களையும் குமாரைப் பார்த்து ஒரு தடவை சிமிட்டினான்.

‘இதுக்காகவே அந்த விஜியை எப்படியாவது கண்டுபிடிக்கணும்.” என பாலு சார் சொல்ல, மூவரும் சிரித்துக் கொண்டே அந்த இடத்திலிருந்து பிரிந்தார்கள்.

அதே சமயம், ஹேமா வீட்டிலிருந்த விஜிக்கு விக்கலெடுத்தது. எதையோ நினைத்துக் கொண்டே தண்ணியைக் குடித்தாள்.

பகுதி - 6 உன்னை எனது விழியால்..

சென்ட்ரல் ஸ்டேஷனில் இறங்கிய விஜி, வளசரவாக்கத்திலிருந்த ஹேமா அக்கா வீட்டிற்குப் போனாள். ஹேமாவும், அத்திம்பேரும் வரவேற்றார்கள். வரவேற்புக்குப் பிறகு அக்காவும் தங்கையும் சிறிது உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தாள்.

விஜியின் மகள் ரம்யா அம்மாவின் கழுத்தைக் பின்புறமாக வந்து கட்டிக் கொண்டாள். “ஹே ரம்யா கழுதை. ரெண்டு வாரத்துக்கு முன்னாடியே இங்க வந்துட்டியே. அம்மாக்கு கொஞ்சம் ஹெல்ப் பண்ணனும்னு தோணித்தா?” விளையாட்டாகக் கேட்டாள் விஜி. வேலைக்குச் சேர வேண்டிய கட்டாயத்தால், விஜியின் பெண் ரம்யா சில நாட்களுக்கு முன்னாலேயே, அங்கு வந்து விட்டாள்.

ஹேமாவுக்கு ஒரே பெண். அவள் அமெரிக்காவில் படித்துக் கொண்டிருந்தாள் ஹேமாவுடன் இருந்த மாமியாரும் அந்த சமயத்தில் இல்லை. ஊருக்குப் போயிருந்தாள்.

விஜி ஹேமாவுடன் பேசிக் கொண்டிருந்தாள். “ஹேமா! ரம்யாக்கு சென்னையிலியே வேலை கிடைச்சதனால, சென்னைன்னு முடிவு பண்ணியிருக்கோம்! நானும் ஏதாவது ஒரு கம்பெனியில் வேலைக்கு போகப் போறேன். கொஞ்ச நாள்ல தனி வீடு பாத்துடுவேன். அதுவரைக்கும், நானும் ரம்யாவும் நீதான் கொஞ்சம் அட்ஜெஸ்ட் பண்ணனும்.”

“என்னடி என்னமோ வேற மனுஷாள் மாதிரி பேசற? சே...சே.... ஒரு ப்ராப்ளம் இல்லை. எங்க மாமியாரும் ஊருக்குப் போயிருக்கா! எனக்கு நீங்க தங்கறதுல ஒரு ஆட்சேபனையும் இல்ல! விஜி, உனக்கு விவாகரத்து ஆனது, மனசுக்கு ரொம்ப கஷ்டமாயிருக்கு. நீ தைரியமாத்தான் இருக்க! பரவாயில்லை. அதுக்காக ஏன் சென்னை பக்கமே வராம இருந்துட்ட! நாங்களெல்லாம் இல்லையா? அப்பா போனதுக்குக் கூட நீ வராதது எங்களுக்கெல்லாம் தப்புன்னு பட்டுது.

இருந்தாலும், உன்னோட வாழ்க்கை வழிமாறிப் போனதுக்கு நாங்களெல்லாம் ஒரு காரணம்னு நினைச்சு இருந்துட்டோம்."

"படைப்போட நோக்கங்களை தெரிஞ்சு மனுஷன் பொறக்கலை ஹேமா. சூழ்நிலைகள் தர்ற மாத்தங்கள்லதான் நாம நோக்கங்களை அமைச்சுக்கிறோம். என்னோட சூழ்நிலை, இன்னிக்கு சென்னை, பின்னால என்ன நடக்குமோன்னு தெரியாது. காலங்களால கருத்துக்கள் மாறினா பரவாயில்லை. நான் பொறந்ததுலேந்தே காலங்கள் எனக்கு அமைஞ்சதில்லை. அது என்னோட ராசி! என் பொண்ணு சந்தோஷமா இருந்தா போதுங்கற நிலைமைக்கு வந்துட்டேன். ரம்யாவுக்கு கல்யாணத்தை முடிச்சா, என்னோட கடமை முடிஞ்சுது." விஜி சாதாரணமாகச் சொன்னாள்.

"சரி, நீ குளிச்சுட்டு வா! நான் சமையல் வேலைய பாக்கறேன். கா∴பிய சாப்பிடு! என்ன ப்ரேக்∴பாஸ்ட் செய்யணும்னு சொல்லு!" சொல்லிக் கொண்டே சமையல் ரூமுக்குள் போனாள் ஹேமா.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு, ரம்யாயும் அத்திம்பேரும் வெளியே கிளம்பினார்கள்.

குளித்துவிட்டு காப்பியை குடித்த விஜி, அன்றைய ந்யூஸ் பேப்பரை திறந்து படித்துக் கொண்டிருந்தாள். ஆறாவது பக்கத்தில் இருந்த 'வியெஸ் க்ரூப்பின்' முழுநீள விளம்பரத்தில் சூர்யா பெரிய படமாக சிரித்துக் கொண்டே அத்லிருந்த அமெரிக்கனுக்கு கையைக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

ஒரு நிமிடத்திற்கும் மேல் அதையே பார்த்துகொண்டிருந்தவள் ஸ்தம்பித்து விட்டாள். கொஞ்சம் வயதானாலும், அந்த இளமை மாறாத சூர்யா சிரித்துக் கொண்டு இருந்தான்

ஆச்சர்யப்பட்டாள் ! எதுவும் புரியவில்லை. கண்கள் அதுவாகவே கண்ணீரை விட ஆரம்பித்தது.

விஜி கடந்த இரண்டு மூன்று வருடங்களாக வியெஸ் க்ரூப்பின் சாதனைகளப் பற்றி தெரிந்திருந்தாள். ஆனால் சூர்யாதான் அதற்குக் காரணம் என்றும், அந்த சூர்யாதான் அவளுடைய சூர்யா என்பதை அறியத் தவறி விட்டாள்.

“இது சூர்யாவா?” என்று வியந்தாள். விஜிக்கு அவனது படத்தைத் தவிர வேறு எதையும் பார்க்கத் தோணவில்லை. அடுத்தடுத்த கேள்விகளும், பதில்களும் சரளமாக வந்தன.

“நிஜமாகவா?”

“வீயெஸ் க்ரூப் சூர்யாதுன்னு தெரிஞ்சுக்காம போயிட்டேனே.....”

“அவனுக்கு இப்போ என்னைத் தெரியுமா?”

“ச்சே...ச்சே.....என்னோட சூர்யாதானே? என்னைத் தெரியாமலா இருக்கும்?”

“உடனே அவனைக் கான்டாக்ட் பண்ணலாமா?”

“இப்போது ரொம்ப பெரிய ஆளு! என்னை தெரிஞ்சுப்பானா?

“இல்லை, என்னை வெறுத்திருப்பானோ...?

“சப்போஸ் .....நான் அவனைக் கூப்ட்டுட்டு அவன் பேசலைன்னா .... அது எப்படியிருக்கும் .....?”

“வேணாம்! பணக்காரனா இருக்கான். பெரிய இண்டஸ்ட்ரியலிஸ்டா இருக்கான். அவன் என்னை நினைக்கறாங்கறது முக்கியமில்லை! நான் இன்னும் அவனை நினைக்கிறேன். அது போதும்.”

வறுமைக்கு பெருமை வந்ததுபோல், தன் நிலைமையை எண்ணி மகிழ்ந்து கொண்டிருந்தாள். கண்களில் தானாக கன்னத்து வரை வழிந்த கண்ணீரை தன்னுடைய புடவை நுனியால் துடைத்துக் கொண்டாள்.

“ஹேம....இது என் சூர்யாதான்......”

ஏழையாக இருந்த அவளுக்கு லாட்டரி கிடைத்தது போல் ஒரு நினைப்பு. பிரிந்தவர்கள் மீண்டும் சந்தித்தது போல ஒரு சிந்தனை!

“என்ன? சூர்யாவைப் பார்த்துட்டியா?” என்ற ஹேமாவின் குரல் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினாள்.

உடனே பேப்பரை மூடியவள், “ம்....அது வந்து....! வந்து...!” பேசத் துடித்தாலும் என்ன பேசுவதென்று தவித்தாள்.

“ஹேம...ஹேம..... என்ன ஆச்சு இப்போ? ஏன் பதர்ற? ரிலாக்ஸ்..!” அமைதிப் படுத்தினாள் ஹேமா.

“உனக்கு சூர்யாவை எப்படித் தெரியும்?”

“உன்னைப் பெண் கேட்டவன் தானே, அவன் ! எனக்குத் தெரியாதா என்ன? நம்ம அண்ணா பேசினப்பறம், உன்னோட போட்டோவையும், நீ கொடுத்த துண்டு சீட்டையும் அவன் எங்கிட்டதான் கொண்டு வந்து கொடுத்தான். அப்போ அறிமுகம்!”

சிம்பிளாக ஒரு பதிலைச் சொன்னாள் ஹேமா. மேலும் சொன்னாள்.

“அப்பா போனபோது உன்னோட ப்ரச்சனையால, உன்னால காரியத்துக்கு கூட வரமுடியலை. அந்த சமயத்துல நம்ப ஃபேமிலில எல்லாரும் சூர்யாவைப் பத்திதான் பேசிண்டு இருந்தோம். நீ அவனைக் கல்யாணம் பண்ணியிருந்தா, உனக்கும் இந்த டைவர்ஸ் நிலமை வந்திருக்காது, நீயும் நல்லாவே இருந்திருப்பன்னு நினைச்சோம். எதுவுமே நாம நினைச்ச மாதிரி நடப்பதில்ல....!” அவர்களுக்கே உரித்தான பாஷையில் சொன்னாள்.

மௌனமானாள் விஜி.

“உன் வேலைக்கு என்ன பண்ணப் போற?” - ஹேமா அக்கா கேட்டாள்.

"ஆம் ...அதுதான்..!" ஹெச்சார் ஜாப் கன்ஸல்டன்ட்ஸ்ஸோட அட்ரெஸ்கள் இருக்கு. அதை வெச்சு சென்னையிலேயே வேலைக்குப் பார்க்கணும்."

"நான் கேக்கறேன்னு தப்பா நினைக்காத! சூர்யாவை மீட் பண்ணி, அவனோட கம்பெனியிலேயே ஒரு வேலையை தேடிக்கலாமே. நீயும் சி.ஏ படிச்சிருக்க. உனக்கு நல்ல எக்ஸ்பீரியன்ஸும் இருக்கு. வொய் நாட் யு ட்ரை?" ஹேமா கேட்டதுதான் தாமதம்.

"சே...சே.... அதெல்லாம் ரொம்ப அசிங்கம். அவனை வேணாம்னு தூக்கிப் போடும்போது, நாம இதையெல்லாம் எதிர்பாக்கல. இப்போ அவங்கிட்ட போய் வேலைக்காக நிக்கறது அவமானமா இருக்கு. எனக்கு வேற வேலை கட்டாயமா கிடைக்கும். அதையும் தவிர, அவனுக்குன்னு குடும்பம் இருக்கும். என்னால திரும்பவும் அவனுக்கு கஷ்டத்தை கொடுக்க முடியாது." விளக்கமாகச் சொன்னாலும் மனதிலிருந்ததை வெளிப்படையாகச் சொன்னாள்.

'சரி விஜி. உன் மனசுக்கேத்த வாழ்க்கை கிடைக்கணும்னு நான் ப்ரார்த்தனை பண்ணிக்கிறேன். நான் உள்ள போய், சமையல பாக்கறேன்." சொல்லிக் கொண்டே உள்ளே போனாள் ஹேமா.

இரண்டு வாரங்கள் போனது. விஜிக்கு வேலை கிடைக்கவில்லை. ஆனால், எதிர்பார்த்த தனி வீடு வாடகைக்கு நங்கநல்லூரில் கிடைத்தது. ஹேமாவுக்கு நன்றி சொல்லிப் புறப்பட்டாள்.

வியெஸ் க்ரூப்பின் வரலாற்றை இண்டர்நெட்டில் தேடினாள். அதிலிருந்து சூர்யா கல்யாணமாகாதவன் என்பதையும் தெரிந்து கொண்டாள். அவர்களின் வளர்ச்சியைப் படித்தாள். சூர்யாவின் உயர்ந்த நிலைமையைப் பற்றித் தெரிந்ததும் பெருமையாக நினைத்தாள். அந்த வளர்ச்சிக்கு முன் தன்னைப் புழுவாக நினைத்தாள்.

அவளது ஆசை வற்புறுத்தியது. சூர்யாவின் டைரக்ட் நம்பரை வாங்குவதற்கு என்னென்னவோ முயற்சி செய்தாள். பத்தாம் கட்டத்தில் இருந்த அவனை, அந்த முயற்சிகள் மூன்றாம் கட்டத்திற்கு மேல் கொண்டுபோக முடியவில்லை.

மதிய வேளையில், அந்த பழைய நினைவுகள் அவளை தடுமாற வைத்தன. சென்னைக்கு வரும்வரை, அதையெல்லாம் சற்று மறந்தவளுக்கு, இப்போது அந்த நண்பர்களையும் பார்க்க வேண்டுமென்ற ஆசையும் வந்தது.

சாயங்கால வேளைகளில் மொட்டைமாடியில் தனியாக உட்கார்ந்து சூர்யாவை நினைப்பது வழக்கமாகக் கொண்டாள் விஜி. பல சமயம், அவனை நேரில் பார்க்க வேண்டும் போலிருக்கும்.

பார்க்க வேண்டும் என்ற ஆசை. பார்க்க வேண்டுமா என்ற போராட்டம். இதற்கு இடையில் எப்போதும் அகப்பட்டுக் கொண்டு தவிப்பாள். பார்க்க வேண்டிய சூழ்நிலை வந்தால் பார்த்துக் கொள்ளலாமென விட்டு விடுவாள்.

கண்ணாடியைப் பார்த்து பொட்டு வைத்த போதெல்லாம், சூர்யாவை நினைத்துக் கொள்வாள். அந்தக் காலத்திலிருந்தே, விஜிக்கு பொட்டு வைத்துக் கொள்வதில் ஒரு சோம்பேறித்தனம். சூர்யாவுக்கு அது பிடிக்காது. அதை எப்படி தன்னிடம் சொன்னான் என்பதை, நினைத்துப் பார்த்தாள். அந்த டபுள் டேங்க் ரோட்டில் இருந்த யாருமில்லாத பஸ் ஸ்டாண்ட், ஞாபகத்துக்கு வந்தது.

“ஹே, விஜி, உனக்கு ஏன் பொட்டு வெச்சுக்க அவ்வளவு சோம்பேறித்தனம்?”

“ஏன்? வெச்சாதான் நீ என்னோடு பேசுவாயா?”

“இல்லை, வெச்சா இன்னும் ரொம்ப அழகாய் இருப்ப... அதனால்தான் கேக்கறேன்!”

“எனக்கு இந்த அழகு போதும்!”

“அப்போ உன்ன விட அழகா இருக்கிற பொண்ணுங்க என் கண்ணில பாடுவாங்களே. அது உனக்கு ஓ.கே வா?”

“ம்ம்ம்ம்...மிஸ்டர்.....! இந்த ஆசை வேற உனக்கு இருக்கா?”

“அந்த ஆசை வரக்கூடாதுன்னுதான் உன்ன இன்ஸிஸ்ட் பண்றேன்.”

“வேற எவளையாவது பார்றேன்..... அப்புறம் பாரு.... என்னோட சொரூபத்த...”

- “எனக்கு நம்ம வீட்டு கலாசாரமும், அழகுதான் பிடிக்கும் விஜி. நீ அதுமாதிரி இருக்கணும்னு ஆசைப்படறேன். அதுக்குத்தான் கேட்டேன். உனக்குப் பிடிச்சுதுன்னா ஓ.கே. இல்லை உன் இஷ்டம். நான் இனிமே கேட்க மாட்டேன்!”

விஜிக்கு சுறுக்கென்று குத்தியது. கொஞ்சம் நெகிழ்ந்தாள்.

“சூர்யா, உனக்கு பிடிச்சதைதான் நான் பண்ணுவேன். இனிமே என் வாழ்க்கையில் பொட்டு வைக்காமல் இருக்கவே மாட்டேன். போதுமா. இது சத்தியம்.”

தோய்ந்த அன்பு மட்டும் அங்கு தெரிந்தது. வழக்கம் போல அவன் அந்த ‘சூர்யா சிரிப்பை’ சிரித்துவிட்டு லேசாக அவளைப் பார்த்து இரண்டு கண்களையும் சிமிட்டினான்.

இன்று அதை நினைத்துக் கொண்ட விஜியின் கண்களும் தன்னையறியாமல் கண்ணாடிக்கு முன் சிமிட்டியது. சுற்றி பார்த்து விட்டு தானே தனக்குள் ரசித்துக் கொண்டாள்.

“அவன் எங்கேயோ இருக்கான்!” என்ற நம்பிக்கையில் தோல்வியின் சுமைகளையும் தழுவி வாழ்ந்து கொண்டிருந்தாள்.

பழைய நண்பர்களையோ அல்லது சூர்யாவையோ பார்க்கக் கூடாது என்று மனதில் உறுதி கொண்டாள். ரம்யாயின் வாழ்க்கையில் அந்த சந்திப்புக்கள் வேறு நிலைக்கு மாற்றிவிடுமோ என்ற பயம்

விஜிக்கு ஏற்பட்டது. தான் சென்னையில் இருப்பதை எந்த பழைய நண்பர்களுக்கும் தெரியாதவாறே ஆறு மாத காலத்தைக் கடத்தி விட்டாள் விஜி.

பணம் சிறிது சேர்த்திருந்தாலும், ரம்யாயின் எதிர்காலத்தை நினைத்து வேலைக்கு போக முயற்சி எடுத்தாள்.

சூர்யாவின் வளர்ச்சியை கூர்ந்து கவனித்து வந்தாள். அவனைப் பற்றிய கட்டுரைகள், இண்டர்வியூக்கள், மற்றும் தொடர்புடைய செய்திகளையும் சந்தோஷமாகப் படித்து வந்தாள்.

ஒரு நாள், 'வியெஸ் க்ரூப்' பிலிருந்து ஒரு சீனியர் பொசிஷனுக்கு வேலை செய்தித் தாளில் விளம்பரம் வந்தது. தன்னுடைய படிப்பிற்கும் மற்ற அனுபவத்திற்கும் ஏற்றார் போல இருந்த வேலை.

அதிர்ஷ்டமோ, விதியோ விஜிக்கு சாதகமாக இருந்தது.

எதைப் பற்றியும் கவலைப் படாமல் விஜி விண்ணப்பித்தாள். தானும் வியெஸ்ஸில் ஒரு வேலைக்கு அப்ளை செய்வாளென்று நினைத்தது கூட கிடையாது.

இன்டெர்வியூக்கு மாறாக சூர்யாவின் சந்திப்பை மிகுந்த நம்பிக்கையுடன் எதிப்பார்த்துக் கொண்டிருந்தாள்.

எதிர்பார்த்த இன்டெர்வியூவும் வந்தது. அதில் கட்டாயமாக சூரியாவைச் சந்திக்கும் தருணம் வந்து விட்டது என்றும் நினைத்தாள்.

பல வருடங்களுக்குப் பின் அமையும் சந்திப்பு. அவனை முதலில் பார்க்கும்போது "எப்படி இருக்கணும்!" மற்றும் "பேசணும்!" என்று கற்பனை செய்தாள். பைத்தியம் பிடித்தவள் போல் தனக்குத் தானே நடித்துப் பார்த்துக் கொண்டாள்.

பார்க்க வேண்டிய சூழ்நிலை ! பார்க்க வேண்டுமா என்கிற போராட்டம் ! பார்க்க வேண்டும் என்ற ஆசை ! இந்த நாடகம் விஜிக்கு

இப்போது சரியாகப் பட்டது. பேச வேண்டும் என்று நிர்பந்தம் வந்தால், என்ன பேசுவது என்று தெரியாமல், யோசனை செய்தபடி குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருந்தாள். அதில் கடமை மட்டுமன்றி, காதலையும் கலக்க நினைத்தாள்.

இன்டெர்வியூ நாளும் வந்தது. விஜி, 'வியெஸ்' கார்ப்பரேட் ஆ∴பீஸில் இருந்தாள்.

மிகப் பெரிய ரிஸப்ஷன் ஹால். மற்ற வேலை செய்யும் அறைகளுக்கு எப்படிப் போகவேண்டுமென்று தெரியாமலிருந்த கதவுகள். மற்றும் பிரம்மாண்டமாய் இருந்த இன்டீரியர் டெகரேஷன்கள். ஒரு சர்வதேச கம்பெனிகளுக்கு உண்டான அமைப்பு. அமைதியாய் நடந்த வேலைப் பணியாளர்கள். அவர்களது ரிச்சான உடைகள். போன் பேசுவது கேட்காதவாறு அமைந்த குரல்கள். வழிக்கி விடுமோ என்று பயந்தே நடக்க வேண்டி வரும் தரை. முக்கிய இடத்தில் அமைந்த செக்யூரிட்டி கார்டுகள்.

திருப்பதி பாலாஜியும், தாயாரும் நிறைந்திருந்த அந்த மிகப் பெரிய படம். அதற்குப் பக்கத்தில் இருந்த பெரிய ப்ரேம் போட்ட படம். வெறும் வெள்ளையாகவே இருந்தது. நடுவில் சின்னதாக ஒரு நெற்றிக்கு இட்டுக் கொள்ளும் ஒரு பொட்டு. வேறு எதுவுமே அதில் இல்லை. விஜிக்கு அதன் அர்த்தம் புரியவில்லை.

"ஹல்லோ மிஸ். விஜயலக்ஷ்மி. ....ஐ யாம் பூஜா !" எனச் சொல்லி ஒரு ஹெரச்சார் எக்ஷ்ஸிக்யூடிவ் அருகில் வந்து கையை நீட்டி வரவேற்றாள். "மேடம், யூ கேன் கோ இன் ப்ளீஸ்!" - சொல்லியபடியே, அருகில் வந்து கூப்பிட்டுக் கொண்டு வழியும் காண்பித்தாள்.

மனதில் 'திக் ...திக் ...திக் ...திக் ..." என்று அடித்துக் கொண்டதை மற்ற எல்லோருக்கும் கேட்கும்படியாக உணர்ந்தாள் விஜி. ரொம்ப பயமாகவே இருந்தது. உணர்வுகள் தூண்டின. உணர்ச்சிகள் காய்ந்தன.

“அவன் உள்ளே இருப்பானா?” அந்த ஒரே கேள்வி அவளை வாட்டி வதைத்தது.

கதவைத் தட்டிவிட்டு உள்ளே போனாள். விஜிக்கு ஏமாற்றம் அதிகமாக இருந்தாலும் நிம்மதியாக இருந்தது. சூர்யா அங்கு இல்லை. வேறு யாரோ சீனியர்களாக இருந்த இருவர்தான் இன்டெர்வியூ செய்தார்கள்.

வெளியே வரும்போது வேலையுடன் வந்தாள் விஜி.

ஒரு வாரத்தில், அனைத்து எச்.ஆர் முறைகளும் முடிந்தன.

விஜி, வியெஸ் க்ரூப்பின் ஃபினான்ஷியல் கன்ட்ரோலராக பொறுப்பை ஏற்றாள்.

பகுதி - 7 நதியும் நாணலும்

வீயெஸ் க்ரூப்பில் வேலைக்குச் சேரும் நாளும், நேரமும் வந்தது.

அந்த ஆ:ஃபீஸின் காம்பவுண்ட்டைத் தாண்டுமுன் எட்டுப் பக்கங்களிலும் சுற்றிப் பார்த்தாள். சூர்யா தென்படவில்லை. தானே தனக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டாள். “அவன் என்ன? சின்ன ஆளா! எங்கப் பார்த்தாலும் பார்க்க முடியுமா?” - தன்னையே தேற்றிக் கொண்டாள்.

முதலில் ஒரு ரூமுக்குள் உட்கார்ந்திருந்தாள்.

அன்று இன்டெர்வியூவில் இருந்த ஒருவரும், இன்னொரு பெண்மணியும், சற்று வயதான ஒருவரும் வந்தார்கள்.

அனைவரும், ஆங்கிலத்தில் அறிமுகம் செய்து கொண்டார்கள்.

அந்த வயதானவர் ஆங்கிலமும் தமிழும் கலந்துதான் பேசினார். அவரது ஆங்கிலம் அழகானதாக இருந்தாலும், அவர் பேசிய தமிழும் அழகாக இருந்ததோடு, உரிமையோடுப் பேசியதாக இருந்தது.

“என் பெயர் பாலசுப்ரமணியன். மத்தவங்க கூப்படறது ‘பாலு’, என அடக்கமாக தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார். நான் ‘வியெஸ் க்ரூப்பின்’ ஆபரேஷன்ஸ் மேனேஜ்மென்டை பார்த்துக்கறேன். மிஸ்டர் சூர்யா - இந்த க்ரூப்புக்க் சேர்மன், அவரோட ஆரம்பத்திலிருந்து பயணம் செஞ்சவன். நீங்கள் எங்க க்ரூப் ‘:ஃபினான்ஷியல் கன்ட்ரோலராக’ எங்களுடன் சேர்வது எங்களுக்குப் பெருமையாக இருக்கு மேடம். ரொம்ப பெரிய போஸ்ட்! உங்களை மாதிரி திறமைசாலியாலத்தான் இதை ஹேண்டில் பண்ண முடியும்.” என்று சொல்லிக் கொண்டே அங்கிருந்த அனைத்து சீனியர் எம்ப்ளாயீஸையும் விஜிக்கு அறிமுகப்படுத்தினார்.

“இவர் பெயர் ரகுராமன். உங்களுடைய டைரக்ட் ரிபோர்டீ. நம்முடைய எல்லா கம்பெனிகளின் ஹெட் ஆ:ஃப் :ஃபினான்ஸ் அண்ட்

அக்கவுண்ட்ஸ். இவருடைய டீம் சைஸ் பெரிசு ; ரொம்ப திறமையான பீபிள். இவங்க நிர்மலா வெங்கடேஷ். நம்முடைய ஹெட் ஆ·ஃப் பிசினெஸ் அனலிஸ்ட்ஸ் டீம், எல்லா கம்பெனிகளின் லாப நஷ்டங்களை கணக்கிடுபவர். ஒவ்வொரு கம்பெனிக்கும் ஒவ்வொரு டீம் தனியாக இருக்கு." என்று சொன்ன பாலு, மற்ற எல்லோரையும் ஒவ்வொருத்தராக அறிமுகப் படுத்தினார்.

பாலு இதுவரை விஜியைப் பார்த்தது கிடையாது. ஆனால் நிறைய கேள்விப் பட்டதுண்டு. இந்த விஜயலக்ஷ்மி தான் "சூர்யாவின் விஜி" என்று அவருக்குத் தெரியாது மற்றும் தோணவில்லை.

மேலும் சூர்யாவும் விஜியும் நினைவுகளைத் தவிர வேறு எதையும் சின்னமாக வைத்ததில்லை.

"உங்களுக்கு வேறு ஏதாவது கேள்விகளிருந்தால் கேட்கலாம், மிஸ். விஜயலக்ஷ்மி." - என்று நிறுத்தினார் பாலு.

உடனே கேட்டு விட்டாள், கேள்விகளை.

"மிஸ்டர். சூர்யா எந்த ஆ·ஃபிஸில் உட்காருவார்?"

"பொதுவாக அவர் வீட்டிலிருந்துதான் வேலை செய்ய ஆசைப் படுவார். ஆனா அவர் இப்போ பர்சனல் ட்ரிப்பா லண்டன் போயிருக்கார். வர்ற இன்னும் ஒரு மாசம் ஆகலாம்" என்றார் பாலு.

"ஓ....அப்படியா.... நான் யார்கிட்ட ரிப்போர்ட் பண்ணனும்?"

"நீங்கள் என்கிட்ட ரிப்போர்ட் செய்யணும்."

"என்னுடைய ஆ·ஃபிஸ்....?" என்ற கேள்வியை பாதியோடு நிறுத்தினாள்.

"பக்கத்திலிருக்கும் கேபின் உங்களுடையதுதான்...!" என்றார் பாலு.

"தாங்க் யூ பாலு சார்! தாங்க் யூ வெரி மச் எவ்ரி ஒன்! ஸோ நைஸ் ஆ·ஃப் யூ! நானும் உங்களோட சேர்ந்து வேலைகளை

செய்யணும்னு ஆசைப் படறேன். எல்லோரும் இணைந்து செய்வோம்." என ஆங்கிலத்தில் சொன்னாள்.

கைகளைக் குலுக்கிக் கொண்டு அவர்களெல்லாம் கலைந்தார்கள்.

பாலு சாரிடம் பேசிக் கொண்டிருந்தாள். அவர் கம்பெனி சம்பந்தமாக விவரங்களை விவரித்து முடித்தார்.

"இன்னொரு கேள்வி. என்டரன்ஸில் மாட்டியிருக்கிற வெள்ள ஃப்ரேம் போட்ட போட்டோவில் ஒரு பொட்டு மட்டும் ஃப்ரேம் ஆகியிருக்கே, அதற்கு என்ன அர்த்தம்?" விஜி கேட்டாள்

"நீங்க அதை பார்த்தீங்களா?" பாலு சார், சலனமில்லாமல் கேட்டார்.

"அது சூர்யாவோட அம்மா கடைசியாக ஹாஸ்பிடல்ல இருந்த போது வெச்சிருந்த பொட்டு. ஆபரேஷன் தியேட்டருக்கு போறதுக்கு முன்னாடி, எடுத்து அவரிடம் கொடுத்தாங்க. வெளியே வரும்போது அந்த அம்மா உயிரோடு இல்லை. அவங்க ஞாபகார்த்தமாகத்தான் அங்க வெச்சுருக்கார், ஒரு ஃப்ரேம் போட்டு.... !" என சொன்னார்.

நீளா அம்மாவை நன்றாக தெரிந்த விஜிக்கே அறிமுகம் செய்யவேண்டிய சூழ்நிலையை நினைத்தும், நீளா அம்மா போனதை நினைத்தும், அழுகை பொத்துக் கொண்டு வந்தது. "ஆமாம்.... ரொம்ப டச்சிங்கா இருக்கு சார்!" என சமாளித்தாள். அதைப் பற்றி நினைக்கும்போது, தன்னுடைய பொட்டு வைக்கும் சொம்பேறித்தனத்தையும், சூர்யாவின் அறிவுரையையும் ஒரு கணம் நினைவில் நிறுத்தினாள்.

பாலு சார், விஜியின் ரூமைக் காண்பித்து வெளியேறினார்.

முதன்முறை, தன்னுடைய கேபினில் உட்காரும் உணர்வு வந்தது. சூர்யாவின் கம்பெனி, விஜிக்கு வேற்றுமையாகத் தோணவில்லை.

தான் இந்த வேலையில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று சிறிது நேரம் யோசித்தாள்.

ஒன்று: "நானாகப் போய் சூர்யாவைச் சந்திக்கக் கூடாது. அது அவனுக்கு மிகப் பெரிய பாதிப்பைத் தரும். சந்தித்தாலும் தொழில் முறையிலேதான் பழக வேண்டுமே தவிர, பழையதை கலக்கக் கூடாது."

இரண்டு: "சூர்யாவைத் தவிர மற்ற நண்பர்களை மறுபடியும் சந்திக்காமல் இருப்பது நல்லது. அவர்களுக்கு இப்போது குடும்பங்கள் இருக்கும். வீண் அரசியல் தேவையில்லை."

மூன்று: "ரம்யாயின் கல்யாணம்தான் என்னுடைய இலக்கு. அதைத் தவிர மற்றவைகளில் கவனம் செலுத்தக் கூடாது. நான் டைவர்ஸ் ஆனவள் என்பதை மறக்கக் கூடாது. எனினும், நல்ல குடும்பத்தை அவளுக்காக தேடணும்."

நான்கு: "எந்த காரணத்திலும் இந்த வேலையை விட்டு விலகக் கூடாது. சூர்யாவுக்கு நான் செய்த பாவத்துக்கு ப்ரதிபலனாக அவனுக்காக ஒரு சேவகனாக உழைத்து அவனுடைய நோக்கத்தை அடைய வேண்டும்."

ஐந்து: 'எந்தவித சொந்த ஆதாயத்தையும் இந்த வேலையிலிருந்து தேடக்கூடாது."

இந்த ஐந்து கட்டளைகளை தனக்காகவே வைத்துக் கொண்டாள்.

எல்லோரும் விஜியை 'விஜயலக்ஷ்மி மேடம்' என்றுதான் கூப்பிட ஆரம்பித்தார்கள். அவளும் தன் சேவையை ஆரம்பித்தாள்.

பாலு சாரை, மீண்டும் சாயங்காலம் பார்த்துப் பேசினாள்.

"பாலு சார், நான் சேர்ந்தது சேர்மனுக்குத் தெரியுமா?"

"என்னென்ன பொஸிஷன்ஸ் முடிஞ்சுதுன்னு மட்டும் அவருக்கு சொன்னா போதும்னு சொல்லிட்டார். நானும், அவரை டிஸ்டர்ப்

பண்ண விரும்பலை. இங்க வரும்போது, ஒரு நாள் உங்களை பார்த்து பேசுவார்" என பொதுவில் சொன்னார்.

"பாலு சார்....நீங்க தப்பா நினைக்கலைன்னா ஒரு கேள்வி கேக்கலாமா?"

"கேளுங்கம்மா..!"

"எப்படி சார் ஒரே கம்பெனியில் இவ்வளவு வருஷமாக வேலை பாக்கறீங்க?" - என மெதுவாகக் கேட்டாள். அவர் பதிலுக்கு புன்னகைத்து தலையை பக்கவாட்டில் மெதுவாக ஆட்டினார்.

"ஏன் சார்...நான் ஏதாவது தப்பா கேட்டுட்டேனா" - தன்னுடைய பாஷையில் பேசினாள்.

"உங்களுக்கு உடல், ஆன்மா இரண்டிலும் நம்பிக்கை இருக்கா?" - என்று கேட்டார்.

"இருக்கு சார்.......அதுக்கு முன்னால் ஒரு ரிக்வெஸ்ட்,..... நீங்கள் என்னை 'நீ' ன்னே கூப்பிடணும்; 'நீங்க' என்று கூப்டு என்னை வேற்று மனுஷியா ஆக்கிடாதீங்கோ. மற்றும், நீங்க சூர்யா சாரையே ...நீ .... வா... போ.... ன்னுதான் கூப்பிடுவீர்கள்ன்னு கேள்விப் பட்டேன். அவரையே அதுமாதிரி கூப்பிடும்போது, நானும் அதையே எதிர்பார்க்கிறேன்." - அவளுடைய வீட்டு பாஷை தொடர்ந்தது.

"சரிம்மா விஜயலக்ஷ்மி !" உடனே ஒப்புக் கொண்டார்.

"சரி...உன் கேள்விக்கு இதுதான் பதில். அவரின் ஆன்மாவுக்கு நான்தான் உடல். அதுதான் எங்களுக்குள்ள இருக்கிற நட்பு!"

விஜிக்கு அவரைப் பார்க்க பொறாமையாகத்தான் இருந்தது. தன்னை விட சூர்யாவிடம் நெருங்கி விட்டாரோ என்ற பொறாமைதான்.

சிறிது நேரத்தில் அவர்களின் சொந்த வாழ்க்கையைப் பற்றி பேசினார்கள்.

பாலு சார் தனது சிறிய வாழ்க்கையை சின்னதாகச் சொன்னார்.

விஜியும் அவளது வாழ்க்கையின் அத்தியாயங்களைக் குறைத்து அவரிடம் சொன்னாள். மேலோட்டமாக தனது கல்யாணத்திற்கு முன்னிருந்த வாழ்க்கையைப் பற்றி சுருக்கினாள். பெண்ணைப் பற்றி நிறையப் பேசினாள். கணவனைப் பற்றி இரண்டு வரிகளில் முடித்தாள். எதிர்காலம் அந்தக் கம்பெனியில்தான் என்பதை ஆழமாகச் சொன்னாள்.

“இப்போ சூர்யா சாருக்கு, எப்படி ரிப்போர்ட்ஸ் கொடுக்கணும்.”

“எங்கிட்ட கொடுத்த பின்னால, ரகுராமன் சூர்யாவோட தினமும் பேசுவார். அவருக்கு எல்லா விஷயங்களும் போய் சேந்துடும். அதையெல்லாம், நாம பாத்துக்கலாம். நீங்க ரிலாக்ஸ்டா வொர்க் பண்ண ஆரம்பிங்க.”

“சரி சார். ஏதாவது வேணும்னா உங்ககிட்ட கேக்கறேன் பாலு சார்.” என்று சொல்லியபடியே அவரது ரூமிலிருந்து எழுந்து போனாள்.

வேலைகள் பழகப் பழக பாலு சாரும் விஜியின் வேலைகளில் நிறைய உதவிகளைச் செய்தார்.

சூர்யாவும் லண்டனிலிருந்து வந்தவுடன் பிஸியாகவே இருந்தான். நிறைய வெளி ஊர்களுக்கு அடிக்கடி போகும்படியாகவே இருந்தது. அவன் விஜயலக்ஷ்மியைச் சந்திக்காமலேயே ஓர் ஆண்டு நகர்ந்தது. பாலு சார் அப்போது ஃபினான்ஸைப் பார்த்துக் கொண்டதால், விஜயலசஷ்மியைச் சந்திக்க வேண்டுமென்ற கட்டாயமும் வரவில்லை. கம்பெனிகளின் வேலைகள் தடையில்லாமல் போவதைப் பற்றியே அக்கறையைக் காட்டினான் சூர்யா.

இருந்தாலும், விஜிக்கு சூர்யாவை இன்னும் ‘பார்க்கவில்லையே’ என்ற குறை இருந்துகொண்டுதான் இருந்தது.

பகுதி - 8 உறுமாறிய உறவுகள்

அன்று சூர்யா கார்ப்பரேட் அஃபீஸில் வேலையென்று வந்தான். வழக்கம்போல வெளியிலிருந்த எல்லோருக்கும் 'குட் மார்னிங்" சொன்னபடியே தன்னுடைய ரூமுக்குள் சென்றான்.

வந்தவுடனே நண்பன் குமாருக்கு ஒரு கால் செய்தான். "எங்கடா இருக்க? ஒரு ஃபைவ் மினிட்ஸ் பேசலாமா?" - என்றான்.

பேசலாமென்று தெரிந்தவுடன், "டேய் குமார், ஆஸ்ட்ரேலியா ட்ரிப் அடுத்த மாசம் இருக்குடா. ஏ.ஐ டெக்னாலஜில நுழைய நமக்கு செம்ம சான்ஸ். கொஞ்சம் ஹெல்ப் பண்ணுடா... உன்னோட வேலையை பாதிக்காம நான் ப்ளான் பண்றேன்."

குமார் பதிலுக்கு ஏதோ சொல்ல, "அப்போ சரி....சூப்பர்... அதையும் முடிச்சுட்டு போகலாம்....! அப்புறம் சித்ரா எப்படியிருக்கா....? உன்னோட வாயாடிப் பொண்ணு எப்படியிருக்கா?" என்று குமாரின் மனைவி மற்றும் மகளைக் கேட்ட பிறகு போன் காலை கட் பண்ணினான்.

கதவின் கண்ணாடியில் பாலு சாரைப் பார்த்தான். 'உள்ளே வாங்க பாலு சார்!" என்றான். அவரும் வந்து சூர்யாவின் முன்னே அமர்ந்தார். ஒரு சிகரெட்டைக் கொளுத்தினான்.

'இந்த சிகரெட்டை கொஞ்சம் குறைக்கலாமே சூர்யா. ரொம்ப ஓவரா பிடிக்கிறப்பா!" என்றார் பாலு சார்.

"எதை எதையோ கன்ட்ரோல் செஞ்ச என்னால, இதை பண்ண முடியலை சார். பட்........ ட்ரை பண்றேன் சார். ஆனா, நான் இருந்து என்ன சார் சாதிக்கப் போறேன். என்னோட வாழ்க்கை எப்பவோ முடிஞ்சுப் போச்சு." - மிகுந்த அஜாக்கிரதையுடன் சொன்னான்.

"அப்படியெல்லாம் சொல்லாத சூர்யா!" - கவனமாக திருத்தினார் பாலு சார்.

லேப்டாப்பை திறந்தான்.

“இதெல்லாம் என்ன போட்டோஸ்? அனுப்பியிருக்கீங்க.....!”

‘அதுவா... ரகுராமனின் டீம் போட்டோஸ்....”

அதில் ரகுராமனுக்குப் பின்புறம் ஒரு போட்டோவில், பின்னே வள்ளுவர் கோட்டம், அதற்கு முன்பாக இரண்டு கைகள் கை கொடுத்துக் கொண்டிருந்தது. ப்ரேம் போட்டு தொங்கவிடப் பட்டிருந்தது.

அதைப் பார்த்தவுடன், சற்றுத் தயங்கினான்.

‘இது யாரோட ரூம்?” - சூர்யா கேட்டான்

“எது......இதுவா....... விஜயலக்ஷ்மி ரூம்.”

“யாரது? அந்த ஃபினான்ஷியல் கன்ட்ரோலர், அவங்களா? அவங்களுக்கு என்ன வயசு இருக்கும் பாலு சார்?

“ஒரு 40+ இருக்கும்.”

“எந்த ஊர்....அவங்க?

“படிச்சது சென்னை, ஐ திங்க் இருந்தது சண்டிகர்.... திரும்பவும் சென்னைக்கே வந்து இங்கதான் செட்டில் ஆகிருக்காங்க.”

“நான் அவங்கள பார்த்திருக்கேனா?”

“எனக்குத் தெரிஞ்சு இல்லை. உனக்கு ரகுராமன்தான் ஸ்டேட்டஸ் ரிப்போர்ட் கொடுக்கிறான்.”

“நான் அவங்களைப் பார்க்கணும். ஒரு மீட்டிங்க் அரேஞ்ச் பண்ணுங்க.” - என்றவன் முகத்தில் ஒரு பரபரப்பு தெரிந்தது.

“ஓகே..இன்னிக்கே......சொல்லட்டுமா”

“இப்போவே...சொல்லுங்க பாலு சார் ...ஆனால் இந்த ரூமில் வேண்டாம். கான்ஃபெரன்ஸ் ரூமில்....! நீங்களும் வாங்க.” என்று சொல்லிவிட்டு இன்னொரு சிகரெட்டையும் பற்றவைத்தான். சொல்லி முடித்தவன், வேறு யாருக்கோ போனைப் போட்டு பேசிக் கொண்டிருந்தான்.

நிமிடங்கள் நகர்ந்தன.

விஜி ரூமில் நுழைந்தார் பாலு சார்.

“உன்னை இப்போவே சூர்யா பாக்கணும்கறார்மா. உனக்கு ஏதாவது வேலையிருக்காம்மா? இப்போ மீட் பண்ணலாமா?”

உட்கார்ந்து இருந்தவள் உடனே எழுந்து நின்றாள். சில வினாடிகள் ஸ்தம்பித்து போனாள். எழுந்த அதிர்ச்சியில், மூக்குக் கண்ணாடி கோணலாக ஆகி விழத் தெரிந்தது. கையால் சரி செய்து கொண்டாள்.

அங்கே ஒரு அமைதி இருந்தது.

“ஏம்மா .... ஆர் யூ ஓகே” -

விஜியிடம் ஒருவித பதட்டமும் மற்றும் பயமும் தெரிந்தது. தன்னையறியாமல் கண்களில் கண்ணீர் வந்தது. இந்த அறிமுகம் இப்படித்தான் ஆகுமென்று எதிர்பார்க்கவில்லை. தன்னிடம் இருந்த கர்சீப்பை எடுத்து கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

பார்க்க வேண்டிய சூழ்நிலை; பார்க்க வேண்டுமா என்கிற போராட்டம்; பார்க்க வேண்டும் என்ற ஆசை - இவை மறுபடியும் தலை தூக்கின. இவை அனைத்தும் சேர்ந்து போட்ட போராட்டம் மனதுக்குள்ளேயே நடந்தது. சிறிது தடுமாறினாள்.

மூக்குக் கண்ணாடியைக் கழட்டினாள். புடவையால் துடைத்தாள். மாட்டிக் கொண்டாள். ஆனால் மறுபடியும் கழட்டினாள். கீழே வைத்தாள். தலையை இரண்டு கைகளாலும் கோதிக் கொண்டாள். முகத்தை கர்சீப்பினால் துடைத்தாள். அங்கிருந்த ஃபைல்களை அடுக்கினாள். உட்கார்ந்தாள். நிலை கொள்ளவில்லை. மறுபடியும் எழுந்து நின்றாள். மறுபடியும் கண்களில் கண்ணீர். துடைத்துக் கொண்டாள்.

இதையெல்லாம் பார்த்த பாலு சார், “என்னம்மா ஆச்சு...? எனி ப்ராப்ளம்?” வியந்தவாறே கேள்விகளைக் கேட்டார்.

“நோ....ப்ராப்ளம்..பாலு சார்” என்றவள், ‘நான் ஒரு ரிக்வெஸ்ட் பண்ணலாமா சார்” எனக் கேட்டாள்.

“சொல்லும்மா...!”.

“அவரை தனியாகச் சந்திக்கலாமா சார்?”

“என்னையும் கூட வரச் சொல்லியிருக்காரேம்மா....!”.

- “ஓ...அப்படியா... பரவாயில்லை சார்... இப்போவே போலாம்...!” என சொன்னவள், விதியின் மீது பழியைச் சுமத்திக் கிளம்பினாள்.

இருவரும் கான்ஃபெரன்ஸ் ரூமுக்குள் போனார்கள். சூர்யா அங்கு இல்லை. நெஞ்சம் படபடத்தது. அமைதியாக இருந்தாள். அங்கு இருக்கும் மிகப் பெரிய டேபிள் முதல் இருக்கையில் எதிர் எதிரே உட்கார்ந்தார்கள். நடுவில் தலமையான சேர் காலியாக இருந்தது. விஜிக்கு அந்த டேபிளைப் பார்த்ததுமே, தலை சுத்தியது. மிகப் பெரிய ஆளான சூர்யாவை, பார்ப்பதே கஷ்டம்! ஆனால், விஜியோட சூர்யாவின் ரியாக்ஷன் எப்படியிருக்கும் என்பதை யோசித்தாள்.

பாலு சார் அவளின் செய்கைகளைப் பார்த்தார். முதன் முதலாக சேர்மனைப் பார்க்கப் போவதால் இருக்கிற படபடப்பு என் நினைத்து பார்த்தும் பார்க்காமல் இருந்தது போல் விட்டு விட்டார்.

அந்த பெரிய ரூமுக்குள் உள்ளே நுழைந்து நடந்து வந்து கொண்டிருந்தான் சூர்யா. முதலில் விஜியைப் பார்க்கவில்லை.

விஜி அவனைப் பார்த்தாள். கட்டாயமாக அவன் அந்த வயதுக்கு, இளமையானவனாகவே இருந்தான். அதே நடை, தலை ஆட்டும் அழகு. சிரித்த உதடுகள். மார் தூக்கிய அசைவுகள். நடந்து வந்த வேகம்..... ஆனாலும், சிகரெட்டைப் பிடித்தவாறே நடந்து வந்தான். அதைப் பார்த்த விஜிக்கு “சூர்யா” என்று கத்திக் கூப்பிட வேண்டும் போல் இருந்தது. அடக்கிக் கொண்டாள்.

அவன் அருகில் வர வர தன்னையறியாமல் விஜிக்கு கண்ணீர் ததும்பியது.

சூர்யா அவர்கள் இருவருக்கும் நடுவே இருந்த இருக்கையில் உட்காரும் முன் 'குட் மார்னிங் மேடம்' எனச் சொல்லி அவள் முகத்தைப் பார்த்தான்.

'விஜி......." உருக்கத்துடன் அடிக்குரலில் கூப்பிட்ட சூர்யா உட்காரவே இல்லை. சட்டென எழுந்தான்.

விஜியின் கண்களில் கண்ணீர் வழிந்து நெஞ்சை நனைத்தது. அவள் தன்னுடைய தலையை மட்டும் மேலும் கீழும் மெல்ல ஆட்டிக் கொண்டேயிருந்தாள். அதில் "நான் உன்னுடைய விஜி தான்" என்று சொல்லும் படியாக இருந்தது.

சிறிது வினாடிகளே அங்கு மௌனத்தை உணர முடிந்தது.

"பாலு சார்... இவதான் விஜி சார்......!" என்று சொல்லும் போதே சூர்யாவின் கண்களிலும் கண்ணீர் கொட்டியது.

'காதலுக்குச் சின்னம் தேவையில்லை, இதயமிருந்தால் போதும்' என ஒரு காலத்தில் சொன்ன சூர்யாவுக்கு அந்த வள்ளுவர்கோட்டம் போட்டோ அந்த நேரத்தில் காதல் சின்னமாகத் தெரிந்தது. அதை வைத்துத்தான் அன்று சூர்யா விஜியைக் கண்டுபிடித்தான்.

இருவருக்கும் அப்படியே தழுவிக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. நாகரீகத்தை கருதி அமைதியானார்கள்.

சூர்யா கண் கலங்கி இருப்பதை பாலு ஒருநாளும் பார்த்ததேயில்லை.

இருவரும் இருந்த நிலைமையைப் பார்த்த பாலு சார், "சூர்யா....நான் அப்புறம் உங்களை மீட் பண்றேன்....ஐ வில் லீவ் த ரூம் ஃபார் யு!"" - என்று சொல்லிவிட்டு பெருமிதமாக அந்த ரூமை விட்டு வெளியேறினார்.

இருவரும், இன்னும் கண்கள் கலங்கியபடிதான் இருந்தார்கள்.

“ஏன் என்ன விட்டுப் போயிட்ட விஜி..?”

விஜியிடமிருந்து பதில் ஏதும் இல்லை.

“நான் உன்ன இந்த இடத்துல பார்ப்பேன்னு நினைக்கவேயில்ல விஜி. யாரோ இங்க சேர்ந்திருக்கான்னு நினைச்சேன். ஏன் என்னோட மூளைல விஜயலக்ஷ்மின்னால விஜியா இருக்கலாமோன்னு தோணல! வாட் எ சர்ப்ரைஸ்? உன்னை நான் என்னோட வாழ்க்கையில ரொம்ப மிஸ் பண்ணிட்டேன் விஜி.” சொன்னவன் அவளைப் பார்த்தவாறே நின்றான்.

“ஹாம்.......ஆனா..... ஒரு....நம்பிக்கை இருந்தது. நம்ம நேசிச்சது உண்மைன்னா, என் விஜி, என் கிட்ட வந்து பேசுவான்னு ஒரு பெரிய நம்பிக்கைல தான் இருந்தேன். தெய்வம் இருக்கு விஜி.” வந்த அழுகையை அவனால் கட்டுப் படுத்த முடியவில்லை.

என்னதான் இருந்தாலும், விஜி இன்று யாரோ ஒருவனின் மனைவிதானே. ரொம்ப அந்நியோன்யமாக சூர்யா நினைத்தாலும், அங்க ஒரு வேலி இருப்பதைப் புரிந்து கொண்டான். அந்த வேலியான வாழ்க்கையின் நீளத்தை அளக்க முயன்றான்.

“நீ... எப்படி இருக்க சூர்யா...?” வாயைத் திறந்தாள் விஜி.

“நான் நல்லாயில்லை ! நான் அன்னிக்கே செத்துப் போயிட்டேன். செத்துப் போனவனுக்கு வாழ்க்கையோட ரசம் தெரியவா போறது? என்ன விடு ! நீயாவது நல்லாயிருக்கயா விஜி?” - விட்டேத்தியாகப் பேசினான் சூர்யா.

“அப்படிக் கேட்காத சூர்யா...நான் வெடிச்சுடுவேன்.....அவ்வளவு சோகத்த அடக்கி வைச்சிருக்கேன். என் வாழ்க்கையே ஒரு நரகமா போச்சு. ஒரு நடைபிணமாத்தான் இருக்கேன் சூர்யா. நான் உன் கிட்ட கடைசியா சொன்ன வார்த்தைகள் இன்னும் எனக்கு நினைவிருக்கு. ‘நானும் நீயும் பாக்க முடியாம போகலாம்ன்னு’ எந்த வேளைல

சொன்னேனோ, அதேமாதிரி நடந்துப் போச்சு. பழசையெல்லாம் நினச்சு நினச்சு....என்னோட இதயமே பலவீனமா போச்சு சூர்யா." - மேலும் தொடர்ந்தாள்.

"நாம ரொம்ப வேகமா சேர்ந்தோம், அதே வேகத்தில பிரிஞ்சுட்டோம் சூர்யா ! உண்மை தானே, நீயே சொல்லு ? விஜின்னா என் உயிர்ன்னு சொல்லுவேயே.....! அந்த உயிரில்லாம எப்படி வாழ்ந்திருப்பேன்னு , நான் அடிக்கடி நினைப்பேன். அது என்னோட மனசுல ஆழமா பதிஞ்ச ஒரு வடு. உன்னைச் சேர எனக்கு கொடுத்து வைக்கலை."

அவர்களுடைய பரிபாஷையில் சொன்னவள் மேலும் பேசினாள்.

"எனக்கு ஒரு பொண்ணு இருக்கா. அவளப் பாக்கும் போதெல்லாம் கொஞ்சம் மனசுக்கு ஆறுதலா இருக்கும். நான் அவளை 'ஷீரூ'ன்னு தான் கூப்பிடுவேன். உன்னையே நினைச்சு வெச்ச செல்லப் பேர்தான் சூர்யா !" - என்று சிறிது பெருமைப் பட்டுச் சொன்னவள் சூர்யாவின் முகத்தின் மாற்றங்களை பார்க்க ஏங்கினாள்.

ஆனால் சூர்யா எல்லோர்க்கும் சொல்வதுபோல, "வாவ்....தட்ஸ் ஸோ நைஸ்! யூ ஆர் ப்ளெஸ்ட் டு ஹேவ் ஹர்....!" என ஆங்கிலத்தில் சொன்னான்..

இருவருமே சற்று நிலைக்கு வந்தார்கள்.

பிரிந்தவர்கள் கூடினாலும் நாகரிகம் கருதி அங்கே கொஞ்சம் செயற்கையாகவே இருந்தார்கள்.

"நீ ஏன் கல்யாணம் பண்ணிக்கல.....சூர்யா? நான்தான் காரணமா?" என்றாள். "அத விடு.... இப்போ அது முக்கியமில்லை!" என்றவன் தன்னுடைய பாணியில் சிம்பிளாக பேசினான்.

"ஓகே..... உன் ஃபேமிலையைப் பத்தி சொல்லு.... ஹஸ்பெண்ட் பாவமாத்தான் இருப்பார். உன்னோட வாய்க்கு அவரால ஈடு கொடுக்க முடியாதில்லையா.......! அதனால் ரொம்ப சாதுவாத்தான் இருப்பார்.

உனக்கு எவ்வளவு பசங்க...! எந்த ஊருக்கு முதல்ல போன? இப்போ இங்க என்ன பண்ற? வாட்ஸ் யுவர் ஹஸ்பெண்ட் டூயிங் ?" - என சொல்லி முடிக்கும் போது விஜி திரும்பவும் கண்ணீருக்குள் மூழ்கினாள்.

"என்னுடைய படிப்பையும், பொண்ணையும் தவிர்த்து......எங்கிட்ட இருந்த எல்லாத்தையும் தொலைச்சிட்டேன் சூர்யா!" என்றவள் அழுகையை சற்று கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வந்தாள்.

"ஹே....விஜி....என்ன சொல்ற"- ஆதங்கத்துடன் கேட்டான்.

"உள்ளம், உயிர், உடல் இந்த மூணுமே காதல்லயோ இல்ல தாம்பத்யத்திலோ ஒரே இடத்துலதான் இருந்துதான் ஆகணும் சூர்யா. உள்ளம் ஒருத்தர் கிட்டேயும், உயிர் எங்கிட்டேயும், உடல் இன்னொருவர் கிட்டேயும் இருந்தா வாழ்க்கை நிலையா இருக்காது. போரட்டம்தான் அதிகமா இருக்கும். அத நான் அனுபவிச்சேன்."

"என் கல்யாணம் மத்தவங்க டைமுக்காக பண்ணின கல்யாணமில்லையா சூர்யா! ஏழு வருஷத்துக்குள்ளேயே டைம் முடிஞ்சுப்போச்சு. டைவர்ஸும் ஆகிப் போச்சு. என்னோட கணவனுக்கு வந்த ஒரு லைஃப் டைவர்ஷன்லதான் எனக்கு ஒரு பொண்ணு பொறந்தா. டிராஃபிக் ஜாஸ்தியான வாழ்க்கையில எங்க இரண்டு பேரையும் சுமைன்னு, என்னோட கணவன் ஏதோ ஒரு ஸ்டாப்புல எங்களை இறக்கி விட்டுட்டான். யாருக்கும் சுமையாக வேணாமேன்னு வேலைக்கு வந்துட்டேன். உனக்கும் நான் சுமையாகக் கூடாதுன்னு, நான் உன்னை இதுவரை இந்த கம்பெனியில் சேர்ந்ததிலிருந்து பார்க்க முன்வரலை......" - என்று சொன்னவள் தன்னையாறியாமலேயே அருகிலுருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

"ஐயோ .... கடவுளே....இது என்ன சோதனப்பா....ஏன் எங்கள இப்படி வாட்டி வதைக்கறேன்னு தெரியலையே....!" சொல்லிக் கொண்டே சூர்யாவும் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான்.

“சூரியக்காந்திப் பூ எப்பவுமே சூரியன் இருக்கிற திசையதான் பார்க்குமாம். அதுமாதிரி நீ இருக்கும் திசைலதான் என்னோட வாழ்க்கையின்னு நினைச்சேன். பிச்சு எறிஞ்ச பூ மாதிரி நான் ஆயிட்டேன் சூர்யா. அது அழகாயிருந்தாலும் யாருமே தலையில் வச்சுக்க முன்வர மாட்டா. வாடி வதங்கணும்னு இந்த விஜியின் தலை விதி.” - சற்று வேதாந்தமாகப் பேசி நொந்து கொண்டாள்.

“அது போகட்டும். நீ ஏன் இன்னும் கல்யாணம் பண்ணிக்கல.....”

“மறுபடியும், அதே கேள்வியை கேட்டு....போரடிக்காத விஜி !”

இருவரும் நார்மலான சூழலுக்கு வந்தார்கள்.

“அது சரி, நீ எப்போ இந்தக் கம்பெனியில் ஜாயின் பண்ண?” -

“ஆல்மோஸ்ட் ஒரு வருஷம் ஆகிறது.”

“சீரியஸ்லி ! யூ மீன் ஒன் இயர் ? அப்போ ஏன் இன்னும் என்ன பாக்கணும்னு தோணல?” - ரொம்ப ஆச்சர்யத்தோடு வியந்து கொண்டான் சூர்யா.

“எனக்கு மனசு வரல சூர்யா.....”

“ஏன்? என்னை வெறுத்துட்டயா?”

“என்னோட ராசியினால உனக்கு ஒண்ணும் ஆகக் கூடாதேன்னுதான், உன்னை பாக்க முடியாம நின்னேன்!”

அதை சூர்யா பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை.

“அது போகட்டும்! வீடு எங்க?” -

“ஆதம்பாக்கத்துல இருக்கேன்.”

“பொண்ணு என்ன பண்றா ? என்ன பேரு வச்சிருக்க”

“அவ பேரு ரம்யா. சென்னைல ஒரு ஐ.டி கம்பெனில வொர்க் பண்றா. நாலு வயசுல அப்பாவை இழந்தவண்ணு சொல்லறதை விட

துறந்தவன்னு சொல்லலாம். இருந்தாலும், அவளுக்காகத்தான் உயிரை கையில பிடிச்சு வாழறேன். தட்ஸ் த எண்ட் ஆ்.ஃப் சாலமன் க்ரண்டி....." -எதார்த்தமாக வார்த்தைகளைலேயே முடித்தாள் விஜி.

"ஹோ....வெரி அன்்.ஃபார்ச்சுனேட் .... விஜி...! ஐ யம் ரியலி சாரி..!"

"இட்ஸ் ஓகே....விதி விளையாடும்னு கேள்விப் பட்டிருக்கேன். என்னோட வாழ்க்கைல ரொம்ப விளையாடிடுத்து சூர்யா. 'விதியும் விஜியும்' னு ஒரு படம் எடுத்தால் கட்டாயமா வெற்றிதான். இப்போ அவ்வளவு அனுபவம் எனக்கு" -விதியின் விளையாடல்களை ரசித்துச் சொன்னாள்.

அவன் அவள் பட்ட கஷ்டங்களையெல்லாம் கேட்டுவிட்டு, "அந்த ஒரு நிமிஷம் நீ உன் கல்யாணத்திற்கு தலையசைக்காமல் இருந்தா, உனக்கு நான் இன்னிக்கு இருந்திருப்பேன் விஜி." நொந்து கொண்டான் சூர்யா.

"எல்லாம் தலையெழுத்து... உன்னை நான் சேர கொடுத்து வெக்கல! அவ்வளவுதான்னு வாழறேன்.." எனச் சொன்ன விஜி, "உன்னப் பத்தி சொல்லவே இல்லையே சூர்யா ! நீ எப்படி இருக்க? முதல்ல கங்க்ராஜிலேஷன்ஸ்....இவ்வளவு பெரிய ஆளானத்துக்கு ...எனக்கு ரொம்ப சந்தோஷம்..." -

சூர்யாவுக்கு தன்னுடைய வெற்றியை யார் யாரோ பாராட்டிய போது வராத சுகம், விஜியின் வார்த்தைகளைக் கேட்டவுடனே தன் தலையில் பூமழை கொட்டியதைப் போல் உணர்ந்தான். இருந்தாலும் கௌரவமாக மறைத்தான்.

"நீ போன பிறகு, 'நான் இருந்தா எவனுக்கு ஆதாயம், செத்தா எவனுக்கு இழப்புன்னு' இருந்தவன்தான் நான்."

சொன்னவன் சிறிது மௌனமானான்.

"உன்னோட கல்யாணத்துக்கு நாலு நாள் முன்னாடிதான் எனக்கு ஒரு வேலை கிடைச்சது. அந்த வேலைய வெச்சுதான் உன்னைக்

கூட்டிண்டு வர முடிவெடுத்தேன். அதைச் சொல்லதான் உன்னோட அண்ணன் வீட்டுக்குப் போனேன். தெரு முனையிலேயே என்ன தடுத்துட்டாங்க. ஒரு சிலர் என்னை அடிச்சுட்டாங்க. ரத்தத்துல கிடந்தேன். அங்க ஒரு அசம்பாவித சம்பவமா, உன்னோட அண்ணனுக்கும் எனக்கும் சண்டையாகி போச்சு. அதுக்குள்ள உன்னோட கல்யாணமும் முடிஞ்சு போச்சு. உனக்காக வீட்டை விட்டு வெளில வாழ்ந்தேன். நீ போனதுக்கப்புறம், மறுபடியும் வீட்டுக்கே போனேன். கம்பெனி வேலையையும் கொஞ்ச நாள் பார்த்துண்டுதான் இருந்தேன். காயப் பட்டது உடம்புல இருந்தா வெட்டிடலாம் விஜி; யாருக்குமே தெரியாத அந்த மனசுல பட்ட காயம்; யார்கிட்ட வைத்தியம் பார்க்கறது? அது சரி போகட்டும். அதெல்லாம் பழைய கதை!"

சொல்லிக் கொண்டே, அந்த சந்திப்பில் இன்னொரு சிகரெட்டைக் கொளுத்தினான்.

விஜியும் அவனை ஆச்சர்யமாகப் பார்த்தாள். ஆனால் சிகரெட் பிடிப்பதை அவளால் கேள்வியேதும் கேட்க முடியவில்லை.

ஒரு இழுப்பு இழுத்து புகையை வெளியே விட்டவன், "எனக்கு நெஞ்சோடு நெஞ்சாக இருக்கும் ஒரே நண்பன் இந்த சிகரெட்தான்." சொல்லியபடியே இன்னொரு இழுப்பையும் சுவாரசியமாக இழுத்தான்.

"போதுமே....." என்று கொஞ்சம் செல்லமாகவும் சற்றே கட்டாயத்தோடும் சொன்னாள். அவன் அதற்கு எந்தவித சலனமும் காட்டவில்லை.

"நாம பேசின பேச்செல்லாம் காத்தோட போச்சு! குடிக்க ஆரம்பிச்சேன். என்னையே மறக்க நிறைய குடிக்க ஆரம்பிச்சேன். அதுல என்னை மறக்க முடிந்ததே தவிர்த்து உன்னை மறக்க முடியல. சிகரெட்தான் எனக்கு, இன்னைக்கும் துணை! ஊதாரித்தனமா வந்த சம்பளத்தை செலவிழிச்சேன். வாழ்க்கையே வெறுத்துப் போய்,

கொஞ்ச நாள்ல வேலையையும் விட்டுட்டேன். உறவுக்காரங்களுக்கு நடுவுல உதவாக்கறைன்னு பேரெடுத்தேன்."

"பொம்பளைங்களோட மனசு ரொம்ப ஆழன்னு, நீ என்ன விட்டுட்டுப் போனவுடனே நினைச்சேன். அது ஆழந்தான்; ஆனா ஒருத்தனை நினைச்சுட்டான்னா நெஞ்சுல சுமப்பான்னு அப்புறமா தான் தெரிஞ்சுது. உன்னை தப்பா நினச்சதை நினைச்சு நினைச்சு தனியா அழுவேன்."

"எனக்கு துக்கப் படறதுல ஒரு சுகம் கிடைச்சது விஜி...... அந்த சுகத்துல நீ எப்பவும் என் கூடவே இருந்துடுவ ! நான் 'விஜிதான் என்னுயிர்'ன்னு சொன்னது எல்லாமே கனவாப் போச்சு......! நேசம், பாசம் எல்லாமே ஒரு காலக் கட்டத்துல வேஷமாப் போச்சு....! அந்தரத்தில ஊஞ்சல் ஆடினா மாதிரியே இருக்கும் என் வாழ்க்கை ...எல்லாத்தையும் இழந்தேன்...... குடும்பத்தோட அன்பையும் இழந்தேன்... என் அக்கா என்ன வெறுக்க ஆரம்பிச்சா...என் அப்பா அம்மா என்ன அனுதாபத்துல பாக்க ஆரம்பிச்சாங்க. ஆனாலும், யாரும் என்னோட மனசை ஏத்துக்க விரும்பல. எல்லாரும் என்ன வெறுக்க ஆரம்பிச்சாங்க... நம்பளோட குமார், கண்ணன், மற்றும் லதாவைத் தவிர....நான் யாருக்குமே வேண்டாதவனா ஆயிட்டேன்." சொல்லும்போதே சூர்யாவின் கண்களில் கண்ணீர் வந்தது.

"எனக்குள்ள உன்ன வச்சு ஒரு கற்பனை வாழ்க்கையை இன்னிக்கும் வாழ்ந்துண்டுருக்கேன். அதுல நீதான் எல்லாமே! நான் உன்னை மறக்கலை! யாரையும் நினைச்சதுமில்ல! இப்போ புரியறதா, நான் ஏன் கல்யாணம் செஞ்சுக்கலைன்னு! - அவர்களின் பரிபாஷையிலே சொன்னான்.

"சூர்யா.....!" என்றவள், வேறு எதையும் பேசமுடியாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஒருநாள் ராத்திரி ரொம்ப யோசிச்சேன். நீ இருந்திருந்தா இந்தக் குடியை விட்டுடுன்னு சொல்லியிருப்ப ! அப்போ, உனக்குக் கட்டுப்

பட்டு, நீ இருக்கறதா நினைச்சு, இந்த குடியை குறைக்க ஆரம்பிச்சேன்!. ஆனா, இந்த சிகரெட்டைதான் என்னால விட முடியலை!" - சொல்லியபடி தலையைக் குனிந்தபடி சோகமானான்.

சூர்யாவை அந்த சமயம் இந்தியாவிலே இருக்கும் ஒரு பெரிய தொழிலதிபராகப் பார்க்கவில்லை. தன்னுடைய சூர்யாவாகத்தான் பார்த்தாள்.

"ஹே.....ப்ளீஸ்...அழாதே...!" என்றவள் தானும் கண்ணாடியை எடுத்துவிட்டு தன் கண்ணீரையும் துடைத்துக் கொண்டாள் விஜி.

"இருந்தாலும் குமாரை வெச்சு, ஊர் ஊரா உன்னைத் தேடி அலஞ்சேன். என்னோட சக்தியெல்லாத்தையும் இழந்தேன். வெறும் கூடா தான் வாழ்ந்தேன்."

இன்னும் குடிச்சேன்.....! குமார்தான் என்னை அந்த கொடுமைகள்லேந்து காப்பாத்திக் கொண்டுவந்தான். லதா எனக்காக உண்மையா வருத்தப்பட்டா. குமாருக்கு சொல்லி சொல்லி, என்னை பழைய சூர்யாவா பாக்கணும்னு அவ தான் முயற்சி எடுத்தா. கண்ணன் போன் பண்ணி திட்டுவான். அதுக்கு மேல அவனால ஒண்ணும் சொல்லவும், செய்யவும் முடியலை. அவனுக்கு தெரியவும் தெரியாது, பாவம்!"

"ஒருநாள் குமார் வந்து என்னோட பேசினான். நான் நானாக வாழற்துக்கு எனக்கு கத்துக் கொடுத்தான். விஜி போன பாதை வேற பாதைன்னு சொல்லி சொல்லி என்ன எனக்கே புரிய வெச்சான். அது மூடப்பட்ட கதவுன்னு எனக்குப் புரியும்படியாகச் சொன்னான். எனக்குள்ள திறமைகளை உலகத்துக்கு காட்டணும்னு உறுதியா இருந்தான். என்னோட திறன், திறமைல எனக்கே அப்போ நம்பிக்கையில்லை. அவனுக்கு நம்பிக்கை இருந்தது. தொழில் தொடங்க காசு கொடுத்தான்." என்றவன் சற்று அமைதியானான்.

“என்னோட அதிக நேரம் செலவு பண்ணான். தினமும் இருந்த குடி பழக்கத்தை’ விட்டு விலக உதவி செஞ்சான்.. என்னோட சந்தோஷத்த கொண்டாட அடிக்கடி வருவான். இல்லாத என்னோட வாழ்க்கைக்கு டெய்லி வாழ்த்து சொல்லுவான். என்னோட மௌனத்தை கலைக்க எவ்வளவோ உதவி செஞ்சான் குமார். ‘நான் இருக்கேண்டா உன் சோகத்தை கேட்க’ ன்னு சொன்ன அவங்கிட்ட என்னுடைய கற்பனை வாழ்க்கைக் கதையை முழுசா சொல்லிருக்கேன். இதுல லதாவோட பங்கும் அதிகமா இருந்தது.”

நான் உன்னை வெச்சு வாழற கற்பனை வாழ்க்கைல, நீ போட்ட பூவிலங்கை நான் இன்னும் மறக்கலை. எதுக்கும் அவசரப்படாதேன்னு நீ அன்னைக்கு வள்ளுவர் கோட்டத்துல வெச்சு சொன்னது எனக்கு ரீங்காரமா ஒலிச்சிண்டே இருக்கும். அந்த விலங்கை உடைக்கக் கூடாதுன்னுதான் இன்னிக்கும் வாழ்ந்துண்டுருக்கேன். உன்னோட நினைப்பு வரும்போதெல்லாம், என்னோடவே இருக்கறது இந்த சிகரெட்தான். அதனாலத்தான் அதை என்னால விட முடியலை.”

“இப்போ ஆத்துல வர்ற வெள்ளம் மாதிரி உங்கிட்ட பேசறேனே… இந்த பேச்சுக்கள்லாம், இவ்வளவு வருஷமா மனசுக்குள்ளேயே வெச்சுருந்த குமுறல்கள்.

இன்னொரு சிகரெட்டை பற்ற வைத்தான்.

“போதுமே… சிகரெட். எவ்வளவு பிடிக்கறடா?” என பழையபடி ஒரு கேள்வியைக் கேட்டாள்.

“எதுக்கு விடணும். நான் இதை விட்டா, நீ எனக்கு கிடைச்சுடுவியா? நீ பிரிஞ்சு போனப்போ வந்த விஷயம். இதனால ஒண்ணும் பலனில்லை, வெறும் சைகலாஜிகல் ஃபீலிங்க்ன்னு எனக்குத் தெரியும். இருந்தாலும், உன்னை மறக்காம இருக்க வெக்கறது இந்த சிகரெட்தான். அதனால, எனக்கு இதை விடப் பிடிக்கலை. இதுனால, நான் செத்துப் போயிடுவேன்னு இருந்தா, நான் அதுக்கும் ரெடியா இருக்கேன். நான் வாழ்ந்தா எவனுக்கு லாபம்.

செத்தா எவனுக்கு நஷ்டம்." சூர்யா பேசியது கொஞ்சம் ஆத்திரத்தோடு பேசியபடிதான் இருந்தது.

குமார் கொடுத்த உயிருக்கு ப்ரதிபலனா, என்னை கொடுத்து மத்தவங்களுக்காக வாழணும்னு நினைக்சேன். அப்படி வந்ததுதான் இந்த 'வியெஸ் க்ரூப்'. இந்த பெயரும் நமக்காக வைத்ததுதான் விஜி. 'வி-யெஸ்" - விஜி-சூர்யா விலிருந்து உருவானதுதான். மத்தவங்க இதை விஸ்வநாதன் சூர்யான்னு புரிஞ்சிப்பாங்க!" தன்னுடைய டைரியின் பக்கங்களை புரட்டிப் போட்டுச் சொன்னான்.

"அது சரி....! அப்பா, அம்மா, வித்யால்லாம் எப்படியிருக்கா?'

"அம்மா போயிட்டா. அப்பா வித்யாவோட லண்டன்ல இருக்கார். அவருக்கு தோணித்துன்னா வருவார். வித்யா இஸ் ஃபைன் ! செட்டில்ட் இன் லண்டன். நான் இப்போ லண்டனுக்கு போய் பாத்துட்டு வந்தேன்"

லதா, கண்ணன், குமாரெல்லாம் எப்படியிருக்கா?" - சற்று ஆவலாகவே கேட்டாள்.

"ம்ம்...ம்...தெ ஆர் ஆல் எக்ஸெலென்ட்...தட் தட் மேன் தட் தட் லைஃப்" - அவனுடைய ஸ்டைலில் சிரித்தான்.

"அவங்களோட பேசலாமா..." சொன்னவன் விஜியின் அனுமதியை எதிர்பார்க்கவில்லை.

மூவரையும் தன்னுடைய செல்போனிலிருந்து வீடியோ கான்ஃபரன்ஸ் காலில் உடனே வரவழைத்தான். அதை அங்கிருக்கும் பெரிய டிவியில் கனெக்ட் செய்தான். ஸ்பீக்கரில் போட்டான். விஜியை கேமிராவிலிருந்து மறைத்தான்.

"என்னடா பீடி.... உனக்கு இன்னிக்கு வேலையே இல்லையா? அப்போதான் கூப்பிடுவே? வேலை இருந்தா கண்டுக்கவே மாட்ட ! காலங்காத்தால சிகரெட் வேற... எப்ப பாரு...வாயில பீடி......அது சரி...!

என்ன விஷயம்? - சலித்தவாறே லதா அவன் சிகரெட் பிடிப்பதையும் திட்ட ஆரம்பித்தாள்.

"எப்படிடா இருக்கே...!" கேட்ட கண்ணனின் வயதான உருவம் தெரிந்தது.

"சொல்டா... இப்பதான் உன்னைப் பாக்க கிளம்பலாம்னு இருந்தேன்." என்றபடி குமாரும் லைனுக்கு வந்தான்.

"நமக்கெல்லாம் ஒரு ஆச்சர்யமான விஷயம்.... நம்ம ஆ.ஃபிஸ்ல நம்ம கூட யார் இருக்கா பாருங்க....!" - சந்தோஷத்துடன் விஜியையும் வீடியோவில் கவர் பண்ணினான்.

"அடிப்பாவி..... இவ எப்படி அங்க வந்தா? பதறினாள் லதா.

"யாரு....விஜியா? என்றான் கண்ணன்.

"ஹே.... விஜியா இது...." என்று ஆச்சர்யமாக கேட்டான் குமார்.

"ஹலோ ஆல்.....எப்படியிருக்கீங்க.....?" அவர்களைப் பார்த்த சந்தோஷத்தில் பேசினாள் விஜி.

"கழுதை...அதெல்லாம் இருக்கட்டும்டி. ஏண்டி சூர்யாவை தனியா விட்டுட்டுப் போன? அவன் உனக்காக வருவேன்னு சொன்னான் இல்லை ? எப்படி நீ போகலாம்? எங்க எல்லாருக்கும் உன்மேல வருத்தம்தான் விஜி."

தெளிவாக அடித்துப் பேசினாள் லதா.

"அதெல்லாம் முடிஞ்சு போன கதை. திரும்ப கிளப்பாத நீ..!" தன் தங்கையை ஒரு மிரட்டல் போட்டுவிட்டு, "நல்லாயிருக்கியா விஜி....?" பழைய நட்பில் கேட்டான் கண்ணன்.

"உன்ன பாக்க சந்தோஷமா இருக்கு ! எந்த ஊர்ல இருக்க விஜி?" என்று பொதுவாக ஒரு கேள்வியைப் போட்டு விட்டு பதிலுக்கு நின்றான் குமார்.

“ஏதோ இருக்கேன். நான் சென்னைல தான் இப்போ இருக்கேன். எனக்கு ஒரு பொண்ணு இருக்கா. காலேஜ் ஃபைனல் இயர் படிக்கறா. எனக்கு டைவர்ஸ் ஆயிடுத்து. சூர்யா கம்பெனில தான் ஒரு வருஷமா வேலை செய்யறேன். ஆனா, இன்னிக்குத்தான் சூர்யாவ பார்த்தேன்.....” பேசிக் கொண்டிருந்தவளை இடைமறித்த லதா...

”என்னடி...சொல்ற.... ஒரு வருஷமா இங்கயே வேலை செய்யறே.... சூர்யாவையும் பாக்கல.... நாங்களெல்லாம் இருக்கோமா செத்தோமான்னு நீ தெரிஞ்சுக்க விரும்பல..... உனக்கு என்ன ஆச்சு.... பைத்தியம் பிடிச்சுடுத்தா...? சீரியஸா கேக்கறேன் விஜி !”

“உங்க கோபத்துக்கெல்லாம் நியாயம் இருக்கு. என்னோட சூழ்நிலை அப்படி! நேர்ல பார்க்கும்போது சொல்றேன்.”

குமார் குறுக்கிட்டு ‘ ஐ யம் வெரி சாரி... விஜி.... கவலைப் படாத... நடந்ததையே நினைக்காத. எல்லாம் சரியா ஆயிடும். ” அவளை சற்றுத் தேத்தினான்.

“விஜி.... வாழ்க்கைல இதெல்லாம் சகஜம். தலைல என்ன எழுதி இருக்கோ அது தான் நடக்கும். எதுக்கும் துக்கப் படாத... நாங்க எல்லாரும் இருக்கோம். வி வில் மேக் இட் பர்ஃபெக்ட். வருத்தப்படாத.....!” ஆறுதலாகச் சொன்னான் கண்ணன்.

இப்படியாக சிறிது நேரம் பழங்கதைகள் ஓடி அந்த வீடியோ பேச்சு முடிவுக்கு வந்தது.

சூர்யாவும், விஜியும் தனியாகப் பேசினார்கள்.

“சூர்யா... எனக்கு சில விஷயங்களை உன் கிட்ட தெளிவா பேசணும்.”

“ம்..ம்...ம்.. சொல்லு”

ஒண்ணு, உனக்கு நான் செஞ்ச பாவத்துக்கு ப்ரதிபலனா ஒரு சேவகனப் போல இந்தக் கம்பெனியிலேயே உழைக்கணும்.

ரெண்டாவதா, நம்ம விஷயங்கள் நமக்குள்ளேயே இருக்கணும்னு கேட்டுக்கறேன். மூணாவதாக, என் பொண்ணு ரம்யாக்கு கல்யாணம் ஆகற வரைக்கும் என்னுடைய 'பர்சனல் போகஸ்' அதில்தான் இருக்கணும்னு ஆசைப் படறேன்." தெளிவாக சொன்னாள் விஜி.

"ஓகே...." என்று ஒரு வார்த்தையில் முடித்தான்.

"உன்னோட ரெண்டாவது பாய்ண்ட்....! என்னோட கதை முழுசா பாலு சாருக்கு தெரியும். அவர் எனக்கு அண்ணன் மாதிரி. ரொம்பப் பழக்கம். அவர்கிட்ட நான் எதையும் மறைச்சது கிடையாது. இதை நான்.....உனக்கு முன்னாடியே சொல்லிடறேன்."

"இன்னொன்னு சொல்ல மறந்துட்டேன். இனி நான் உன்னோட நல்ல ஃபிரண்ட் ஆக இருப்பேன்..!" விஜி சொன்னாள்

பதிலுக்கு சூர்யா சிரித்து விட்டான். "முன்னாடி ஸிஸ்டர்ன்னு ஸ்டார்ட் பண்ண ...இப்போ... ஃபிரண்ட் சீன் ...ஹா...ஹா....ஹா....... பாக்கலாம்...." அந்த பழைய சூர்யா சிரிப்பை சிரித்துவிட்டு, "போலாமா?" என்றான்.

"இன்னொரு கேள்வி. என்டரன்ஸில் மாட்டியிருக்கிற வெள்ள ஃப்ரேம் போட்ட போட்டோவில் ஒரு பொட்டு மட்டும் ஃப்ரேம் ஆகியிருக்கே, அதற்கு என்ன அர்த்தம்?"

"நீ அதை பார்த்தாயா?" "நான் டெய்லி அதைப் பார்த்தவுடன்தான் ஆஃபிஸிலேயே நுழைவேன். அது எங்கம்மா கடைசியாக ஹாஸ்பிடல்ல இருந்த போது இருந்த பொட்டு. ஆபரேஷன் தியேட்டருக்கு முன், என்னிடம் எடுத்துக் கொடுத்தாள். வெளியே வரும்போது அவள் என்னுடன் இல்லை. அவள் ஞாபகார்த்தமாகத்தான் அங்க வெச்சுருக்கேன், ஒரு ஃப்ரேம் போட்டு.... !"

இருவரும் ரூமை விட்டு ஒன்றாக வெளியே சென்றார்கள்.

மனதிலிருந்த பெரிய பாரம் இறங்கியதை உணர்ந்தாள் விஜி.

பகுதி - 9 தொடறும் தலைமுறை

'பதவிக்கு வந்த உடனே நோயாளி கூட சுறு சுறுப்பாயிடுவான்' என்று கண்ணதாசன் சொன்னது போல, ஒருவருக்கொருவர் பார்த்து பேசியதும் இருந்த துக்கங்களை விட்டு இயல்பாக இருந்தார்கள். ஆ.்.பீஸ் வேலைகள் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தது. விஜியும் மிகவும் சிறப்பான முறையில் வெற்றிகளையும், லாபத்தையும் தரும்படியாக உழைத்தாள்.

நடு நடுவே சூர்யாவும், விஜியும் பார்த்துக் கொண்டதே அவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. யாருக்கும் தெரியாமல் அழுவது என்பது இப்போது இல்லாமல் போனது. தனியாக பேசுவதற்கு அலுவலகத்திலேயே டைம் கிடைத்தது. அதுவரையிலும், நண்பர்களாகவே இருந்தார்கள்.

சூர்யா விஜியிடம் எந்த ஒரு அனுகூலத்தையோ அல்லது சலுகையையோ தனிப்பட்ட வழியில் எதிரும் பார்க்கவில்லை. வியாபாரத்தை எப்படி முன்னேற்றுவது என்ற முறையிலேயே இருந்தான்.

விஜியும் தான் நினைத்தபடி ரம்யாவின் வாழ்க்கையில் குறியாக இருந்தாள். நல்ல சம்பளம் இருந்தாலும், சிறியதாகவே வாழ்க்கையைத் தொடர்ந்தாள்.

மாதா மாதம் சூர்யா நண்பர்களுக்காக ஒருநாள் அவர்களை வரவழைத்து பார்ட்டி கொடுப்பது வழக்கம்.

இந்த முறையும், சென்னையிலுள்ள ஷெரட்டன் ஹோாட்டலில் சூர்யா தனிப்பட்ட நண்பர்களுக்காக அவர்களது குடும்பத்துடன் வருவதற்காக ஒரு பார்ட்டி அரேஞ்ச் செய்தான். அதில் லதா, கண்ணன், குமார், பாலு சார் மற்றும் விஜி, இவர்களையெல்லாம் குடும்பத்தோடு வரச் செய்தான்.

சாயங்கால வேளை. தனி இடத்தில் பார்ட்டியின் அமைப்பு. டிரைவர் கார்த்திக்கும், ஆ∴பீஸ் ப்யூன் ராமகிருஷ்ணனும், மற்றும் அட்மினில் வேலை செய்த உப்பிலியும் அந்த பார்ட்டியின் ஏற்பாடுகளைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

முதலில் வந்தவர் பாலு சாரும், அவரது மனைவியும்தான். அவரது மகன் வெளிநாட்டில் செட்டிலாகியிருந்தான்.

அதற்குப் பிறகு சூர்யா தானே காரை ஓட்டிக் கொண்டு வந்துவிட்டான்.

“என்ன சந்திராக்கா? நல்லாயிருக்கேளா? பி.பி, ஷுகர், கால் வலி, கை வலி, ஹார்மோன்ஸ் ட்ரபுள், இதெல்லாம் எதுவுமே இல்லாம பல்லாண்டு இருக்கணும்னு நான் ப்ரார்த்தனை பண்ணிக்கிறேன்.” என்று பாலு சார் மனைவியின் காலைத்தொட்டு நமஸ்காரம் செய்தான் சூர்யா.

பதிலுக்கு அவர், “கடவுள் புண்ணியத்துல அதெல்லாம் ஒண்ணும் இல்லப்பா. நீ இன்னும் கல்யாணம் பண்ணிக்காதது ஒண்டிதான் என்னோட வருத்தம்.” என்றாள் பாலு சாரின் மனைவி சந்திரா.

“அட, நீங்க வேற, கிழவனுக்கு எதுக்கு கல்யாணம்?” என்றான்.

‘அதென்ன, அப்படி சொல்லிட்ட சூர்யா. கடவுள் திரும்பவும் உன் விஜியை ‘எலுஜிபிள் லேபிள்’ குத்தி உன்கிட்ட கொடுக்கறான் பாரு.... இப்போவாவது அதைப் பற்றி யோசிக்கலாம்.” என்றார்.

“ஐய்யோ...அந்தமாதிரியெல்லாம் எனக்கு எண்ணமே கிடையாது. சரியாவும் வராது....அக்கா!” என்று சொல்லிவிட்டு மெதுவாக பாலு சாரை நோக்கி நடந்தான்.

“என்ன சார், அக்கா இந்த மாதிரி கேக்கறா? நான் கொஞ்சம் கூட அந்த மாதிரி நினைக்கல...!” என்றான்.

“நாங்க அதுமாதிரி நினைக்க நீ தடை போட முடியாதே சூர்யா. எங்களோட எண்ணத்த சொன்னா! எனக்கு அவ கேட்டதுல தப்பேயில்லன்னுதான் சொல்லுவேன். அஃப் கோர்ஸ், என் பொண்டாட்டின்னு சொல்லல ....” என்று இழுத்துக் காட்டினார்.

“பாலு சார். வேற ஏதாவதை பேசலாம் சார். அவ வரும் நேரமாச்சு. அவ காதுல விழுந்தா வம்பா போயிடும் சார்.” என்றவன் வாசல் பக்கத்தையே பார்த்துக் கொண்டு பேசினான்.

“கார்த்திக் ..... விஜயலக்ஷ்மி மேடம் எப்படி வர்றாங்கன்னு கேட்டயா?” என்று டிரைவர் கார்த்திகிடம் விசாரித்தான் சூர்யா.

“ஸார், அவங்க பொண்ணையும் கூட்டிட்டு ஆட்டோல வர்றதா சொன்னாங்க. நான் வேணும்னா எங்க இருக்காங்கன்னு கேட்கட்டுமா?” என்றான்.

“வேணாம்... அவங்களே வருவாங்க...!” என்றவன் வாசலையே பார்த்துக் கொண்டிருந்தான்.

மோகனின் வரவைப் பார்த்தான். பின்னாலேயே பிள்ளை ஜெயந்த். அவனுடன் பெண் சஞ்சனா. அதன் பின்னாலேயே லதா மோகன்.

“வந்துட்டாடா.... குட்டிப்பாட்டி......வாயாடி.... வள்ளி..!” என்று சொன்னவன் வேகமாக நடந்து லதாவின் கணவன் மோகனைக் கட்டிப் பிடித்தான்.

“என்ன மாப்பிள்ளை சார் .... எப்படியிருக்க.” என்று சொல்லிக் கொண்டே, அவனின் தொப்பையை தடவி விட்டான். என்ன......கொஞ்சம் குண்டாயிட்ட! வீட்டுல கேவலமான சாப்பாடில்லாம, ஹோட்டல்ல நல்ல சாப்பாடு சாப்பிடறியா? அதான் இப்படி.......” என்று சொல்லி பெரியாதாக சிரித்தான்.

“எனக்கென்னப்பா.... நல்லா இருக்கேன். இல்ல...இல்ல.... லதாவின் சாப்பாடுதான்; என்ன இப்பொ கொஞ்சம் நல்லா சமையல் செய்யறா..!” என்று சொன்ன மோகனும் சிரித்துக் கொண்டான்.

“டேய் பீடி..... ரொம்ப தெனாவட்டு....” என்று சூர்யாவையும் இறுக கட்டிக் கொண்டாள் லதா. லதாவின் கண்களில் ஆனந்த கண்ணீர் கன்னத்தில் வழிந்தது.

“குச்சி .... நீயும் குண்டாயிட்ட.... மோகன் சாப்பாடா?” என்று மாற்றிச் சொன்னான்.

ஜெயந்தை கட்டிக் கொண்டான். “பேச கூடாதுன்னு வச்சுருக்கயாடா? உன் பொண்டாட்டி வந்தவுடனே நீ ரொம்ப பேசிப் பாத்தேன், அவ்வளவுதான், பிச்சிப் புடுவன் பிச்சி... !” என்று விளையாடினான்.

பின்னாடியிலிருந்து சூர்யாவை யாரோ தட்டினார்கள். திரும்பிப் பார்த்தான். லதாவின் பெண் சஞ்சனா சற்று கோபத்துடன் இருந்தாள்.

“அட... நம்ம குட்டிப் பாட்டி! ஏண்டி, உங்கம்மா ஒண்ணு உலகத்துக்குப் போதாதா? நீ அவளுக்கு சரியான வாரிசு..... ! ரெண்டு பேரும் சேந்தா எல்லாருக்கும் கஷ்டம். இப்போ புரியுது, மோகன் ஏன் பாவமா இருக்கான்னு! அப்புறம் ... ஸ்கூல், படிப்பெல்லாம் எப்படி?” என்று கேள்வி கேட்டவாறே அவளை அன்புடன் கையைப் பிடித்துக் கொண்டுப் பேசினான்.

“அதிருக்கட்டும். யாரோ விஜியாமே. அவ உனக்கு ஸ்பெஷலாமே. அவ இன்னும் வரலையா?” - என்று கேட்டாள். சூர்யா லதாவைப் பார்த்து ஒரு முறை முறைத்தான். “அது.... அவாளெல்லாம் நல்ல ஃபிரண்டு, இப்போ வருவாடா...... “ என்று சமாளித்தான்.

“உனக்கு யார் கிட்ட என்ன பேசனும்னே தெரியாதாடி! குழந்தை கிட்ட போயி....... சரியான மெண்டல்தான் நீ.......” என்று சூர்யா லதாவை செல்லமாக கடிந்து கொண்டான்.

“போகட்டும் விடு.......மத்தவங்க எல்லாரும் எங்க இன்னும் வரலை! எல்லாம் சோம்பறிங்க.....” என்றவள் வாசலைப் பார்த்தாள் லதா. யாரும் வரவில்லை.

சிறிது நேரத்தில் குமார் அவன் மனைவி சித்ராவுடன் வந்தான். “அண்ணா, எப்ப்டியிருக்கேள்? ரொம்ப நாளாச்சு. எங்க மலேஷியா பக்கமே காணும்?” என்ற கையைக் கொடுத்தபடியே பேசினாள் சித்ரா. “எங்கம்மா... நேரம் கிடைக்கல... இவன்தான் என் கூடவே இருக்கானே. அதையும் தவிர, இனிமே நீங்களும் சென்னைதான்...!” என்றான் சூர்யா. “அவர் இருந்தா என்ன, எங்களையெல்லாம் தெரியலயா?” என்று மடக்கினாள்.

“எங்கடா ப்ரியா என்கிற ப்ரியங்கா?” என்றான். “இதோ, காரை விட்டுட்டு வருவா.. “ என்றான் குமார். “ரெடியாடா ... ஆஸ்ட்ரேலியா ட்ரிப்?” என்றான் சூர்யா. “ம்...ம்...ம்ம், நீ சொல்லுடா!” என்று சொல்லி குமார் நிறுத்தினான்.

அதற்குள் அங்கிருந்தவர்கள் ஒருவருகொருவரிடம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ப்ரியங்காவும் வந்தாள்.

“ப்ரியங்கா பட்டு, வாடா ! என்ன படிப்பரசி....? உன்னோட படிப்பு அசத்தலாமே? உங்கப்பன் சொன்னான். நீ மட்டும் அதைப் படிச்சா....... “ என்று பேசிக் கொண்டிருக்கும்போதே கண்ணனும், சிறிது பின்னாடியே விஜியும் சேர்ந்து வந்தார்கள்.

ப்ரியங்காவிடம் சொல்ல வந்ததை சுருக்க முடித்துக்கொண்டு “சாரி’ கேட்டுவிட்டு, வந்தவர்களை வரவேற்க எழுந்தான்.

'வாங்கோ எல்லாரும்' என்று சொன்ன சூர்யா எல்லோரையும் ஒரே கோணத்தில்தான் பார்த்தான்.

"யப்பா... இந்த பொம்பளைக்களோட எங்கேயும் கிளம்பக் கூடாதுடா. எல்லா இடத்துலயும் லேட். முடியல ! என்று ஒய்யாரமா அலுத்துக் கொண்டான் கண்ணன்.

"இவர் எப்பவுமே இப்படித்தான்! இவரோட வெளில போகவே கூடாதுன்னு டிசைட் பண்ணிட்டேன் சூர்யாண்ணா. மனுஷன் போறடிச்சுருவான்" என்று பதிலுக்குக் கொடுத்தான் கண்ணனின் மனைவி விமலா.

கூடவே இருந்த கண்ணனின் பையனிடம் "என்னடா பத்ரி.... இங்லாண்ட் நேத்து சூப்பர் வின், பாத்தியா? அதோட அலிஸ்டெர் குக்க விட கெவின் பீட்டெர்சன் முன்னுறு ரன் ஜாஸ்தி...." என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே கண்ணன் குறுக்கிட்டு 'அப்படிப் பாத்தா ஆன்ட்ரூ ஸ்ட்ராஸ், குக்கை விட இரணூத்தி அம்பது ரன் லீட், அதுக்கு என்ன சொல்ற ...?" என்றான். குமாரும் சேர்ந்து கொண்டான். "ஆயிரம்தான் சொல்லு.....ரிக்கி பாயிண்டிங்க் கேம் இன்னிக்கு எவனுக்கும் இல்லடா?" என்றான். உடனே பத்ரி, "ஏன் அங்கிள், டெண்டுல்கர் மாதிரி உலகத்துல இன்னொரு ப்ளேயர் கிடையாது" என்றான்.

பேசிக் கொண்டிருக்கும்போதே விஜியும் ரம்யாயும் அருகே வந்து விட்டார்கள்.

விஜி அன்றைக்கு மிக அழகான மற்றும் சிம்பிளான புடவையை அணிந்திருந்தாள். அவள் வயதுக்கேற்ற அலங்காரம். கேசத்தை வாரி விட்ட அழகு. மற்றவர்களுக்கு தெரிவதைப் போலிருந்த (குறிப்பாக சூர்யாவுக்கு) சிகப்பு பொட்டு. தலையில் கொஞ்சமாக மல்லிப்பூ. புதிய கண்ணாடி ஃப்ரேம். அதிலிருந்து அழகாக தெரிந்தது விஜியின் கண்கள். பெண்களின் கண்களை வருணிக்காத கவிஞனே இருக்க முடியாது என்பார்கள். விஜியின் கண்கள் எப்போதுமே சற்று நீல வண்ணம்

கலந்தது போலிருக்கும். அதில் ஒரு அழகு. அவ்ளுடைய அந்த வயதின் பொலிவு மற்றவர்களை பொறாமைப் பட வைக்கும். அன்று அவளது அழகு மற்றவர்களை அவளை தனியாகப் பார்க்கச் செய்தது. ரம்யாக்கு அவள் அம்மா அழகாக இருக்கிறாள் என்பதில் எப்போதுமே ஒரு பெருமை உண்டு. விஜி அந்த இடத்தில் மிடுக்காக நடந்து வந்தாள். 'எனக்கு இவளைத் தெரியும்' என்று மற்றவர்கள் சொல்லி பெருமைப்படும் அளவிற்கு விஜி அழகாக இருந்தாள்.

அதற்குள் லதா ஓடி வந்து விஜியைக் கட்டிக் கொண்டாள். விஜியும் மனதாரக் கட்டிக் கொண்டாள். இருவரும் ஆனந்தத்தில் அழுதனர்.

அதைப் பார்த்த நண்பர்கள் சூர்யா, குமார் மற்றும் கண்ணன் - மூவருமே விஜிக்கும் லதாவுக்கும் அருகே நின்றார்கள். அனைவரும் கண் கலங்கினார்கள்.

குமாரும், கண்ணனும் விஜிக்கு கை கொடுத்தார்கள். சூர்யா மட்டும் "வா விஜி" என்று சொல்லி இரு கரம் கூப்பினான். பக்கத்திலுருந்த ரம்யாக்கு எல்லாரும் கை கொடுத்தார்கள்.

"ஹாய்... ஹாய் ..." என்று சொன்ன ரம்யாவுக்கு எல்லோரும் புதியதாய் இருந்தார்கள். பாலு சாரும் அவரது மனைவியும் வணக்கம் சொன்னார்கள்.

கண்ணன் ரம்யாயிடம், "நாங்களெல்லாம் அந்த காலத்து ஃப்ரண்ட்ஸ். இப்போ சூர்யா ரொம்ப பெரிய ஆளு. அவன மத்தவங்க பாக்கர்தே கஷ்டம். நாம எல்லாரும் ஈசியா பாத்துட்றோம். உங்கம்மாவும் எங்களோட பெஸ்ட் ஃப்ரெண்ட். நடுவிலே கொஞ்சம் பிரிஞ்சிட்டோம். இது குமார், இது பாலு சார்....." என்று ஒவ்வொருவராக அவனுடைய பரிபாஷையிலேயே அறிமுகம் செய்தான்.

“இந்த கும்பல்லேயே ‘அப்பாய்ண்ட்மென்ட்’ இல்லாம பாக்க முடிஞ்ச ஒரே ஆள் நான் மட்டும்தான். ரொம்ப ஈஸியா பாக்கலாம். ஒரு போன் கால் போதும். அதுக்காக நான் மக்குன்னு நினைச்சுடாத..... இவா எல்லாரையும் விட ப்ரூடென்ட்டா பிஹேவ் பண்றது அடியேந்தான்...... ” என்றான் கண்ணன். அனைவரும் பலமாக சிரித்தார்கள்.

அனைவரும் பேசிக் கொண்டிருந்தனர் அவர்களுக்கு வேண்டிய ஆரம்ப உணவை ஆர்டர் செய்தனர். பெரியவர்கள் கும்பல் போரடிக்கும் என்று பிள்ளைகள் எல்லோரும் தனியாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

படாரென்று கண்ணன் ‘எல்லாரும் கேளுங்கோ” என்று விரல் சொடுக்கியவாறே சொன்னவன் அந்த இடத்தில் அமைதியை உண்டாக்கினான். “எனக்கு ஒரு ஆசை. நம்ம ரம்யாயை எங்காத்து ஜெயந்த்துக்கு கொடுக்கறியா விஜி?” என்று சபையென்றே பார்க்காமல் கேட்டான்.

கொஞ்சம் இடைவெளி விட்டு “தட்ஸ் வெரிகுட்” என்று மோகனும் மெல்லியதாகச் சொல்லி சேர்ந்து கொண்டான். லதாவைப் பார்க்கக் கூட இல்லை.

எல்லோரும் சில வினாடிகள் அமைதியானாலும், “வாவ்! வாட் எ பௌலிங்க்?” என்றான் சூர்யா.

லதாவும் விஜியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். லதா புன்னகைத்தாள். விஜி அவளுடைய சந்தோஷத்தை வெளியே காட்டவில்லை. ஆனால், அவளுக்குப் பிடித்தது.

“என்னடி, வாயை மூடிக்கற? சொல்லு!” என்று விஜியைப் பார்த்து சொன்னாள் லதா.

விஜி சூர்யாவைப் பார்த்தாள்.

“சூர்யாவைப் பார்த்தா!! அவன் என்ன பண்ணுவான்? என்றான் குமார். “எனக்கும் சந்தோஷம்தான். ஆனா, வாயாடி வள்ளி உனக்கு

சம்மந்தி மாமின்னும்போதுதான் உன்னப் பாத்தா கொஞ்சம் பாவமா இருக்கு." என்றான் குமார். லதா அவனை கொஞ்சலாக முறைத்தாள்.

பாலு சார் விஜியைப் பார்த்து 'நல்ல விஷயம்மா. டிஸிஷன ரொம்ப டிலே பண்ணாத. எல்லாம் சரியாத்தான் இருக்கும். ஒத்துக்கோம்மா !" என்று சொன்னார்.

எல்லோரும் சூர்யாவைப் பார்த்தார்கள். கண்ணன் மட்டும் பேசினான். "என்னடா? பெரிய மனுஷா! நீ தனியா ஏதாவது சொல்லணுமா?" என்றான்.

"டேய், நான் கல்யாணம் பண்ணிக்காத ப்ரம்மச்சாரி. வாழவே தெரியாத எங்கிட்ட போய் வாழ்க்கையப் பத்தி ஐடியா கேக்கறீங்களே?" என்று சொன்னவன் தலையைக் குனிந்தபடி இருந்த விஜியைப் பார்த்தான்.

"சாரி .... எக்ஸ்க்யூஸ்மி..... " என்று சொன்னவன் ஒரு சிகரெட்டைப் பத்த வைத்தான். விஜியும், லதாவும் அவனை முறைத்துப் பார்த்தார்கள்.

"எனக்கு ஓ.கே. என் பொண்ணுகிட்ட ஒரு வார்த்தை கேட்கணும்" என்றால் விஜி. "அதென்ன... இப்போவே கேட்டுடலாம்." என்றான் கண்ணன்.

விஜி தைரியமாகப் பேசினாள். "நீங்க நினைக்கறா மாதிரி என்னோட வாழ்க்கை இல்லை. என் வாழ்க்கை புயலடிச்சு ஒதுங்கிய ஓடம் மாதிரி. அதுல துடுப்பு மட்டும் தவறல. எங்கெங்க ஓட்டை இருக்குன்னு எனக்கே தெரியாது. நாம நினைக்கறது ஒண்ணு. நடக்கறது. நினைக்கற்தும் நிகழ்வதும் விதியிருந்தா நடக்கும். என்மேல அன்பு வெச்சிருக்கிற உங்களக்கு நான் என்ன ப்ரதிபலனா என்ன கொடுக்கப் போகிறேன் என்று எனக்குத் தெரியவில்லை. எனக்கு கொஞ்சம் டைம் கொடுங்கோ... ப்ளீஸ்! கட்டாயம் நல்ல ரிஸல்டோட வர்றேன்."

“அவ்வளவுதானே! நோ இஷ்ஷ்யூஸ்! டேக் யுவர் டைம் விஜி.” என்றாள் லதா.

பேச வந்த கண்ணனை இடைமறித்த சூர்யா “நான் கொஞ்சம் பேசலாமா விஜி?” என்றான். அவள் தலையாட்டவும், “இந்த உறவுகள் நம்ம தலைமுறையோடு போகாமல் அடுத்த தலைமுறைக்கும் தொடரும்னா, இந்த ப்ரபோஸல விட பெஸ்ட் எதுவும் கிடையாது. உனக்கு ஆட்சேபனை இல்லன்னா நான் அத்தனையும் ஏத்துண்டு நடத்தறேன். என் நண்பர்களை விட உலகத்தில எனக்கு எதுவும் கிடையாது. நீ என்னோட இருந்திருந்தா கூட அந்த உறவுகளோட சுகம் தனி விஜி. ரம்யாயும் வேலைக்குப் போறா. ஜெயந்த் ஃபாரின் பேங்க்கில வேல செய்யறான். அவனுக்கும் ரம்யாக்கும் சரியான வயசு வித்தியாசம். இரண்டு பேரும் அழகா இருக்காங்க. தெரிந்த ஃபேமிலிகள். இரண்டு பேரையும் கேட்டுப் பார்ப்போம். ஓ.கே ந்னு சொன்னா, லெட்ஸ் மூவ் அஹெட். நாம ஏன் இப்போவே பசங்களுக்கு சர்ப்ரைஸ் கொடுக்கக் கூடாது? லெட்ஸ் ட்ரை!” என்று நல்லது நடக்க பிள்ளையார் சுழியைப் போட்டான்.

குமார் எப்பவும் இருக்கிற குறும்போடு ‘ “ஏண்டா, அப்போ பேச மாட்டேன்னு சொல்லி வாழ்க்கை கீழ்க்கைன்னு டயலாக் விட்ட! இப்போ என்னமோ ரொம்ப பெரிசா பேசற?” என்று சொல்லிச் சிரித்தான்.

பாலு சார் சிரித்தார். “என்ன சார் சிரிக்கிறீங்க” என்றான் குமார். “ஒண்ணுமில்ல... இந்த ஆல் ஃப்ரெண்ட்ஸ் மீட்டே இதுக்குன்னே அமைஞ்சா மாதிரியே இருக்கு. சூர்யா சொல்றது தப்பில்ல விஜி. ட்ரை பண்ணலாம்!” என்றார்.

பாலு சாரின் மனைவி சந்திராவும் ஆதரித்தார்.

எல்லோரையும் கூப்பிட்டு நாசூக்காக ரம்யாக்கும், ஜெயந்த்துக்கும் புரியும் படியாக எடுத்துக் சொன்னான் குமார். மற்றவர்கள் எல்லோரும் அமைதியாக இருந்தனர்.

சொல்லிக் கொண்டிருக்கும்போதே ரம்யா அவள் அம்மாவைப் பார்த்தாள். விஜியும் கண்ணை மூடி 'உனக்கு ஓகேவா!' என்பது போல வலது பக்கம் தலையை அசைத்தாள். ரம்யாயும் புரிந்து கொண்டு அவளுக்கு சம்மதம் கொடுத்தாள். அவர்கள் இருவரும் ஓ.கே என்று ஆனார்கள்.

விஜியும் பொதுவில் அதற்கு ஒத்துக் கொண்டாள்.

ஜெயந்த் பேசினான். "என் அம்மா அப்பா என்ன சொல்றாளோ, எனக்கு அது ஓ.கே. எனக்கும் ரம்யாயைப் பிடிச்சிருக்கு!" என்று ஓபன்னாக சொல்லி விட்டான். இந்த காலத்து பிள்ளை என்பதை நிரூபித்தான்.

"அப்போ ரம்யா, தி பால் இஸ் இன் யுவர் கோர்ட்! சொல்லும்மா.... எதுவாயிருந்தாலும் தைரியமாகச் சொல்லு" என்றான் கண்ணன்.

"டேய் மாங்கா ! அவளுக்கு நெகடிவ்வாக இருந்ததுன்னா, எப்படி ஓப்பனாக சொல்லுவா? அவ அம்மா விஜிக்கிட்ட சொல்லட்டும். அப்புறம் நம்ம தெரிஞ்சுக்கலாம்" என்று குமார் மிகுந்த அர்த்தத்தோடு சொன்னான்.

ரம்யா சைகையிலேயே கண்களால் விஜியிடம் தனக்கும் பிடித்திருக்கிறது என்பதை மறுபடியும் சொன்னாள். "ரம்யா ஓ.கே சொல்லி விட்டாள்" என்றாள் விஜி.

'அதெப்படி? அவ பேசாமயே நீ சொல்ற?" என்று நருக்கென்று கேட்டான் கண்ணன்.

உடனே அவன் மனைவி விமலா "அது அப்படித்தான்! இதை ஆம்பளங்கலால எவ்வளவு ஜென்மமானாலும் புரிஞ்சுக்க முடியாது. அதுவும் உங்களுக்கு புரியர்து ரொம்ப கஷ்டம்!" ன்னு சொல்லி கண்ணையிறக்கி லதாவைப் பார்த்தாள். லதா வாய்விட்டுச் சிரித்தாள். எல்லோரும் கண்ணனைப் பார்த்தார்கள்.

“இதுக்குத்தான் கல்யாணம் வேணாம்பான்னு எங்கப்பா கிட்ட போராடினேன். என் விதி சுத்தி சுத்தி அடிக்கறது. எனக்கு இன்னிக்கு ‘சந்த்ராஷ்டமமா’ன்னு தெரியல” என்று சொல்லி சிரித்தான். எல்லோரும் சிரித்தனர்.

“டேய்...... உனக்கு டெய்லி சந்த்ராஷ்டமந்தான் மச்சி....” என்று சொல்லி சிரித்தான் சூர்யா. எல்லோரும் சந்தோஷமாக சிரித்தார்கள்.

மூக்கின்மேல் இறங்கிக் கொண்டிருந்த கண்ணாடியை சரி செய்தாள் விஜி. சூர்யாவை யாருக்கும் தெரியாமல் மறைமுகமாகப் பார்த்தாள். அவனும் அவளைப் பார்த்தான். கண்களாலேயே ‘ப்ர்ஃபெக்ட்’ என்று ஜாடை காட்டினான்.

ரம்யா பேசினாள். “எனக்கு கொஞ்சம் ஒரு வருஷமாவது டைம் வேணும். வேலை செய்ய ஆசை. அதுக்கப்பறம் கல்யாணம் வெச்சுக்கலாம்.”

“ஏண்டா தம்பி..... நீ அதுவரைக்கும் தாங்குவியாடா?” என்று சூர்யா அவனிடம் ஜோக்கடித்தான். ஜெயந்த் சற்று வெக்கத்தில் தலையைக் குனிந்தான். “டேய், நீ என்னடா வெக்கப் படற?” என்றான் சூர்யா.

“எனக்கு ஓ.கே. அதற்குள் நானும் சில சர்டிஃபிகேஷன்ஸ் ல்லாம் முடிக்கணும். எனக்கு சம்மதம்.” என்று நேரடியாக ரம்யாயைப் பார்த்தே சொல்லி விட்டான்.

“பாருடா என் மாப்ளயை!” என்று கண்ணன் அவனைக் கட்டிக் கொண்டான்.

“ஸோ, மத்ததையெல்லாம் அப்புறம் பேசிக்கலாம். டேய், கண்ணா! டௌரி கௌரின்னு ஏதாவது கேட்ட, அப்புறம் பாரு...” என்று விளயாட்டாகச் சொன்னான் குமார்.

அதற்குள் கண்ணன் “எங்கடா, எனக்கே விமலாவ ஒண்டிதான் டௌரியா அவ அப்பா கொடுத்தார். இல்லன்னு சொல்ல சொல்லு அவள!” என்று ஜோக்கடித்தான்.

உடனே விமலா, ‘அவருக்கு நானே ஜாஸ்தி; டௌரிய வேற கொடுத்து எங்கப்பா இன்னும் ஏமாளி ஆகணுமாக்கும். எல்லாம் போதும்.” என்று சிரித்தவாரே சொன்னாள்.

“கண்ணா, வீட்டுல இனிமே சாப்பாடு கட், எங்க வீட்டுக்கு வந்துடு.” என்றான் சூர்யா. எல்லோரும் சிரித்தார்கள்.

எழுந்து நின்றவர்கள் ஒருத்தொருக்கு கையைக் கொடுத்துக் கொண்டார்கள். சூர்யாவும் விஜியும் கைகளை சேர்க்கவில்லை. இதைக் கண்ணனும் குமாரும் மட்டும் பார்த்தார்கள்.

குமார் கண்ணனைக் கூட்டிக் கொண்டு சற்று தூரம் தனியாக வந்தான். “டேய், சூர்யா பாவம்டா. அவனுக்குன்னு ஒரு வாழ்க்கை இல்லையேடா. நாம் அவனுக்கு ஏதாவது செய்யணும்.” என்றான். கண்ணனும், “ஆமாண்டா, நானும் பல சமயம் ரொம்ப வருத்தப் படுவேன். ஆனா நாம என்ன சொன்னாலும் அவன் கேக்க மாட்டேங்கறாண்டா!’ என்ன பண்ண சொல்ற?” என்றான்.

“எனக்கு ஒரு ஐடியா. விஜியும் இப்போ தனி ஆள். நாம ஏன் அவங்களை சேக்கக் கூடாது” என்று ஒரு கேள்வியை குமார் எழுப்பினான். இருவருமே சூர்யாவைப் பார்த்தார்கள். தனியாக நின்றுகொண்டு சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தான். நண்பனைப் பார்க்க பாவமாக இருந்தது.

கண்ணன் உண்மையான வருத்ததோடு “ஓகே! ஆனால் இதைப் பத்தி இப்போ பேச வேண்டாம். குழந்தைகளுக்கெல்லாம் விஜி - சூர்யா விஷயமும் தெரியாது. அதைப் பத்தி அப்புறம் பேசுவோம்.” என்று சொல்ல அவர்கள் அந்த விடத்தை விட்டு எல்லோரும் இருக்கும் பக்கத்தில் வந்து கலந்துகொண்டார்கள்.

எல்லோரும் டின்னரை முடித்துக் கொண்டு கிளம்பினார்கள்.

பகுதி - 10 மறுபடி ஜனனம்

அன்று ராத்திரி விஜியும், ரம்யாயும் பேசிக் கொண்டார்கள்.

"ஷீரு, இன்னிக்கு நடந்தது, எதிர்பாராமல் நடந்த விஷயம். நான் கொஞ்சம் கூட இதைப் பத்தியெல்லாம் நினைக்கவேயில்ல. உனக்கு இதுல பரிபூர்ண சம்மதமா?"

"தெரிஞ்சுண்டேன்மா ! இவா எல்லாரும் உங்கிட்ட எவ்வளவு ஆசையாயிருக்கான்னும் புரிஞ்சுதும்மா."

விஜி பெருமைப்பட்டு சிரித்துக் கொண்டாள்.

"அப்பா இருந்தும் இல்லாதவளாவே நான் வாழ்ந்துட்டேன்மா. நீ கூடவே இருந்ததால, எனக்கு அது பெருசா தெரியலை. ஆனா, எனக்கு கல்யாணமாகி போயிட்டா, உனக்குன்னு யாரும்மா இருக்கா? எனக்கு அந்த கவலைதான். புரிஞ்சுக்கோ."

'ரம்யா. இவ்வளவு வருஷம் ஒரு குழந்தையை வச்சு வாழ தெரிந்த எனக்கு, இன்னும் கொஞ்ச காலம் கடத்த மாட்டேனா என்ன? அதெல்லாம் நீ நினைச்சுக்காத! உனக்கு ஒரு வாழ்க்கை அமைஞ்சுதுன்னா, எனக்கு அது போறும்."

"நீ தப்பா நினைச்சுகலைன்னா, நான் ஒண்ணு கேக்கலாமாம்மா?" என்றாள் ரம்யா.

விஜிக்கு கொஞ்சம் பயம் கிளம்பியது. இருந்தாலும் "ம்..ம்...சொல்லு..." என்று சமாளித்தாள்.

"எல்லோரும் உங்கிட்ட ஃப்ரீயா பேசினா மாதிரி, சூர்யா சார் மட்டும் ஏம்மா உன்னோட சரியாவே பேசல? நீயும் அவர்கிட்ட சரியாவே பேசல. அது ஏம்மா?"

விஜி சிரித்துக் கொண்டு, "அது ஒரு பெரிய கதை ரம்யா. நானும் அவனும் வாழ்க்கைல ரொம்ப பேசணும்னு நினைச்சோம். விதி எங்களை பேச விடல!"

சூர்யாவை 'அவன்' என்று மரியாதையில்லாமல் விஜி சொன்னது ரம்யாக்கு ஷாக்காக இருந்தது. "என்னம்மா சொல்ற? எனக்குப் புரியல. உங்களுக்குள்ள ஏதாவது இருக்காம்மா?" என்ற பெரிய கேள்வியை குழந்தை போல கேட்டாள்.

"யெஸ், வீ வேர் இன் லவ் ஏலியர் டு மை மேரேஜ் ! நாங்க கல்யாணம் பண்ணிக்க முடிவு செய்தோம். விதி எங்களை விட வேகமா தீர்ப்புக்களை எழுதித்து. பிரிச்சும் வச்சுது."

'என்னம்மா சொல்ற? சூர்யா சாரும் நீயும் லவ் பண்ணீங்களா? பாத்துப் பேசும்மா. அவர் சொஸைடில ரொம்ப ரொம்ப பெரிய மனுஷன். உலகமறிஞ்ச இண்டஸ்ட்ரியலிஸ்ட்."

'உலகம் பாத்துதான் நாங்க வாழணும்னு நினைச்சோம். ஆனா, எங்களுக்குன்னு ஒரு உலகமிருக்குன்னு அப்போ நினைக்கல. மத்தவாளுக்காக விட்டு கொடுக்கணும்னு என் தலையெழுத்து. இப்போ.... அந்த மத்தவா யாருமே என்னப் பத்தி கவலைப் படல."

"அங்கதான் அந்த காலத்தில் நீங்களைல்லாம் முட்டாளாக இருந்துட்டீங்க. டெஸிஷன சரியா எடுக்கலை."

"நீதான் முட்டாளா பாக்கற ரம்யா ! எல்லா கோணத்துலேந்து வாழ்க்கையப் பார்த்தது அந்தக் காலம். கல்யாணம் செய்யறது மட்டுமே அந்தக் காலத்துல வாழ்க்கையில்ல! வலிகளத் தாங்க ரெடியா இருக்கணும். உறவுகளைப் பிரியணும். உரிமைகளை விட்டு விடணும். சொத்துகளை இழக்கணும். வாழறத்துக்கு, மனபலம் இருக்கணும். பணமிருக்கோ இல்லையோ, ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்கணும். சுகங்களை தள்ளிப் போடணும். ஆசையிருந்தாலும் குழந்தைகளைப் பெத்துக்க முடியாது. இதில் அந்தப் பையனுக்கோ அல்லது பெண்ணுக்கோ கொஞ்சம் சபலம் தட்டினா கூட, அந்தக் காதல் கல்யாணம் நிக்காது. இதெல்லாம் ரொம்பக் கஷ்டமா ஃபீல் பண்ணறவங்களால காதலிக்கவே முடியாது."

'இப்பவும் சொல்லறேன். நீங்களெல்லாம் உங்களது விருப்பங்களை எடுத்துச் சொன்னதில்லை. அதனால்தான் கம்யூனிகேஷன் கேப் !" தன்னுடைய கையில் அடித்துச் சொன்னாள்.

'திரும்பவும் நீதான் முட்டாள் மாதிரிப் பேசற!". "உங்களோட விருப்பத்த கேட்கிற இந்த காலத்து அப்பா அம்மா மாதிரி அந்தக் காலத்துல கிடையாது. நின்னு பேசவே பயப்படுவோம். அதுதான் அப்போது இருந்த தலைமுறை. இன்னிக்கு காலம் மாறிப் போச்சு. நாங்களெல்லாம் உங்களுக்காக, இப்போ இருக்கற ஜெனரேஷனுக்காக மாத்தினுட்டோம். அதுதான் உங்களுக்கெல்லாம் ரொம்ப ஈஸியாகப் போச்சு. முழு சுதந்திரம் கிடைச்சுது" எனச் சொல்லி அமைதியாளாள் விஜி.

"அது சரி! நீயும் அவரும் எப்படி இருந்தீங்க, எப்படி பிரிஞ்சீங்கன்னு சொல்லும்மா!".

"அது ரொம்ப பெரிய கதையில்ல. சாதிப் ப்ரச்சனை இல்லைன்னாலும், சம்பிரதாயப் ப்ரச்சனை தலைதூக்கி நின்ன காலம், அந்த காலம். வேகமா சேரணும்னு நினைக்கல! ஆனா வேகமா பிரிஞ்சுட்டோம். அதுக்கப்புறம் சூர்யா இன்னி வரைக்கும் கல்யாணம் செய்யலை. நான் என் சுயநலம் பார்க்கும்படியா அமைஞ்சது. என்னோட கல்யாணமும் நீடிக்கலை. சூர்யாவை கம்பெனில பாக்காம இருந்ததுக்கு காரணங்கள் நிறைய இருக்கு. அது இன்னைக்கு தெரிஞ்சுப் போச்சு. இருந்தாலும், சூர்யா மத்த ஃப்ரெண்ட்ஸ்களையும் சேத்து வெச்சார். இதுதான் என்னோட கதை சுருக்கம்." எளிமையாக சொல்லி முடித்தாள் விஜி.

ரம்யா ஒன்றும் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தாள். முகத்தில் ஒரு சோகம் தெரிந்தது. தனக்காக அம்மா பட்ட கஷ்டங்களை நினைத்து சங்கடப்பட்டாள். மெதுவாக கண்களில் கண்ணீர் ததும்பியது.

"ரொம்ப ஸாரிம்மா" என்றவள் விஜியின் மடிமீது முகத்தைப் புதைத்தாள். "ஹேய்... என்னது இது சின்னக் குழந்தை மாதிரி?

வாழ்க்கைல இதுதான்னு எழுதியிருந்தா அனுபவிச்சுதான் ஆகணும். யாரும் விதிவிலக்கு வாங்க முடியாது. தைரியமா இரு!" என்று சொல்லி ரம்யாவின் தலையைத் தடவிக் கொண்டிருந்தாள். .

தலையைத் தூக்கி எழுந்த ரம்யா, "நீ ஏம்மா சூர்யா சார் கிட்ட சொல்லி மறுபடியும் அவரையே கல்யாணம் பண்ணிக்க கூடாது?" எனக் கேட்டதும், விஜிக்கு தூக்கிவாரிப் போட்டது. இதுவரையில் யாருமே கேட்காத கேள்வி தன் மகளிடமிருந்து வந்ததை அவள் எதிர்பார்க்கவில்லை.

"ஹே..... என்ன உளர்ற?" எங்களுக்குள்ள எல்லாமே ஓவர். அதைத் தவிர சூர்யா இன்னிக்கு பழைய சூர்யா இல்லை. ரொம்ப பெரிய ஆளு. இந்த விஷயம் தெரிஞ்சாலே ப்ரஸ், இண்டர்வியூ, யூ-ட்யூப் ந்யூஸ்ன்னு ஆரபிச்சுடுவாங்க. பாதிப்பு சூர்யாவுக்கு அதிகமாக இருக்கும். இந்த டாபிக்கை நாம் நிறுத்திக்கலாம். அதிகப்ரசங்கித் தனமாக பேசாமல், போய்ப் படுத்துக்கோ! டைம் ஆயிடுத்து குட் நைட். நான் ரூமுக்கப் போறேன்." என்று சொல்லி, பேச்சை நிறுத்திக் கொண்டு படுக்கப் போனாள்.

அன்று இரவு முழுவதும் விஜிக்கு தூக்கம் வரவில்லை. விடியற்காலை, மெல்லியதாக விழுந்த மழைத்தூறலைப் பார்த்தபடியே மாடியில் இருந்த வெளி வராண்டாவில் உட்கார்ந்திருந்தாள். கா:பியை குடித்துக் கொண்டே ரம்யா கேட்ட கேள்வியை தனக்குள்ளே மறுபடியும், மறுபடியும் நினைத்துப் கொண்டிருந்தாள். மற்றும் அதோடு சேர்த்து பழைய சம்பவங்களை நினைத்து ஒரு வலம் வந்தாள்.

அவளுக்கும் அந்த உறவில் சேர ஆசையாகத்தான் இருந்தது. இவ்வளவு நாள் ரம்யா என்ன நினைப்பாளோ என்றுதான் தன் மனதுக்கு விலங்கு போட்டிருந்தாள்.

'சூர்யாவின் வாழ்க்கையை கேள்வியா மாத்தினது நான். ஏன் அதே வாழக்கையில விடையா இப்போது இருக்கக் கூடாது?' என்று நினைத்தாள்.

'ஆனால், இதுவரை சூர்யாவும் அதைப்பத்தி நினைக்கலை. அதைப்பத்தி பேசினதுமில்லை. இப்போது எப்படி சொல்றது?' என்ற கேள்வியில் நின்று போனாள்.

ரம்யாக்கும் காலை பிறந்தது. காஃபியைக் கையில் வைத்துக் கொண்டே விஜிக்கு குட்மார்னிங் சொன்னவள் நேராய் வந்து, "உன்னோட கஷ்டமான வாழ்க்கையில நானும் உன்கூட டிராவல் பண்ணிருக்கேன்." என்றவள் விஜிக்கு எதிரே இருந்த சேரில் உட்கார்ந்தாள்.

"நேர்மை, சலனம், நடத்தை - பொதுவாக இந்த மூணுமே ஒவ்வொரு டைவர்ஸியின் வாழ்க்கையில் பல நேரங்களில் சவாலா இருக்கும். நீ வாழ்ந்தது ஒரு துறவி வாழ்க்கை. அடுத்தவன் எப்படி பார்க்கிறாங்கறது எனக்கு இரண்டாம் பட்சம். இனிமே நீ உனக்காக வாழணும்மா" என்று விஜியின் கையைப் பிடித்துக்கொண்டு சொன்னாள்.

"என சொல்ல வர்ற?" - என்று கேட்டாள் விஜி.

"இந்த சோகமான வாழ்க்கை போதும். உன் வாழ்க்கையை அமைச்சுக்கோன்னு' ஒரு பொண்ணா சொல்ல வேண்டிய கட்டாயத்துல இருக்கேன். கொஞ்சம் வித்தியாசமான சூழ்நிலைதான். இருந்தாலும், எனக்காக..... " என்று விஜியை ஸ்தம்பிக்க வைத்தாள்

"நடக்கிற காரியாமா பேசுவோம்!" என்று ஒரு லைனில் முடித்தாள் விஜி.

"அம்மா, நீ சொன்னவுடனே நான் ஜெயந்த்தை கல்யாணம் செய்ய ஒத்துண்டேன். ஏன் தெரியுமா? நீ எது செஞ்சாலும் நல்லதுக்குதான் எனக்கு செய்வேங்கற நம்பிக்க....... அதே நம்பிக்கய நீ உன்னோட வாழ்க்கைல வை! நடக்கும், நல்லதே நடக்கும்!" என்று மேலும் சொன்னாள்.

“என் வாழ்க்கை பெய்து முடிந்த மழை. சேதம் என்னன்னு பார்க்கும் நேரம். உன்னோடது இப்போதான் ஆரம்பிக்கணும். ஏதாவது உளராதே!” என்று சொல்லி எழ்ந்துகொள்ள முயன்றவளை,

“உக்காரு.... கொஞ்சம். நீங்க வாழ்ந்த காலத்துல இருந்த கல்சுரல் ப்ராக்டீஸஸ் வேற! இப்போ இருக்கிற டேடிங்க் ப்ராக்டீஸஸ் வேற! இன்ஃபாக்ட், காதலே வேற! ஒருத்தனுக்கு ஒருத்திங்கறது போயி, ப்ரேக்-அப், அது-இதுன்னு சர்வ சாதாரணமாப் போச்சு. நாலு லவ்வுக்கப்புறம் கல்யாணம் பண்ணிக்கிறவனெல்லாம் இருக்கா. உடம்பு சுகத்துக்காக சேர்ற மனசுகள்தான் இப்போ ஜாஸ்தி.” என்றாள் ரம்யா.

‘ரொம்ப பேசாத ஷீரு! வயசுக்கு தகுந்தா மாதிரி பேசு. ஆதனால் என்ன இப்போ.”

“ஐ திங்க் இட் வாஸ் எ ப்ளேடானிக் லவ். இப்போ நீங்க சேர்ந்தாலும் இந்த உலகம் உங்கள ஒண்ணும் சொல்லாது. அதுவும் இது ப்யூர்லி பர்சனல் மேட்டர்மா! ஒண்ணே ஒண்ணு.... சூர்யா சார் இதுக்கு ஒத்துக்கணும். தட்ஸ் ஆல்! என்று முடித்தாள் ரம்யா.

‘எனக்கு முக்கியம் நான் இல்ல. இப்போ நீ வேலைக்குப் போயி கொஞ்ச மாசங்கள்ல உன் கல்யாணம்தான் எனக்கு முக்கியம். நோ மோர் டிஸ்கஷன் ஆன் திஸ் ! பீரியட்.” என்று அழகான ஆங்கிலத்தில் முற்றுப் புள்ளியிட்டாள்.

“உன் தலயெழுத்து! உன் இஷ்டம்” என்று சொல்லி ரம்யாயும் வெறுப்பாக எழுந்து போனாள்.

குழந்தையாகவே பார்த்தவளுக்கு, குமரியாக பேசியதை ஏற்கமுடியவில்லை. தன்னுடைய வாழ்க்கையை பிரித்து மேய்ந்து விட்டாள் என்ற சந்தோஷமும் விஜியின் மனதுக்குள் இருந்தது.

ஒரு வருடம் ஆனது.

பேசியது போல் ரம்யா-ஜெயந்த் திருமணம் நன்றாக நடந்தது. ஃ பிப்ரவரியில் தன் கல்யாண தேதியில் முகூர்த்தம் அமைந்ததில்

ஆச்சர்யமாக இருந்தாலும், அதே நாளில் நடந்ததில் சின்ன வருத்தமும் இருந்தது. மும்மூர்த்திகளும் ஏற்று நடத்திக் கொடுத்தார்கள். லதாவும், விஜியும் அடுத்தகட்ட உறவுக்குள் நுழைந்தார்கள்.

மூன்று மாதங்கள் போனது.

விஜியின் தனிமை தனியாகத் தெரிந்தது.

சூர்யாவுக்கு தனிமை புதிதல்ல.

அதிக நேரம் வேலைசெய்ய ஆரம்பித்தாள் விஜி.

ஊர்களுக்கு போய்விட்டு வந்து கொண்டிருந்தான் சூர்யா.

பழைய காலங்கள் மாதிரி, தினமும் பார்த்துக் கொள்வது, பேசுவது, பார்க்காமல் போனால் தவிப்பது, அதெல்லாம் எதுவும் இல்லை.

அவரவர்களுக்கு வேலை இருந்தது.

நண்பர்களுக்கு அவரவர்களின் குடும்பம்.

பேச்சுவாக்கில் ஒருநாள் விஜி சூர்யாவைப் பார்த்துக் கேட்டாள். “ரம்யாதான் லைஃப்ல எனக்கு இருந்த ஒரே டைவர்ஷன். அவளும் போனப்பறும், எனக்கு வாழ்க்கையில பிடிப்பு இல்ல சூர்யா. இன்னைக்கு என்னை சாவு ஏத்துண்டாலும், நான் ரெடியா இருக்கேன்.” என்று அமைதியாகச் சொன்னாள்.

சிரித்துக் கொண்டே சூர்யா சொன்னான். “அதுல நான்தான் உனக்கு சீனியர். நீ எப்போ போனியோ, நான் அப்போவே ரெடி. அதுவே இன்னும் நடக்கலை. அதுனால, உனக்கு கொஞ்சம் லேட்டாத்தான் இருக்கும்.”

“உன்கிட்ட பேசி ஜெயிக்க முடியாது சூர்யா. உன்னை அடைய நான் கொடுத்து வைக்கலை. நான் ஒத்துக்கிறேன். ஆனா, இப்போதான், உங்க எல்லார் கூடவும் இருக்கேனே. உனக்கு ஏன் அந்த சாகற நினைப்பு இன்னும் இருக்கு?”

“நீ என்னோட எதிரேலேயே இருந்தாலும், என்னோட மனசுல அந்தக் கால விஜிதான் இன்னும் இருக்கா. பலசமயம், உன்னோட உருவம் என்னை ஏமாத்தி பேச வெக்கறாமாதிரியே இருக்கு.” என விஜியின் மேல் இருந்த காதலை எடுத்துச் சொன்னான்.

அவன் பேசியதை விஜி தவறாக புரிந்து கொண்டாள்.

அவளுக்கும் புரியும் படியாக எடுத்துச் சொன்னான். இருந்தாலும் விஜிக்கு ஒரு கோபம் இருந்தது. சூர்யா அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் அவள் போக்கில் விட்டு, ஊர் ஊராகப் பயணம் போனான்.

ஒரு ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு குமார், கண்ணன் மற்றும் பாலு சார் மூவரும் சூர்யாவை ஒரு ரெஸ்டாரென்டில் சந்தித்தார்கள். தனியான சூழ்நிலை. தங்களின் மனதில் பட்டதை அவனிடம் சொன்னார்கள்.

“விஜியை நீ ஏன் கல்யாணம் செய்யக் கூடாது?” என்பதுதான் டாபிக்.

“என் வாழ்க்கையில் இருந்த விஜி போய் டூ டிகேட்ஸ்க்கும் மேல ஆறதுடா. நான் உடைஞ்ச கண்ணாடி; எதுக்கும் பயனில்லாதவன்டா.” .

‘இந்த கவிதை, உவமையெல்லாம் இல்லாம பேசு. உன்ன இதுமாதிரி பாக்கர்றது எங்களுக்குப் பிடிக்கலடா. இன்னிக்கு நீ எவ்வளவு பெரிய பணக்காரனா இருந்தாலும், உன்னோட வாழ்க்கைல இருக்கற வெத்து இடம் எங்களுக்கு மட்டும்தாண்டா தெரியும். உலகத்துக்கு பணக்கார சூர்யாவாத்தான் தெரியும். உனக்கு இல்லாத சுகமா? ன்னு நினைக்கிறவந்தான் இருப்பான். ஆனா, உன்னோட வலி

எங்களுக்குதாண்டா தெரியும்." என்று அமைதியாக்ச் சொன்னான் குமார்.

"டேய்.... நாமெல்லாம் சிம்பிளா வாழ்ந்தோம். நம்ம சந்தோஷமே நம்ம வாழ்க்கை. உங்கிட்ட நிறைய பணமிருக்கு. இருந்தாலும் அந்த சந்தோஷம் மிஸ்ஸிங்க்! அதே மாதிரி, விஜிக்குன்னு இன்னிக்கு யாருமே இல்ல. பொண்ணு ரம்யாயும் கல்யாணமாகிப் போயிட்டா. அதுக்குத்தான் பேசறோம். நான் விஜிக் கிட்ட பேசறேன்" என்றான் கண்ணன். ஒரு காலத்தில் விஜி-சூர்யா உறவையே வெறுத்தவன் கண்ணன் என்பது சூர்யாவுக்குத் தட்டியது.

"இவங்கெல்லாம் சொல்றது சரிதான் சூர்யா. யோசிக்க ஒண்ணுமில்ல!" என்றார் பாலு சார்.

"நான் ஒருமுறை ஏமாந்தது போதும். என்னால அதையே தாங்க முடியல. இதுக்கு நான் பேச சான்ஸே எடுக்க மாட்டேன் சார். அவ மனசுல என்ன இருக்குன்னு நம்ம யாருக்கும் தெரியாது. இந்த சமயத்துல இதப் பத்தி பேசினா சரியா வராது சார். எனக்கு என்னமோ சரியா வரும்னு தோணல."

பேசிக் கொண்டேயிருந்தார்கள்.

லதாவும், மோகனும் விஜியோடு நுழைந்தார்கள். சூர்யாவுக்கு சர்ப்ரைஸாக இருந்தாலும், இவர்கள் போட்ட ப்ளான் எளிதில் புரிந்தது.

எல்லோரும் 'ஹாய்' சொல்லிக் கொண்டார்கள். "என்னடாது குரங்குத்தனமான ப்ளான்?" என்று சொல்லிச் கோபத்தோடு கேட்டான்.

"என்ன ப்ளான்? உனக்கு ஏதோ ப்ராப்ளம்; அர்ஜெண்ட் மீட்டிங்க்னுதானே இவா எங்கிட்ட சொன்னா!" என்றாள் விஜி. அவர்கள் இருவரைத் தவிர எல்லோரும் சிரித்தார்கள்.

சூர்யா கொஞ்சம் வெறுப்பானான். ஒரு சிகரெட்டைக் கொளுத்தினான்.

“சாரிடா மச்சி.... உனக்கு இது சரியில்லன்னு பட்டுதுன்னா, ரொம்ப சாரி!” என்றான் குமார்.

“எனக்கு எதுவுமே புரியல!” மறுபடியும் சொன்னாள் விஜி.

சற்று கோபத்தோடு சூர்யா சொன்னான்.

“அது ஒண்ணுமில்லே விஜி. நீயும் நானும் ஏன் கல்யாணம் பண்ணிக்கக் கூடாதுன்னு கேக்கறானுங்க! சரியா வராதுன்னு சொன்னா கூட கேட்க மாட்டேன்னு அடம் பிடிக்கிறாங்க. இதுல லதாவும் மோகனும் கூட உடந்தை....!”

விஜி தலையைக் குனிந்து கொஞ்சம் மௌனமானாள். விஜியின் மௌனம் அவனை இன்னும் சங்கடப் படுத்தியது.

“இதுக்குத்தாண்டா சொன்னேன். ஏண்டா மத்தவங்க மனசையே புருஞ்சிக்க மாட்டேன்னு அடம் பிடிக்கிறீங்க? பாரு, இப்போ அவ அப்ஸெட் ஆயிட்டா...! தேவையில்லாம ஏதாவது பண்றீங்கடா.....! என்னோட வாழ்க்கை மூடின புஸ்தகம். திரும்ப படிக்கும்படி இருக்குமான்னு தெரியாது. அதைப்போய் படிக்கணும்னு ஏண்டா ஆசைப்பட்றீங்க?” என்று கோபத்துடன் சீறினான் சூர்யா.

தப்பு நடந்து விட்டதை நினைத்து எல்லோரும் அமைதியாக இருந்தார்கள். ஒரு நிமிடம் வரை நீட்டியது.

சூர்யா கொஞ்சம் குரலை உயர்த்திப் பேசினான்.

“ரொம்ப சாரி விஜி. இவங்கல்லாம் நம்ம மேல இருக்கிற ஆசைல இதுமாதிரி பண்ணிட்டாங்க. லெட்ஸ் ஜஸ்ட் லீவிட் ஹியர்!”

குமாரும் குரலை உயர்த்திப் பேசினான்.

“நிறுத்துடா சூர்யா. கத்திப் பேசினா எல்லாரும் அமைதியா ஆகிடுவாங்கன்னு நினைச்சயா? இதோ பார்! நாங்க எல்லாம் குடும்பத்தோட வாழறப்போ, தனிமையா வாழற உன்னை பாக்க

சகிக்கலடா. நாங்க எல்லாரும் ஒருவித குத்த உணர்ச்சியோடத்தான் வாழறோம்."

சூர்யா கோபத்தில் பேச ஆரம்பித்தான்.

"இது கிளர்ச்சியால எடுக்கற விஷயம் இல்லடா. சொல்லும் பொருளும் சேர்ந்தாதான் வாக்கியம். எங்க வாழ்க்கைக்கு அப்போ இருந்த மீனிங்க் வேற. தடைகளத் தாண்டி வருத்தங்களையும் தாங்கற சக்தியிருந்தது. இப்போ இருக்கப் போற மீனிங்க் வேற. அதைத் தவிர, ரெண்டு பேருமே வாழ்க்கையோட பாதிய வெவ்வேறு பாதைல கழிச்சுட்டோம். இப்போ இருக்கிற சூழல், சொஸைட்டி, உறவுகள், நண்பர்கள் - இது மாதிரி எல்லாமே வேவ்வேற பாதைல இருக்கு. எல்லாத்துலேயும் டிராவல் பண்ணனும். எல்லாரையும் அட்ஜெஸ்ட் பண்ணி பேலன்ஸ் பண்ணனும். இதுல ஒரு சின்ன உறசல் வந்தாலும், வாழ்க்கை கிழிஞ்சிடும்" என்று பெரிய பேச்சைத் தொடுத்தான்.

குமாரும் கோபத்தில் பேசினான்.

"எங்களுக்கு அப்புறம்தாண்டா உன்னை சுத்தி இருக்கற சொஸைட்டி! அன்னிக்கு, விஜியில்லைன்னா வாழ்க்கை இல்லைன்னுதான் கல்யாணம் பண்ணிக்காம இருந்த. நானும் அந்த ஃபீலிங்க்ஸை மதிச்சேன். ஆனா, இன்னிக்கு, விஜி பக்கத்துலேயே இருந்தாலும், கல்யாணம் பத்தி யோசனை பண்ற. அவளை கல்யாணம் செஞ்சுக்க கேக்கலாமான்னு உனக்கு ஒரு ஆசை இருக்கு. ஆனா, அவ அதுக்கு மறுப்பு சொல்லிடுவாளோன்னு பயமும் சேந்துருக்கு. அந்த ஆசை உனக்கு இல்லைன்னு சொல்லுடா! இல்லை, அவளுக்குத்தான் அந்த ஆசை இல்லைன்னு சொல்லட்டும். ஏண்டா, ரெண்டு பேரும், உங்களையே ஏமாத்திக்கிறீங்க?"

லதா சூர்யாவின் கைகளைப் பிடித்து அமைதியாகப் பேசினாள். "சூர்யா, நீயும் அவளும் மாத்தி மாத்தி ஏமாந்தது போறுண்டா. இனிமேலும் உங்களை நீங்களே ஏமாத்திகறதும் சரின்னு படலை.

கூடப் பொறக்காத தங்கையாவும், ஒரு நல்ல நண்பனாவும் கேக்கறேன். சரின்னு சொல்லுடா சூர்யா."

விஜி, லதாவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். லதா விஜியைப் பார்த்து உரிமையோடு கேட்டாள்.

"நீயாவது சொல்லேண்டி. உனக்கும் மனசு வரலையா? அவன் பட்ட கஷ்டங்களை எல்லாத்தையும் கேட்ட இல்ல? மனசு இளகவே மாட்டயா?"

யாரும் மௌனத்தை விட்டு வெளியே வரவில்லை.

திடீரென விஜி பேசுவதற்கு விரலை உயர்த்தினாள்.

'கரெக்ட். அவா சொல்றதுல என்ன தப்பு சூர்யா? நான் உன்னை இப்போ கல்யாணம் பண்ணிக்க கூடாதா? முன்னாடி நீ ப்ரபோஸ் பண்ணின. இப்போ நான் ப்ரபோஸ் பண்றேன். டைவர்ஸின்னு பார்க்காம என்ன கல்யாணம் பண்ணிக்கிறியா சூர்யா." - என்று வாய்விட்டு கேட்டாள்.

மௌனமாக இருந்த எல்லோரும், ஒரே சமயத்தில் திடீரென ""ஓ" வென்று கத்திவிட்டுச் சிரித்தார்கள். அந்த ரெஸ்டரெண்டில் வேலை செய்த அனைவரும் அவர்களைப் பார்த்தனர்.

சூர்யா உறைந்து போய் சலனமில்லாமல் தலையைக் குனிந்து கொண்டு நின்றான். வாயிலிருந்த பாதி சிகரெட்டைத் தூக்கிப் போட்டான். இன்னொன்றைக் கொளுத்தினான்.

விஜியின் கன்னத்தைக் கிள்ளினாள் லதா. குமார் கண்ணனைக் கட்டிக் கொண்டான். கண்ணன் விஜியிடம் கையைக் கொடுத்தான். மோகன் சூர்யாவுக்கு கையை நீட்டினான். அவன் யாருக்கும் கை கொடுக்கவில்லை. பாலு சார் சந்தோஷமாக இருந்தார். விஜியும் தைரியமாக கேட்டுவிட்ட சந்தோஷத்தில் இருந்தாள்.

சூர்யா எல்லோரும் அவன் கொளுத்தும் வரை அமைதியாக இருந்தார்கள்.

“எல்லாம் சரியா ஆயிடும் சூர்யா. சரின்னு சொல்லு!” - அமைதியாக இருந்த பாலு சார் சூர்யாவிடம் சொன்னார்.

“இல்ல பாலு சார்! மன்னிக்கணும். நீங்க சொல்றதுக்கு நான் எதிரா பேசலை. எதார்த்தத்தை பேசறேன். இவங்க புரிஞ்சிக்க மாட்டாங்க”

விஜி பேசினாள்.

“நான் உனக்கு செஞ்ச பாவத்துக்கு ப்ராயச்சித்தமா, உன்னோட எந்த சந்தர்ப்பத்துலேயும் சப்போர்ட் பண்ணி வாழத் தயாரா இருக்கேன் சூர்யா. நாம இப்போ வாழப்போற லை:ஃப்ல வயசைத் தவிர எல்லாமே நம்ம மனசுதான். சந்தோஷமா வாழ்க்கைய நடத்தறது நம்ம மனசுலதான் இருக்கு சூர்யா. என்னை தயவுசெஞ்சு ஏத்துக்கோ.”

எல்லோரும் சூர்யாவையே அவனின் பதிலுக்காகப் பார்த்தார்கள்.

அவன் அசையவில்லை. எல்லோரும் அமைதியாகத் தயங்கி நின்றார்கள். மறுபடியும் அந்த இடத்தில் நிஸப்தம் நிலவியது.

“என்ன எப்படியாவது கூட்டிண்டு போ சூர்யா! நீ இல்லன்னா நான் செத்துடுவேன்.” என சூர்யாவைப் பார்த்துச் சொன்னாள் விஜி. அந்த வசனம் சூர்யாவுக்கு மட்டுமே புரிந்தது.

ஒரு நிமிடம் மௌனம் நிலவியது. இரண்டு நிமிடங்கள் தொடர்ந்தது.

சேரிலிருந்து எழுட்ந்து விஜியைக் கட்டிக் கொண்ட சூர்யா சின்னக் குழந்தையைப் போல அழுதான். விஜியும் அவனை நெஞ்சோடு தழுவிக் கொண்டாள். இருவரும் தழுவியபடியே இருந்தார்கள்.

‘இந்த டயலாக் என்னடா மேஜிக் பண்ணித்து? நம்மளால முடியாத விஷயத்த, ஒரே ஒரு லைன்ல முடிச்சுட்டா!” என்றாள் லதா.

“அவங்களுக்குள்ள ரகசியமா இருக்கும். யாருக்குத் தெரியும். ஏதோ அவங்க ரெண்டு பேருக்கும் புரிஞ்சு, ஒண்ணா சேந்தான்னா சரிதான்.” என்றான் மோகன்.

எல்லோரும் சூர்யாவையும் விஜியையும் பார்த்தபடி இருந்தாலும், ஒவ்வொருவரும் அந்த சந்தோஷத்தை ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

சூர்யாவைக் கட்டிக் கொண்ட லதா “எல்லாம் நல்லதா முடிஞ்சுதுடா பீடி. நீ நினைச்சாப் போல ‘உன் விஜி உன்னிடம்தான்” என்று அவனைப் பார்த்து சொன்னாள்.

கண்ணனும், குமாரும், சூர்யாவைக் கட்டிக் கொண்டார்கள்.

லதா விஜியைத் தழுவிக் கொண்டே, ‘என்னைக்கோ நடக்க வேண்டியது, இன்னைக்காவது நடந்ததேன்னு சந்தோஷமா இருக்கு விஜி.” எனச் சொன்னாள். கண்ணனும், குமாரும் விஜிக்கு கையைக் கொடுத்தார்கள்.

பாலு சார் சூர்யாவுக்கு வாழ்த்து சொன்னார்.

விஜி ரம்யாக்கு போன் செய்தாள். ‘ஷீரு, நீ விரும்பினா மாதிரியே நான் உங்க சூர்யா சாரை கல்யாணம் செஞ்சுக்கப் போறேன்’ எனத் தெளிவாகச் சொன்னாள். அந்தப் பக்கத்திலிருந்து வந்த வாழ்த்துக்களையும் மற்றவர்களுக்குச் சொன்னாள்.

“அப்போ கல்யாண வேலைய பாக்கலாமா?” என்றான் கண்ணன்.

“நானும் குமாரும் ஆஸ்ட்ரேலியாக்குப் போகணும். இன்னும் மூணு மாசங்கள் போகட்டும். ஜூன் வைத்துக் கொள்ளலாம்” என்றான் சூர்யா.

“என்னொட பொறந்த-நாள் மாசம் ஆகஸ்ட். அதனால ஆகஸ்ட்டுல வெச்சுக்கலாம்.” என்று சொல்லி சிரித்தாள் விஜி.

“தட்ஸ் ஃபைன்” என்றான் சூர்யா.

பகுதி - 11 உன் விஜி உன்னிடம்

இன்னும் ஐந்து நாட்களில் ஆஸ்ட்ரேலியா பயணம்.

விஜியை டைரக்டராக்க நினைத்தான் சூர்யா. எல்லா பேப்பர்ஸ்களையும் கையெழுத்துக்கு ரெடியாக வைத்தார் பாலு சார். அது விஜிக்கு தெரியாது.

பாலு சாரி, விஜியை சூர்யாவின் ரூமுக்கு வரச்சொன்னார்.

பாலு சார் பேசினார். 'விஜி, உன்னையும் சூர்யா போர்டில் தனக்கு அடுத்த ஒரு முக்கியமான டைரக்டராக ஆக்க உத்தரவு கொடுத்திருக்கிறார். மற்றும், உன்னை அனைத்து கம்பெனிகளிலும் டைரக்டராக்கி இருக்கிறார். அதற்கெல்லாம் ஆர்.ஓ.சி டாகுமென்ட்ஸ்ஸில் கையெழுத்து வேணும். என்னோட பர்சனல் வாழ்த்துக்கள்."

"எதுக்கு சார் இதெல்லாம். நான் சேர நினைப்பது சூர்யாவைத் தானே ஒழிய, நாட் இன் ஹிஸ் பிஸினெஸ். இது அவரும் நீங்களும் போட்ட உழைப்பு! நான் யாரு சார்? அதைத் தவிர, நான் சூர்யாவோடுதான் இருக்கப் போகிறேன். என்னத்துக்கு இந்த அவசரம்?"

"பெரியத் தொழில்கள் செய்யும் போது, இந்தச் சின்னச் சின்ன விஷயங்கள்தான் முக்கியம் விஜி. நாளைக்கு நானும் நீயும் கணவன் மனைவின்னா, சில விஷயங்களைச் சமாளிக்க இந்த சர்க்கஸெல்லாம் செய்யணும். இந்த ஆர்ப்பாட்டமெல்லாம் தேவை. இல்லைன்னா நிறைய சிக்கல்களை ஃபேஸ் பண்ணணும். அதைத்தான் இந்தப் பாதை கஷ்டமான பாதைன்னு முன்னாடியே சொன்னேன்.." சூர்யா உண்மையான நிலைமையை எடுத்துச் சொன்னான்.

"நான் அனிச்சப் பூ மாதிரி. சூர்யாங்கற வண்டைத் தாங்க முடியுமே தவிர வெளியுலகப் பட்சிகளைத் தாங்க முடியாது. நீங்களெல்லாம் அனுபவசாலிகள். நடத்துங்கள்!" என்று சிரித்துக் கொண்டே கையெழுத்துக்களைப் போட்டாள்.

பாலு சார் அதைக்கேட்டு உறக்கச் சிரித்தார். “சார், இவ கவிதைல மயங்கினவன் நான் ! எப்படி பேசறா பாத்தீங்களா?” என்று சொல்லி விஜியைப் பெருமையாகப் பார்த்தான். சிறிது வெட்கத்துடன் விஜி அந்த ரூமை விட்டு வெளியேறினாள்.

ஆஸ்ட்ரேலியா கிளம்பும் நாளும் வந்தது. விஜி முந்தைய நாள் ராத்திரியே சூர்யா வீட்டுக்கு வந்து விட்டாள். வீட்டில் அவனுக்கு வேண்டியவற்றை பேக்கிங் செய்து கொண்டிருந்தாள். விடியற்காலை ஃப்ளைட். குமார் நேராக ஏர்போர்ட்டுக்கு வந்து விடுவதாக சொல்லிவிட்டான். விஜி சூர்யா

‘விஜி, உன்னை விட்டு பிரியும் நேரம் வந்தாச்சு. இன்னும் ஒன் அவர்தான் இருக்கு ஏர்போர்ட்டுக்குப் போக!” என்றான்.

“என்ன பேசறே...? பாத்துப் பேசு. இனிமே நாம எப்படி பிரிய முடியும். அதான் நான் உன்கூடவே இருக்கப் போறேனே!” என்று இரண்டு கைகளால் அவன் காலரை இழுத்துப் பிடித்து மூக்கோடு மூக்கை மென்மையாகத் தொட்டாள். அந்த உரசல் அவனுக்கும் ரொம்பப் பிடித்திருந்தது. அவளின் இடுப்பைப் பிடித்து பின் புறம் தன் கைகளை இணைத்தான். விஜி இன்னும் அருகில் வந்தாள்.

“என்ன வேணும் உனக்கு? இந்த பிடி பிடிக்கிற!” என்று செல்லமாக கெஞ்சினாள்.

‘உன்னை விட்டுப் பிரிய மனசு வரல விஜி. வேணும்னா நீயும் எங்களோட வர்றியா?” என்று அவளை தன் பக்கம் இன்னமும் இழுத்தான். “கல்யாணமாகட்டும். போகலாம். இப்போ நீ கிளம்பற நேரம் வந்தாச்சு. டைம் ஆச்சு. நீ கிளம்பு....!” என்றவள் அவனின் இடுக்குப் பிடியிலிருந்து விலகினாள்.

“கார்த்தி என்ன எர்போர்ட்டில் விட்டுவிட்டு, மேடமை வீட்டில் விட்டுடு” என்று சொன்னவன் காரின் பின் பக்கத்தில் ஏறினான். விஜியும் பக்கத்தில் உட்கார்ந்தாள்.

“சாப்பாடு பார்த்து சாப்பிடு. எங்க போறதாயிருந்தாலும் குமாரை கூட அழைச்சுண்டு போ! எனக்கு அப்பப்போ போன் பண்ணு. சிகரெட் ரொம்ப பிடிக்காத.... அப்புறம்... குடிக்காத....” என்றவள் சற்று அமைதியானாள்.

“இதெல்லாம் போறும் சூர்யா. நிறைய பிடிச்சாச்சு. இனிமே சிகரெட் பிடிக்க மாட்டேன்னு எனக்கு ப்ராமிஸ் பண்ணு!” என்று தன் கையை நீட்டினாள். பலமாக சிரித்த சூர்யா, “பொய் ப்ராமிஸ் பண்ண எவ்வளவு நேரமாகும். ஆனா உனக்காக பண்றேன். ஊரிலிருந்து வரும்போது இனிமேல் சூர்யா வாழ்க்கைல சிகரெட் கிடையாது. அந்த சூர்யா செத்துடுவான்! போதுமா?” என்று அவள் கையில் தன் கையைத் தட்டினான்.

“போடா.... அபசகுணமா ஏதாவது பேசற! எதுக்கு எது வார்த்தை?” என்று செல்லமாக அலுத்துக் கொண்டாள்.

இன்னும் பலமாக சிரித்தான்.

டிரைவர் கார்த்திக் பேசினான். “ரொம்ப சந்தோஷமா இருக்கு சார். நீங்க உண்மையா சிரிச்சு நான் பார்த்ததே இல்ல சார். மத்தவங்களுக்காகவே சிரிச்சுப் பார்த்த உங்கள இன்னிக்குதான் உங்களுக்காக சிரிச்சுப் பாக்கறேன். விஜி மேடம். உங்களுக்குத்தான் தேங்க்ஸ் சொல்லணும். சாரை மாத்தின பெருமை உங்களுக்குத்தான் மேடம். உங்க தம்பியா நினைச்சு சொல்றேன் மேடம். நீங்க நல்லாயிருக்கணும்” என்றான்.

“அட, இதப் பாருடா..... நீ பேசி பார்த்ததே இல்ல! என்னடா ஆச்சு கார்த்திக் உனக்கு. இன்னிக்கு இவ்வளவு பேசறே. மேடத்துக்கு க்ளோஸ் ஆயிட்ட! ஆச்சர்யமா இருக்கு. என்னமோ நடக்கப் போறது.” என்று சூர்யா கார்த்திக்கைப் புகழ்ந்தான்.

“ஒண்ணுமே இல்ல சார். நீங்க நல்லாயிருந்தா உங்கள சார்ந்து இருக்கிற நாங்க எல்லாரும் நல்லா இருப்போம் சார்.”

“எனக்கு நீ பேசின சந்தோஷமே போறுண்டா.’- நான் நிஜமாவே ஹேப்பியா இருக்கேன்.”

“கார்த்திக். இவ்வளவு சொல்ற நீ ஏன் அவரை சிகரெட்ட விடச் சொல்லலை? அதைக் கேட்டிருக்கலாமே!”

‘விஜிம்மா.... உங்கள மாதிரி இருக்கறவங்க சொன்னாதான் நல்லா இருக்கும்.” என்று சொல்லிவிட்டு மௌனமானான் டிரைவர் கார்த்திக்.

“ஸோ, இனிமே நீ சிகரெட் பிடிக்க மாட்ட...!” என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே, கார் ஏர்போர்ட்டில் நின்றது.

காரைவிட்டு இறங்கினான். சிகரெட்டை கொளுத்தினான். குமார் முன்னமே வந்துவிட்டான். “இப்போதான் சொன்ன... உடனே கொளுத்திட்ட, திருத்தவே முடியாதுடா!” என்றவள் தலையில் கையால் அடித்துக் கொண்டாள்.

“வரும் போதுன்னுதான் சொன்னேன். அப்போ பிடிச்சா ஏன்னு கேளு!” என்றான்.

“ஹாய்டா.. ஹாய் விஜி... என்ன வாக்குவாதம்.?” என்றான் குமார்.

‘உன் நண்பன சிகரெட்ட நிறுத்தச் சொல்லு.”

“இப்போதான் டிபிகல் பொண்டாட்டி மாதிரியே பேசற. அவன் இனிமே மாட்னாம் பாரு. உன் டார்ச்சர் தாங்க முடியாம ஊரிலேந்து வரும்போது சைலன்ட்டான மாப்பிள்ளையா மாறப்போறான் பாரு விஜி!”.

‘டேய்..>! இவக்கூட இப்ப பேசினா நம்மள சாமியாராக்கிடுவா. நீ கிளம்பு. வா போகலாம்!” என்று கிண்டலடித்தான் சூர்யா.

“ஓ.கே... விஜி... சீ..யூ... ! ஐ வில் மிஸ் யூ தேர்! என்று கிளம்பினான். விஜியும் பதிலுக்கு “மீ டூ ஹியர்” என்றாள். குமாரும் கையை அசைத்தபடியே ‘பை..பை...’ சொல்லி கிளம்பினார்கள்.

இருவரும் பேசிக்கொண்டே உள்ளே போனார்கள்.

மறுநாளிலிருந்து, விஜியின் வேலைகளக் கூட்டினார் பாலு சார். போர்ட் மீட்டிங்க் அரேஞ்ச் செய்தார். விஜியின் புது பொஸிஷனை மற்றவர்களுக்கு எடுத்துச் சொன்னார். மெதுவாக அவர்களின் கல்யாண வாழ்க்கையையும் எல்லோருக்கும் ஒரு வகையில் எடுத்துச் சொன்னார். லீடர்ஸ் மீட்டிங்கிலும், விஜியின் டைரக்டர்ஷிப்பை தெரிவித்தார்.

விஜிக்கு நம் நாட்டிலிருந்தும் அயல் நாடுகளிலிருந்தும், வாழ்த்துக்கள் குவிந்தது.

சூர்யாவின் பாதி வேலைகளையும், பாலு சாரின் பல வேலைகளையும் கற்றுக் கொண்டதோடு இல்லாமல் செயல்படவும் செய்தாள். தன்னோட குருவாக பாலு சாரை நினைத்தாள். அவரிடமிருந்து நிறைய பிஸினெஸ் சூக்ஷமங்களைக் கற்றுக் கொண்டாள். இன்டெர்நேஷனல் டீலிங்க்ஸில் தானும் நுழைந்தாள். வியெஸ்ஸின் எல்லாவித வியாபாரங்களயும் புரிந்து கொண்டாள்.

ஒவ்வொரு கம்பெனி தலைவர்களுக்கும் இலக்கை அமைத்துக் கொடுத்தாள். அதை எப்படி செய்வது என்பதையும் சொல்லிக் கொடுத்தாள். வேலை செய்யும் பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் சம்பள உயர்வை செய்தாள் அவரவர்கள் குடும்பத்திற்கும் உரிய நல்ல ப்ளான்ஸை கொடுத்தாள்.

ஒவ்வொரு கம்பெனியிலும் வாடிக்கையாளர்களிடமிருந்து வந்த பின்னூட்டங்களைச் சேகரித்தாள். அதற்கு ஏற்றவாறு பிஸினெஸ் அமைப்பை மாற்றினாள். ஒவ்வொரு அமைப்பிலும் டெக்னாலஜியைப் புகுத்தினாள். அதிலிருந்து வியாபார பகுப்பான்மை என்கிற அனாலிஸிஸை கண்டுபிடித்தாள். அது அந்த வியாபாரத்தின் ஏற்றம் இறக்கத்தை காண்பிக்க வழியைத் தந்தது. அதற்கேற்றவாறு, அவர்களுடைய சர்வீஸை மாற்றியமைத்தாள்.

இப்படி ஒன்றன்பின் ஒன்றாக வியெஸ் க்ரூப்பின் வெற்றிப் பாதையை மேலும் பரப்பினாள். இத்தனையையும் அந்த ஒரு மாதத்திலேயே அமலாக்கினாள்.

பாலு சார் வியந்து போனார்.

விஜியின் வருகை அவர்கள் எல்லோருக்கும் மட்டுமன்றி அங்கு வேலை செய்த ஒவ்வொருவருக்கும் ஒரு முக்கியமான கட்டமாக மாறியது. எல்லோரும் விஜியைப் பாராட்டத் தொடங்கினர்.

அதேவேளை சூர்யா, குமார், மற்றும் அவர்களது குழுவினர் ஆஸ்ட்ரேலியாவில் இருந்த ஐ.டி கம்பெனியிடம் அவுட்சோர்ஸிங்க் ஆர்டருக்காகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

கிரிக்கெட்டில் உள்ள தொழில்நுட்ப மாற்றங்களில் பந்தின் வேகத்தைக் கண்காணிக்கவும், அது பேட்டில் பட்டவுடன் கடந்த தூரத்தையும் நேரத்தையும் கணிக்க உதவும் சாஃப்ட்வேர் உண்டாக்கும் பணியில் அந்தக் கம்பெனி இயங்கியது. இதைத் தவிர புது டெக்னாலஜியில் இயக்கி புதிய அம்சங்களை தனிச் சிறப்பாகக் கொடுப்பதற்கு உண்டான ப்ளானை தயாராக வைத்திருந்தார்கள்.

செயற்கை நுண்ணறிவு என்கிற ஆர்டிஃபிஷீயல் இண்டெலிஜென்ஸ் (ஏ.ஐ) மற்றும் இன்டர்நெட் ஆஃப் திங்ஸ் (ஐ.ஓ.டி) ஆகியவற்றை பயன்படுத்த வேண்டும். அதை செயல் செய்து அதற்கு தொடர்கின்ற வருடங்களிலும் உண்டான பராமரிப்புச் சேவையையும் இந்தியாவிலிருந்த வியெஸ் டெக்லாஜீஸ்க்கு கொடுக்க அந்தக் கம்பெனி முன் வந்தது.

சூர்யாவும், குமாரும் இரண்டு மாதத்திற்குள் அத்தனை வேலைகளையும் பேசி முடித்துவிட்டு இந்தியா திரும்ப ரெடியானார்கள். பண விஷயங்கள் பேச வேண்டியிருந்ததால், மேலும்

மூன்று நாட்களுக்கு தங்க முடிவு செய்தார்கள். முதலில் ராகேஷ் அண்ட் டீமை இந்தியாவுக்குப் ரிடர்ன் போகச் சொன்னார்கள்.

விஜியையும் பாலு சாரையும் மற்றவர்களுக்கெல்லாம் அந்த ஆர்டரைப் பற்றிச் சொல்லச் சொன்னான் சூர்யா.

அடுத்த நாள் காலை ஃப்ளைட். ஊருக்கு கிளம்புவது முன் தினம் அன்றைக்கு சூர்யாவுக்கு ராத்திரி விஜிக்கு பகல் வேளை. இருவரும் ஆன்லைனில் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

“இந்த ஆர்டர் நம்ம கம்பெனிக்கு ஒரு பெரிய விஷயம். குமாருக்குத்தான் தேங்க்ஸ் சொல்லணும். அவன் இல்லேன்னா ரொம்ப கஷ்டமா இருந்திருக்கும்.”

“ஹோ... வெரி குட். குமார் எங்க?”

“அவன் ரூமில் இருக்கான்.”

“டோடல் வேல்யூ எவ்வளவு?”

“இட் மே க்ராஸ் 8 டு 10 மில்லியன்!”

“ஸ்டாஃபிங் எப்படி?”

“கொஞ்சம் கஷ்டந்தான். ரேம்ப் அப் அண்ட் ஸ்கில் ஸ்கேலிங் பண்ணனும்.”

“டைம் இருக்குமா?

“அதைக் கொஞ்சம் எக்ஸ்டெண்ட் பண்ணனும்! பாக்கலாம். இட் இஸ் பாஸிபிள்.”

“ராகேஷ் ஹண்டாவா இதை ஹேண்டில் பண்ண முடியுமா?”

“முடியும். பட், இந்தியாவுல ஆள் கிடைக்கர்றது கஷ்டம். ட்ரெயினிங்க் ரொம்ப முக்கியம். கேம்பஸ்லேயே ரிஸோர்ஸிங்க் பண்ணனும். பாக்கலாம். முடியும்.”

“கொஞ்சம் இந்த பொண்டாட்டியப் பத்தி பேசலாமா?”

“நீதான் இதுவரைக்கும் கன்ட்ரோலர் மாதிரி கேள்வி கேட்ட. அதனால நான் பதிலச் சொன்னேன்.”

“போதும் ஆ.ஃபீஸ் விஷயம். எவ்வளவு சிகரெட் பிடிச்ச?”

“ஹே... உனக்குத் தெரியுமா... நான் சிகரெட்ட விட்டு டூ வீக்ஸ் ஆச்சு!!!!!!” என்று சந்தோஷமாகச் சொன்னான்.

“நிஜமாவா.....? சீரியஸ்லீ...? என்னால நம்பவே முடியல! எப்படி நிறுத்தின? இல்ல சும்மா சொல்றயா???? ஹோய்....சொல்றா” என்று செல்லமாக கேட்டாள்.

“ஆமாம். குமார்தான் சாட்சி. வேணும்னா கூப்டு கேளு.” என்று சின்னக் குழந்தையைப் போல பேசினான்.

“எனக்கு நீ சொன்னா போதும்.

கொஞ்சம் சீரியஸாப் பேசினான் சூர்யா. “என் கூட நீ வர்றன்னு சொன்னவுடனேயே எனக்கு எல்லாமே செட் ஆயிடுத்து விஜி. எனக்குன்னு வாழ்க்கைல நீ இருக்க.அது போதும் விஜி.”

“ஹே.... ஒண்ணே ஒண்ண சொல்லு. ‘என் உயிர் விஜிதான்’ ன்னு நீ எழுதினது உண்மைதானே?”

“அதுல ஏன் உனக்கு சந்தேகம்?”

“உனக்கு இன்னும் என்மேல கோபமா சூர்யா?”

“கோபம் சூழ்நிலையின் சூனியத்தனம். - அதனால கோபம், உன்மேல இல்ல.”

“பழைய சம்பவங்கள் இன்னும் என்ன கொல்றது சூர்யா!”

“உன்னோட மனசுக்கு மரியாதய கொடு. அடிமையாகாத!”

‘அப்படீன்னா...?”

“பழையதுன்னு நீயே சொல்லிட்ட! அதுல சுகம் கிடைச்சா அது என்னிக்கும் புதுசுதானே? கிடைக்கலையா, அப்போ, அது வெறும் சம்பவம். அவ்வளவுதான்!-

“அப்போ நாம பிரிஞ்ச காலத்துல, நீ என்ன நினைச்சதே இல்லையா?”

“நான் உன்ன மறந்தாத்தானே அந்தக் கேள்வி. எனக்கு இன்னிக்கும் அந்த விஜியின் மேல் இருந்த ஈர்ப்பு யார்கிட்டேயும் இல்ல.”

“தப்பா நினைக்காத. நீயும் கல்யாணம் பண்ணிக்கவேயில்ல. உடல் ரீதியா இருக்கும் ஆசைகளையே வெறுத்துட்டயா?”

“தப்பா நினைக்க ஒண்ணுமேயில்ல. ‘நிலைகொள்ளாத இரண்டு உடல்களும், நிலையில்லாத இரண்டு மனங்களும் எப்போதும் களைத்துப் போய் விடுகின்றன.’ ன்னு ரொம்ப வருஷத்துக்கு முன்னாடி நான் எழுதியதா ஞாபகம். நான் என்னிக்குமே உன் உடலைப் பத்தி நினச்சதேயில்ல.” என்று மனதிலுள்ளதை சிம்பிளாகச் சொன்னான்.

“நீ ரொம்ப க்ரேட் சூர்யா. இவ்வளவு பெரிய ஆளாகியும். எப்படி... ஒரு பொண்ணக் கூட பாக்காம உன் வாழ்க்கைய ஓட்டின? அதுல ஒரு பக்கம் பெருமையா எனக்கு இருந்தாலும், இன்னொரு பக்கம் நான் உனக்கு செஞ்சத துரோகமாத்தான் நான் நினைக்கிறேன்.”

“ஒரு க்ரேட் மண்ணாங்கட்டியும் இல்ல” நீ போன பிறகு என் மனசதான் காதலிச்சேன். ஆனா அந்த மனசுல உன்ன வெச்சுதான் ஒரு கற்பனையான வாழ்க்கை வாழ்ந்தேன். அதுலயும், நீ இப்போ கேட்கிறா மாதிரி நானே எனக்குள் கேள்விகள கேட்டுப்பேன். அதுல எனக்கு நிறைய விடை கிடைக்கும். அதை வச்சு வாழ்ந்தேன். ஆனால், இது எவ்வளவு பேருக்குப் புரியும்னு எனக்குத் தெரியாது.”

“கவலையை மறக்க வேற பெண்கள் எம்மாத்திரம் சூர்யா?”

“பெண்களுக்கும் காதலிக்கும் இருந்த வித்தியாசங்களை யோசிச்சேன். எது சரின்னு முடிவு எடுத்தேன். அவ்வளவுதான்.”

“இப்போ நான் எடுத்த முடிவு கரெக்டா?”

“முடிவுன்னு ஆகிப்போச்சு. முதலுக்கு ஏன் போற!”

“முடிவில் என்னதான்டா சொல்ல வர்ற?”

“இருக்கற வரைக்கும் நம்ம வாழ்க்கையை வாழ்வோம். கொடுப்பதும் எடுப்பதும் கடவுள்கிட்டதான் இருக்கு. இதுதான் என்னோட அட்வைஸ்.”

“மிஸ்டர் சூர்யா. இந்த வேதாந்தம் பேசறுத்துக்கா உங்கிட்ட பேசினேன். நேரத்த கடத்திட்டியேடா.... சரி, நாளக்குப் ஃப்ளைட்டுக்கு முன்னாடி போன் பண்ணு. குட்நைட்.”

“குட்நைட் விஜி.”

14 மணி நேர ட்ராவலைக் கடந்து சூர்யாவும், குமாரும் வந்த விமானம் சென்னை ஏர்போர்ட்டுக்குள் சாயங்காலம் 6 மணி வாக்கில் நுழைந்தது. பேசிக் கொண்டே வெளியில் வந்தார்கள்.

“என்னடா குமார் ...என் வீட்டுக்கு வாயேன். சாப்டு ஒரு தூக்கம் போடலாம். விஜி சாப்பாடு பண்றா”

“இப்போதைக்கு இன்னும் நீ எலிஜிபிள் பேச்சிலர். உன் வாழ்க்கை ஜாலி. என் பொண்டாட்டி நாலு தடவ போன் பண்ணிட்டா! நான் போகணும். அப்புறம் அப்பாக்கு உடம்பு சரியில்லடா. நான் உன் கிட்ட சொல்லலை. ஹி இஸ் இன் ஹாஸ்பிடல் நௌ.”

“என்னடா ஆச்சு? ஏண்டா என் கிட்ட சொல்லல மாங்கா? இந்த நியூஸ் எப்போ கிடைச்சது? வா ஆஸ்பிடலுக்கு நானும் வர்றேன். போலாம்.” உண்மையான அன்புடன் சொன்னான்.

“ரெண்டு நாள் முன்னாடியே வந்த நியூஸ். ஹி இஸ் ஸ்டேபிள். நோ இஷ்யூஸ்! நான் பாததுக்கறேன். முடிஞ்சா நாளைக்கு வாடா. இப்போ ரெண்டு பேருமே ரொம்ப டையர்ட்!”

“ஓகே! நாளைக்கு ஷ்யூரா வர்றேன். பைடா... குமார். தேங்க்ஸ் ஃபார் எவ்ரிதிங்க்.” என்று வழியனுப்பி விட்டு தன் காரில் ஏறினான்.

அதிசயமாக சென்னையில் மேகமூட்டமாக இருந்தது. சீக்கிரமே இருட்டாக ஆகிப் போனது. அந்த சனிக்கிழமை, சாயங்காலம் ஜி.ஸ்.டி ரோடில் ட்ராஃபிக் இல்லாமலும், ஒரு ஸ்வாரசியமும் இல்லாமலும் அசடு வழிந்தது.

விஜி சூர்யாவை எதிர்பார்த்துக் கொண்டு அவன் வீட்டில் ராத்திரி தானே சாப்பாடு தயார் செய்து கொண்டிருந்தாள். சமையல் செய்யும் மாமியை வீட்டிற்கு அனுப்பி வைத்தாள். டிரைவர் கார்த்திக் சூர்யாவை கூட்டிவர ஏர்போர்ட் சென்றிருந்தான். குமார் அவன் காரில் அவனின் சென்னை வீட்டிற்குப் போவதாக ப்ளான். சூர்யா வீட்டில் வேலைக்கார வேலுவும் அவன் மனைவியும் பின்புறம் இருக்கும் அவர்கள் வீட்டிற்குப் போய்விட்டார்கள்.

சூர்யாவின் வீடு ஒரு பெரிய பங்களா. வேலை செய்வதற்கு பல ஆட்கள். அழகான போர்டிகோ. கைவண்ணம் காட்டப்பட்ட இண்டீரியர்ஸ். தோட்டம், பெரிய சைஸில் ரூம்கள். 16 பேர் உட்காரும் டைனிங் டேபிள். மொத்தத்தில் பெரிய பணக்காரன் வாழும் வீடு.

லதாவின் போன் வந்தது. “விஜி, குச்சி வந்துட்டானா? ஏன் போன எடுக்கலை. எவ்வளவு தரம் பண்ணினேன்.”

“லதா, அவா ரெண்டு பேரும் இப்போதான் ஃப்ளைட்லேந்து இறங்கியிருக்கா.”

‘சரி....! அங்க என்ன சமையல்?”

“ரோடி, தால், ஃப்ரைட் ரைஸ், பன்னீர் பட்டர் மஸாலா, அண்ட் பால் பாயசம்.”

“ஆஹா...சூப்பர். நான் வரட்டுமா?” என்று கிண்டலடித்தாள்.

‘பாதி ஓவர். உடனே கிளம்பி வா, எனக்கு ஹெல்ப் பண்ணு!” என்று சொன்னவள் சிரித்துக் கொண்டே போனை வைத்தாள்.

செய்து வைத்ததை ஒவ்வொன்றாக கிச்சனிலிருந்து டைனிங் டேபிளுக்கு கொண்டு வந்தாள். பால் பாயசம் இருந்த பாத்திரம் சற்றே கைகளிலிருந்து வழுக்கியது. பாத்திரத்துடன் பாயசம் கீழே விழ அத்தனையும் கொட்டியது. “அய்யய்யோ.... சீ... நான் சரியா பிடிக்கலை.” என்று மனதில் நினைத்துக் கொண்டு வருத்தப் பட்டாள்.

மனதுக்கு சரியாகப் படவில்லை. ‘வருவதற்கு முன் மறுபடியும் செஞ்சுடலாம்’ என நினைத்து மறுபடியும் புதுப் பாலைக் கொட்டி சுட வைக்கலானாள். மற்றவை எல்லாவற்றையும் ஜாக்கிரதையாக எடுத்து வைத்தாள்.

இத்தனை நாள், சூர்யாவைப் பிரிந்து தூரத்தில் இருந்த போதிலும், அவன் அருகிலேயே இருப்பதைப் போலவே உணர்ந்தாள். உருவங்களை விடுத்து உள்ளங்களை நேசித்தவர்களாகவே இருவரும் இருந்தனர்.

அடுத்து கண்ணனிடமிருந்து வீட்டு லைனுக்கு போன் வந்தது. “ஹலோ...” என்றாள் விஜி.

‘வந்துட்டானாம்மா?” என்று ஒரு வார்த்தையில் கேள்வியைக் கேட்டான். “ இன்னும் இல்ல கண்ணா. ஆன் தெ வே!” என்றாள் விஜி.

“ஓ.கே. நான் பண்ணினேன்னு சொல்லு!’ என்ற கண்ணன் அடுத்த கேள்வியையும் கேட்டான். ‘பலே....! இன்னிக்கு உன் சாப்பாடா?” நான் வரலாம் போல இருக்கே?”

‘கட்டாயமா வர்றேன்னா சொல்லு. உனக்கும் சேர்த்து செய்யறேன்.”

“சும்மா சொன்னேன். நானெங்கம்மா வரப் போறேன். சும்மா கேட்டேன்! சரி, நான் போன் பண்ணதா சொல்லு. ‘பை...பை...’

அதற்குள் அங்கே, சூர்யாவின் கார் ஏர்போர்ட்டுக்கு வெளியே வந்தது. பின்னாடியே குமாரின் கார். அதையும் டிரைவர்தான் ஓட்டிக் கொண்டிருந்தான். ஒன்றின் பின் ஒன்றாகத்தான் வந்து கொண்டிருந்தது. அரை கிலோமீட்டர் கூட தாண்டியிருக்காது. சூர்யா வண்டி ‘கிரீச்சென்ற’ ப்ரேக்குடன் ஓரம் நின்றது. குமாரின் வண்டி தாண்டிக் கொண்டிருந்தது.

அதே சமயம், சூர்யாவின் காரைத் தாண்டிய குமாரின் காரும் நின்றது. குமார் திரும்பிப் பார்த்தான். சரியாகத் தெரியாததால் காரை விட்டு இறங்கிப் பார்த்தான். சற்று தூரத்தில் சூர்யாவின் டிரைவர் பின்னாடி கதவைத் திறந்து தலையை உள்ளே வைத்திருந்தான். குமார் சூர்யாவுக்குக் செல்போனிலிருந்து கால் பண்ணினான். சூர்யா எடுக்கவில்லை. உடனே காரில் ஏறிக்கொண்டு தன்னுடைய டிரைவரை ரிவர்ஸ் எடுக்கச் சொன்னான்.

“”என்ன ஆச்சு கார்த்திக்?” என்று பரபரப்பாக கேட்டபடியே சூர்யாவைப் பார்த்தான். கண்கள் மூடியிருந்தன. சூர்யாவிடமிருந்து பேச்சு இல்லை. “டேய், சூர்யா, என்னடா ஆச்சு! டேய் எழுந்திருடா.... சூர்யா.... டேய்......” என்று மிகுந்த பதட்டத்துடன் அவனை எழுப்பிக் கொண்டிருந்தான். கோபமாக கார்த்திக்கைப் பார்த்து “கார்ல என்னடா ஆச்சு?” என்று அதட்டினான்.

“முதல்ல, என்னயும் என் குடும்பத்தையும் நலம் விசாரித்தார் சார். பயங்கரமான பசிடா, சீக்கிரம் போ!” ன்னு சொன்னார். ரொம்ப வேர்க்குது, ஏ.சி யை பெரிசு பண்ணுன்னு சொன்னார். நான் ரெண்டு பாயிண்ட் பண்ணினேன். இன்னும் கொ...ஞ்ச்...ஜ்ஜ்.....ம்............. னு சொல்ல வந்தார் போல. ஆனா பேச்சு வரல. நான் உடனே சார், சார்னு கூப்பிட்டேன். சாரால பேச முடியல. முகமெல்லாம் ரெட்டா ஆயிடுச்சு.

ப்ரேக் போட்டு இப்போ பாக்கறேன்...சார்." என்று சொன்ன கார்த்திக் நடுக்கமாக காணப்பட்டான்.

"உடனே வண்டி எடு. பக்கத்துல இருக்கிற ஆஸ்பிடலுக்குப் போ.... சீக்கிரமா....போ...... என்று கார்த்திக்கை விரட்டினான். "நீ பின்னாலேயே வா!" என்று தன் டிரைவரிடம் சொன்னான். உள்ளே உட்கார்ந்த குமார் சூர்யாவை தன் தோளின் மீது சாயவிட்டான். "டேய்... சூர்யா.. இங்க பாருடா... குமார்டா..... டேய்...கண்ண திறடா.... டே... நம்ம வீட்டுக்கு வந்துட்டோம்டா... கண்ண திறடா சூர்யா.... " என்று கதறிப் பார்த்தான். சூர்யாவிடமிருந்து ஒரு அசைவுமில்லை.

"சார், வெங்கடேஷ் ஆஸ்பிடல் பெரிசு. நல்ல டாக்டர்ஸ். உடனே அட்டண்ட் பண்ணுவாங்க... அங்கே போலாம் சார்...." என்றான் கார்த்திக்.

"எங்கயாவது போ... ஆனா சீக்கிரம் போ..." என்றான்.

ஏழு நிமிஷங்களில் இருந்தது ஆஸ்பத்திரி. கார் போய்க் கொண்டிருந்தது. இன்னும் நுழைய சில நிமிஷங்கள்தான் இருந்தது. போர்ட்டிகோவில் கார் நின்றது. எமர்ஜென்ஸி ஸ்டா:ப் ஓடி வந்தார்கள்.

வந்தவர்களிடம் குமார் "சார் பேஷன்ட், வியெஸ் க்ரூப்பின் சேர்மேன். மீடியா வராம பாத்துக்குங்க. பேஷன்டுக்கு அட்மோஸ்ட் :ப்ர்ஸ்ட் எய்ட் கேர் தேவை. ஸ்டேட் மினிஸ்ட்ரி, சென்ட்ரல் மினிஸ்ட்ரிக்கெல்லாம் கொஞ்சம் கூட விஷயம் லீக் ஆகக் கூடாது. மேஜர் அட்டென்ஷன் ரிக்கொயர்ட்! ஸ்ட்ரிக்ட்லி நோ போடோஸ் ஆர் வீடியோஸ் :ப்ரம் எனி ஒன். அண்டெர்ஸ்டுட்?" என்றான். சொல்லிக் கொண்டிருக்கும் போதே, 'கார்த்திக், சூர்யா காரைப் பின்னாலப் போடு. வாசல்ல நிறுத்தாத!" என்றான். ஆஸ்பத்திரியின் நர்ஸ், சூர்யாவின் பாக்கெட்டிலிருந்த எல்லாவற்றையும் குமாரிடம் எடுத்துக் கொடுத்தார்கள். சூர்யாவின் செல்போனையும்தான்.

ஆஸ்பிடல் ஸ்டா:ஃபும் தனி இடத்தை ஒதுக்கி யாரும் வராதபடி அமைத்தார்கள். சீனியர் டாக்டர்ஸ் உடனே சேர்ந்தார்கள். எல்லாவித கோணத்திலும் அந்த ஐ.ஸி.யு வில் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அதற்குள் குமார் முதலில் பாலு சாருக்கு கால் பண்ணினான். "ஐ திங்க் வி ஆர் லூஸிங்க் சூர்யா!" என்று சொல்லி அழுதுவிட்டான். அந்தப் பக்கத்திலிருந்து, "என்ன சொல்ற குமார்? யாருக்கு என்ன ஆச்சு? என்றார். முழுக்க நடந்ததைச் சொன்னான். "நான் அங்க உடனே வரறேன் குமார். மீடியா, வீடியோஸ், போட்டோஸ் இதையெல்லாம் அவாய்ட் பண்ணு!" என்றார் பாலு சார். "அதெல்லாம் சொல்லியாச்சு சார்! நீங்க வாங்க..." என்றான்.

கண்ணனுக்குப் பண்ணிணான். அவன் துடித்துவிட்டான். 'உடனே கிளம்பி வர்றேண்டா." என்று பதறினான்.

அடுத்தது லதாவுக்கு தெரிவித்தான். "எனக்கு தெரிஞ்சு அவன் நம்ம எல்லாரையும் விட்டு போயிட்டான் லதா. ஐ திங்க் ஸோ! பாடி ஜில்லிட்டுப் போச்சு. மேஸ்ஸிவ் ஹார்ட் அட்டாக்காதான் இருக்கும். விஜி தான் பாவம். அவ கிட்ட எப்படி இதைச் சொல்றதுன்னே தெரியல... அ:ஃப் கோர்ஸ் இன்னும் டாக்டர்ஸ் எதுவும் சொல்லல!" ன்னு பேசிக் கொண்டிருக்கும் போதே சூர்யாவின் போனில் விஜி கால் செய்துவிட்டாள். 'கொஞ்சம் இரு. விஜி கால் பண்றா, என்னன்னு சொல்லுவேன்.....' என்று சொல்லி அந்த இன்னொரு போனை குமார் அட்டெண்ட் பண்ணினான்.

"ஹலோ.... எங்க இருக்க சூர்யா?"

"விஜி... நான் குமார் பேசறேன்"

"ஹே.... எங்க...இருக்க... குட்...நீயும் இங்க வர்றியா? சாப்பாடு ரெடி!"

"நடுவுல ஒரு சின்ன வேலை. முடிச்ச உடனே கால் பண்றேன்."

"வீட்டுக்கு வரும்போது என்ன வேலை? எனக்குப் புரியல!"

“ஒண்ணுமில்லம்மா... ஒரு அஞ்சு நிமிஷம்....!”

“சூர்யா எங்க? அவன் போன் எப்படி உன் கிட்ட?”

“உள்ள இருக்கான்.... கொஞ்சம் டைம் குடு... ஐ வில் கால் யூ!”

“இஸ் எவ்ரிதிங்க் ஆல்ரைட்?”

“எஸ்....எஸ்... வில் கால் யூ”

“முடிஞ்சவுடனே சூர்யாவை என்னோட பேசச் சொல்லு.”

“ஷ்யூர்....வில் டு”

விஜி போனை வைத்தாள்.

லதாவின் ஃபோன் மறுபடியும் வந்தது. “விஜி என்னடா சொன்னா?” என்று பரபரப்பாக அழுது கொண்டே கேட்டாள் லதா. “எனக்கு ஒண்ணுமே புரியலப்பா! தலை சுத்தர்றது”- என்றான் குமார்.

“அவன் அதிகமாக சிகரெட் பிடிச்சானே, அதனாலிருக்குமோ” என்றாள் லதா.

“இல்லை...இல்லை...இன்னொரு சர்ப்ரைஸ் அவன் கடந்த ரெண்டு வாரமா சிகரெட்டே பிடிக்கல தெரியுமா?

‘என்னன்னு தெரியல குமார்... ஷாக்கிங்கா இருக்கு. நான் வரட்டுமா?” என்றாள் லதா.

“வேணாம் வெயிட் பண்ணு. நான் சொல்றேன். போனை வை!” ன்னு சொல்லிட்டு டாக்டர்களை பார்த்திருந்தான்.

பதினைந்து நிமிஷம் ஆனது. சீனியர் டாக்டர் ஒருவர் வெளியே வந்தார். குமாரிடம் ஆங்கிலத்திலும் தமிழிலும் கலந்து பேசினார். “மிஸ்டர் குமார். ஐ யம் டாக்டர் சிவராம். வெரி சாரி டு டெல் யூ! ஹி குட் நாட் சர்வைவ் திஸ் மேஸிவ் அட்டாக் ஈவன் ஆஃப்டர் சி.பி.ஆர் அட்டெம்ப்ட். அசாதாரணமா வர்ற ஹார்ட் ரிதம்ஸ்க்கு அரித்மியான்னு பேரு. ரொம்ப மன உழைச்சல், டென்ஷன், ஃபடீக் இதெல்லாம்

கரோனரி ஆர்டெரில ப்ரெஷர் கொடுக்கும். அது ஸ்மோக்கிங்க், குடும்ப வரலாறு, ஓவர் கொழுப்பு அல்லது விரிவாக்கப்பட்ட இதயம் எக்ஸெடரால்லாம்தான் காரணம்." என்று மெதுவாக விளக்கினார்.

"இந்த விதமான கரோனரி ஸ்பாஸம் அமைதியான மாரடைப்ப ஏற்படுத்தும். ஆர்டெரீஸ் இறுக்கமாகும்போது இரத்த ஓட்டம் கடுமையாக குறைந்து போகும். அவர் இங்கே வரும்போதே நிறைய செயலிழந்து போச்சு. நாங்க முடிஞ்சதை ட்ரை பண்ணினோம். மிஸ்டர் குமார், நீங்க மத்த ஏற்பாடுகளையும், காரியங்களையும் செய்ய ஆரம்பிக்கலாம். நாங்கள் எங்களால் முடிஞ்ச உதவியை செய்கிறோம்." என்றார் அந்த தலைமை டாக்டர்.

சூர்யா சற்று நேரம் உள்ளேயே இருக்கட்டும். நான் மற்ற ஏற்பாடுகளைச் செய்கிறேன் என்று டாக்டரிடம் சொன்னான் குமார்.

டிரைவர் கார்த்திக்கு ஃபோன் செய்து வரவழைத்தான். அழுது கொண்டே வந்தான் கார்த்திக். "சார் என் கிட்டதான் கடைசியா பேசினார்...... நம்ப முடியல சார்.... எவ்வளவு பெரிய மனுஷன்.... கார்லயே போயிட்டாறே சார்..... நான் இனிமேல் எப்படியிருப்பேன்னு தெரியல சார்..... " என்று குமாரின் கைகளைப் பிடித்துக் கொண்டே அழுதான்.

"பொறுத்துக்கோ. நீ அழுது பெரிசு பண்ணாத. நீ செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருக்கு. கொஞ்சம் அமைதியாக இரு." என்று சொல்லிக் கொண்டே சூர்யாவின் ஆப்பிள் மொபைலின் பின்னைப் போட்டான்.

இந்த டூரின் போதுதான் தன்னுடைய பின்னை குமாருக்கு ஒரு முக்கியமான காரணத்துக்காக தெரிவித்தான். அதை நினைத்து வருத்தப் பட்ட குமார். 'இந்த காரணத்துக்காத்தான் என் கிட்ட உன்னோட 'ஆப்பிள் பின்ன' சொன்னயாடா நீ!" என்று வாய்விட்டு அழுது விட்டான். அவனால் கட்டுப் படுத்த முடியவில்லை.

அதிலிருந்து, லண்டனிலிருந்த வித்யாவுக்குப் போன் போட்டான்.

‘சொல்லு சூர்யா. இந்தியா வந்துட்டயா?”.

‘வித்யா, நான் குமார் பேசறேன்.”

‘சொல்லு குமார். ஹௌ ஆர் யு?”

“ஐ யம் ஓ.கே. என்று தயங்கியவன்,

“இது சூர்யா போன் நம்பர் தானே?”

சற்று தடுமாறி “ஐ வாண்ட் டு டெல் யு சம்திங்க் பேட்.!”

‘டெல் மி.....!”

“ஆர் யு ஓ.கே டு இட்?”

‘சொல்லு குமார். என்ன விஷயம். எனிதிங்க் ஸீரியஸ்?”

“சூர்யாக்கு மேஸிவ் ஹார்ட் அட்டாக். இப்போ நம்மள விட்டுப் போயிட்டான். ஒரு பத்து நிமிஷமாயிருக்கும். நான் ஆஸ்பிடல்லதான் இருக்கேன். ” படபடப்பாக வித்யாவிடம் சொன்னான்.

“என்ன சொல்ற குமார்..... ரெண்டு நாள் முன்னாடி என் கிட்ட பேசினானே. ஒண்ணும் உடம்ப பத்தியெல்லாம் சொல்லலியே. என்னடா ஆச்சு திடீர்னு? கடவுளே.....!!” என்று சிறிது மௌனமானாள் வித்யா.

குமாரும் மௌனமானான்.

“அன்னிக்கு அப்பா அவன் கிட்ட பேசினார். அவனோட கல்யாணத்தைப் பத்தி. அந்த விஜி திரும்ப வந்துட்டாளாமே! அவனையே கல்யாணம் செஞ்சிக்கிறேன்னு சொன்னாளாம். அப்பா வாஸ் ஆல்ஸோ ஹாப்பி. சந்தோஷமாத்தானே இருந்தான். என்ன ஆச்சுன்னு தெரியலயே....! எல்லாரையும் மாதிரி இல்லாம் கொஞ்சம் கூட சந்தோஷத்தைப் பாக்காமலேயே போயிட்டாண்டா என் தம்பி. என்னிக்கு அவன் அவளோட காதல்னு சொன்னானோ, அன்னிக்கே

அவன் எங்களயெல்லாம் விட்டுட்டு போயிட்டான். இப்போதும், இவ தூர இருந்த வரையிலும், அவன் நன்னாயிருந்தான். ரொம்ப பெரிய ஆளாவும் ஆனான். இவ திரும்பி வந்தா! அவன் செத்தே போயிட்டான்!" என்று சொல்லி அழுது கொண்டிருந்தாள்.

'வித்யா... ஒரு சின்ன ஹெல்ப். அப்பா கிட்ட இதை எப்படியாவது சொல்லிடேன்." என்று கேட்டுக் கொண்டான்.

"நான் சொல்றேன். அதைத் தவிர நாங்கள் கிளம்புவதைப் பற்றியும் சொல்றேன். பாலு சாரை எனக்கு கால் பண்ணச் சொல்லு" என்று சொன்னாள்.

"ஓ.கே. நான் இப்போது தனியா ஆஸ்பத்திரியில் இருக்கேன். சொல்றேன். கொஞ்சம் டைம் கொடு." எனச் சொல்லி அங்கு இருந்த ஆஸ்பிடல் ஸ்டாஃப்களிடம் ஏதோ பேசிக் கொண்டிருந்தான்..

அரை மணி நேரத்தில் பாலுவும், கண்ணனும் வந்தார்கள். பின்னாடியே லதாவின் கணவன் மோகனும் வந்து விட்டான். மாறி மாறி ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

சூர்யா இல்லாமல் அவனைப் பற்றி பேசிக் கொண்டது இதுவே முதல்முறை.

சூர்யாவின் போன் அடித்தது. நினைத்தார்கள். விஜிதான் அழைத்தாள். குமாரும் போனை எடுத்து விட்டான். பாலு சாரிடம் உடனே கொடுத்து, "நீங்க பேசுங்க சார்...ப்ளீஸ்! என்னால விஜிகிட்ட பேச முடியாது." என்று போனைக் கொடுத்து விட்டான்.

"என்ன இவ்வளவு லேட்?" என்றே ஆரம்பித்தாள்.

"விஜி, நான் பாலு பேசறேன்"

"நீங்களா ! குட் ஈவினிங் சார். எங்க அங்க...." என்று கேள்வி கேட்டவள், உடனே மௌனமானாள்.

"இல்ல விஜி... சும்மாதான்....இங்க...."

மௌனமாகவே இருந்தாள் விஜி.

'விஜி..” என்றார். மௌனம் நீடித்தது. “அம்மா விஜி.....” மறுபடியும் பாலு சார்.

“சார்...யாருக்கு என்ன ப்ரச்சனை. சூர்யாவுக்கு ஏதாவது ப்ராப்ளமா?” என்று ஆணி அடித்தால் போல, ஆனால் அமைதியாகக் கேட்டாள்.

“நீ எங்க இருக்க?” என்று பதிலுக்கு கேள்வியைக் கேட்டார்.

“சூர்யா வீட்டில் சாப்பாடு செஞ்சுட்டு காத்துண்டு இருக்கேன்.”

“கொஞ்சம் பொறும்மா. சூர்யாவுக்கு இங்க கொஞ்சம் உடம்பு சுகப் படல. மூச்சு விட கஷ்டமா இருக்குன்னார்! அதுதான் வெங்கடேஷ் ஹாஸ்பிடல்ல இருக்கோம். வந்துடறோம்.”

“நாங்கன்னா? யார் யாரெல்லாம் அங்க இருக்கா சார்? என்ன ஆச்சு பாலு சார்? நீங்க அங்க போகும்படியா சூர்யாவுக்கு என்ன உடம்பு? என் கிட்ட இப்போ பேசும் போது 'பசி வயத்த கிள்ளர்து' ன்னு சொல்லிட்டு ஒன் அவர்ல வந்துடறேன்னு சொன்னானே.” என்ன ஆச்சு? இஸ் தேர் சம்திங் ராங்க்?” - என்று படபடத்து பேசினாள் விஜி.

கேட்டுக் கொண்டிருந்த பாலு சார் அதை வித்தியாசமாக கையாள நினைத்தார். “யெஸ், தேர் இஸ் சம்திங் ராங்க்ன்னா நீ ஏத்துப்பயா விஜி?” என்று கோபமாக பேசுவதைப் போல பேசினார். “வாழ்க்கைல ஏதாவது மாற்றம் வந்தா கொஞ்சம் பதட்டமாதாம்மா இருக்கும். அதையும் பொறுமையா பார்த்தா சூழ்நிலைக்கு ஏத்தாமாதிரி நல்லதா இருக்கும். இந்த விஷயம் அவசரத்தில கேட்டுக்க கூடிய விஷயமில்ல. பொறுமையா பேசறேன்னு சொல்லு. நான் பேசறேன்” என்று அழுத்தமான கட்டுப்பாடுகளோடு சொன்னார்.

“ஏன் சார், கோபமா பேசறேள்?” என்று கேட்டே விட்டாள்.

“கோபம் இல்லம்மா விஜி. விவேகம்.”

“சரி சொல்லுங்கோ சார்!”.

“வண்டில வரும்போது பேசமுடியாம போனதால இவா ஆஸ்பிடலுக்கு வந்திருக்கா. இப்போ டாக்டர்ஸ் இருக்காங்க. கொஞ்சம் கஷ்டமாத்தான் இருக்குன்னு சொல்றாள். அவ்வளவுதான். கொஞ்சம் வெயிட் பண்ணு. நான் உனக்கு சொல்லறேன்.”

“ஓ.கே” என்று சோகமாக சொல்லி ஒரே வார்த்தையில் போனை வைத்தாள்.

இவர்கள் பேசிக்கொண்டிருந்த அடுத்த 10 நிமிடங்களில் விஷயம் கசிந்து டி.வி மீடியாவுக்குப் போய் விட்டது. அங்கே வேலை செய்தவர்கள் ட்ரைவர்கள் முதல் டாக்டர்கள் வரை இருந்தார்கள். அங்கே யாரென்று குற்றஞ்சொல்ல?

விஜியின் யூகம் சரிதான். டி.வியை ஆன் செய்தாள். ந்யூஸ் சேனலுக்கு மாற்றினாள். அதிலிருந்த சிரித்து கொண்டிருந்த சூர்யாவின் ஃபோட்டோ விஜியை அழ வைத்தது.

அமைதியாக அழுதாள். மென்மை தெரிந்தது. வாசலில் பெல் சத்தம் கேட்டது. மெதுவாகப் போய் கதவைத் திறந்தாள். லதா வந்து விட்டாள். விஜியை பார்த்தவுடன் அப்படியே கட்டிக் கொண்டு பெரியதாக அழுது விட்டாள். விஜி பெரிதாக அழவில்லை.

அமைதியாகப் பேசினாள் விஜி.

“பசி ன்னு சொல்லிட்டு சாப்பிடாமயே போயிட்டான் லதா! ‘தூக்கி எறிஞ்ச ஒரு குப்பை நான்’. எனக்கு ஒரு வாழ்க்கைய கொடுக்கறேன்னு சொன்னான்! நான் அவனுக்கு ராசியில்லாதவ லதா....! கூட சேரணும்னு நினைச்சவுடனே, ஏதாவது அவனுக்கு கெடுதல் நடக்கும். இந்த தடவை ரொம்ப பெரிசான விஷயம்......! கல்யாணம்......! நான்தான் அதுக்கு காரணம். என்னாலதான் அவன் சரியாவே வாழவே இல்ல.... லதா!” மனதில் இருந்ததைப் பேசினாள்.

“இன்னொரு விஷயம் தெரியுமா? நான் சிகரெட்ட விட்டு டூ வீக்ஸ் ஆகறதுன்னு இப்போ சொன்னவுடனே என்ன விட சந்தோஷப்பட்டது யாருமே கிடையாது.

இறந்தவர்களுக்கு இருப்பவர்கள் ஒவ்வொருவரும் அவர்களுடன் நடந்த சம்பவத்தை ஒரு சென்டிமெண்டல் டச்சோடு நினைப்பதும், சொல்லுவது இந்த மாதிரி சூழ்நிலையில் பொதுவானதுதான்.

லதாவால் ஒன்றுமே பேச முடியவில்லை. வருத்தங்கள் தொடர்ந்தன. ஆனால் அழவே முடியவில்லை. சூர்யா தன்னுடன் இருந்த சின்ன சின்ன சம்பவங்களை நினைத்துக் கொண்டிருந்தாள்.

கண்ணனின் அந்த சின்ன வீட்டில் சந்தோஷமாக இருந்தது, சாப்பிட்டது, விளையாடியது என்று நிறையச் சம்பவங்கள் மோதிக் கொண்டிருந்தன. எவ்வளவு வெறுத்தாலும் அவன் சிகரெட் பிடிக்கும் அழகு. அவனுடைய வினையில்லாத சிரிப்பு. இந்தியாவே போற்றும் பணக்காரன் ஆகியும் மாறாத அதே நட்பு, குணம், நயம்.

கண்ணனிடருந்து போன் லதாவுக்கு வந்தது. “இல்ல, அவளுக்கு தெரியும்!” என்று மட்டும் சொன்னாள். போனை வைத்தாள்.

“எனக்கு ரொம்ப பெருமையா இருக்கு லதா. நீங்களெல்லாம் சேர்ந்து ஒரு வாழ்க்கைய கொடுத்து அதுல ஒரு அர்த்தத்தையும் சேர்த்து எனக்கு அமைச்சுக் கொடுக்கணும்னு நினைச்சதே நான் செஞ்ச பாக்கியம் லதா.... இதுக்கப்புறமும் உங்களோட உங்களா இருந்துடுவேன். எனக்கு அது போதும்!”

நியூஸ் பரவியது. ராத்திரியாகும் சமயத்தில், மெல்லியதாக மழை பெய்து கொண்டிருந்தது. வீட்டின் முன் பலர் கூட ஆரம்பித்தார்கள். மீடியாக்கள் சேர்ந்துகொண்டு பதிவுகளை நேரடியாகக் கொடுத்துக் கொண்டிருந்தது. எல்லோரும் சூர்யாவின் சடலத்துக்காக காத்துக் கொண்டிருந்தனர்.

கம்பெனியில் இருந்தவர்களிடமிருந்து நிறைய போன் வந்து கொண்டிருந்தது. விஜி எதையும் அட்டெண்ட் செய்யவில்லை.

சூர்யாவின் நண்பர்கள், உறவுக்காரர்கள், தெரிந்தவர்கள் என்று எல்லோரும் சூர்யா வீட்டிற்கு வர ஆரம்பித்தார்கள். எல்லோருக்கும் லதா, குமார் மற்றும் கண்ணனைத் தெரியும். விஜியை யாருக்கும் தெரியாது. அமைதியாக ஒரு மூலையில் உட்காந்திருந்தாள்.

அதுவரை யாருடைய பிள்ளைகளும் வரவில்லை. ரம்யாவுக்கும் ஜெயந்துக்கும் நியூஸ் சேர்ந்தது.

சூர்யாவின் அப்பா விசுவநாதன் விஜியிடம் பேசினார்.

“அம்மா விஜி. நான் விசுவநாதன் பேசறேன். மத்தவா என்ன பேசறாங்கன்னு வருத்தப் படாதேம்மா. உன்னப் பத்தியும் உங்கள் கல்யாணத்தைப் பத்தியும் சூர்யா சொன்னான். யார் சொல்றாளோ இல்லையோ, நான் உன்ன ஏத்துண்டேன்மா. ஆனா அந்தக் கடவுள் உனக்கு இந்தமாதிரி சோதனைய குடுத்திருக்க வேண்டாம். அவனுக்கப்புறம் எல்லாத்தையும் நீயே பாத்துக்கோம்மா. அவன் வீடுதான் உன்வீடு! அவன் இன்னிக்கு இல்லன்னு போனாலும், நீதான் எனக்கு என்னென்னிக்கும் மருமகள். இதை என் மனசால நானே சொல்லறேன். இத அத்தனையும், பாலு கிட்ட இப்பதான் பேசினேன். என்னால இந்தக் கொடுமைய இந்தியாவுக்கு வந்து பாக்கற தைரியம் எனக்கில்ல. வித்யாவுடன் அவள் ஹஸ்பெண்ட்டும் வர்றார். எங்காத்துல காரியம் செய்ய யாருமில்ல. அதனால நான் குமார்கிட்ட கேட்டேன். அவா அப்பாவுக்கு உடம்பு சரியில்லையாம். கண்ணனிடம் கேட்டேன். அவன் காரியம் செய்துடுவான். அதே மாதிரி, வித்யா ஏதாவது உன்கிட்ட பேசினாள்னா, நீ அமைதியா போயிடு. ஏதாவத சொல்லி விஷத்த கக்குவா. கவலைப் படாதே. நான் ஏற்கனவே பாலுகிட்ட அதுப்பத்தி பேசிட்டேன்...” என்று விஜியின் மனதைப் புரிந்து கொண்டு பேசினார்.

“சரி மாமா. நீங்க சொன்னா மாறியே நடந்துக்கிறேன்.” என்று ஒரே வரியில் முடித்து விட்டாள்.

திடீரென வெளியில் பரபரப்பாக இருந்தது. ப்ரைவேட் செக்யூரிட்டி வண்டிகள் முதலிலே வந்தன. அதன் பின் ஆம்புலன்ஸ் உள்ளே நுழைந்தது. அதைச் சூழ்ந்து கொண்டனர் மீடியா ரிப்போர்ட்டர்ஸ். பாலுவைக் கேள்வி கேட்க கூடினர். நான்கே வரிகளில் சூர்யாவின் மரணத்தைப் பதிவு செய்துவிட்டு, ‘கொஞ்சம் ப்ரைவஸி ஸ்பேஸுக்கும் இடம் கொடுங்கள்’ என்று கேட்டவாறே இருந்தார்.

செக்யூரிட்டி எல்லோரையும் கட்டுக்குள் கொண்டு வந்தார்கள். போலீஸ் பாதுகாப்பும் போடப் பட்டது.

முதன்முறையாக சூர்யா அவன் வீட்டிற்குள்ளேயே மற்றவர்கள் தூக்கி வர நுழைந்தான். ஹாலில் தெற்கு திக்கு பார்த்து அவன் இருந்த அந்த குளிர்ப் பெட்டி வைக்கப் பட்டது. எல்லோரும் முகத்தைப் பார்க்க சூழ்ந்து கொண்டார்கள். லதா சூர்யாவை மிக அருகில் பார்த்துவிட்டு அழுது கொண்டிருந்தாள்.

விஜி ஒரே இடத்தில் இருந்து அழுது கொண்டிருந்தாளேவொழிய, அவளுக்கு அப்படிப்பட்ட சூர்யாவைப் பார்க்க தைரியமில்லை. எல்லோரும் ஒதுங்கிய பின் லதா விஜியைக் கூப்பிட்டு கைத்தாங்கலாக பிடித்து வந்து சூர்யாவின் முகத்தைப் பார்க்க வைத்தாள். வாயில் கையைப் பொத்தியபடி அமைதியாக அழுதாள். கடலளவு தண்ணீரை ஒரு குழாய்க்குள் கொண்டு வருவது போல் தன்னுடைய மனதிலுருந்த சோகங்களை சில சொட்டுகளை தன்னுடைய கண்களில் கொண்டு வந்தாள்.

விஜி அம்மா அழுதுகொண்டு இருக்கும் நேரத்தில் ரம்யாவும், ஜெயந்தும் வந்தார்கள். ரம்யா, அம்மாவைக் கட்டிக் கொண்டு பெரியதாக அழுது விட்டாள்.

எந்த செய்கையும் இல்லாமல் அமைதியாகப் படுத்திருந்தான் சூர்யா. அந்த மாதிரி அவனை ஒருபோதும் எவரும் பார்த்ததில்லை. நண்பர்கள் எல்லோரும் ஒரே சமயத்தில் அவனை சூழ்ந்து கொண்டு அவனுக்காக கைசேர்த்து அமைதியாக அழுதார்கள். சூர்யா பொதுச் சொத்தாகிப் போனதால் அவனைப் பார்க்க மற்ற வி.ஐ.பி க்களெல்லாம் வர ஆரம்பித்தார்கள்.

சூர்யா 'எனக்குத்தான் நெருக்கமானவன்' என்ற உணர்வு அங்கிருந்த மற்றும் அங்கு வந்த ஒவ்வொருவர் மனதிலும் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. அவ்வளவு நண்பனாக சூர்யா எல்லோரிடமும் பழகியிருந்தான்.

அந்த எண்ணங்களில், விஜி மட்டும் விதிவிலக்கா என்ன? மனதோடு ரொம்ப நெருக்கமாகப் பழகியவள் என்ற பெருமை விஜிக்கு இப்போது வந்த அந்தஸ்து இல்லை. அந்தக் காலத்திலிருந்தே பின்னிய பிணைப்பு. அதேபோல் குமார், கண்ணன் மற்றும் லதாவிற்கும் அவனை நண்பனாக அடைந்த பெருமையால் சிறிய கர்வமும் உண்டு.

விஸ்வநாதன் கேட்டுக் கொண்டதைப்போல், கண்ணன் சூர்யாவுக்கு கொள்ளியும் போட்டு, அத்தனை காரியங்களையும் செய்து முடித்தான்.

பல மணி நேரங்கள் கடந்தன. எம்ர்ஜென்ஸி ட்ராவலில் வித்யா மட்டும் வரவழைக்கப்பட்டாள். அவளின் கணவரால் வரமுடியவில்லை.

குமார் அவளுடன் கூட இருந்து, துக்கங்களை பகிர்ந்து கொண்டான். வித்யா இந்த முறை எந்த விதண்டாவாதமோ அல்லது அட்வைஸையோ செய்யவில்லை. மாறாக, விஜியிடம் வந்து அவளைக் கட்டிக் கொண்டாள். "என்னவோ விஜி, உன் வாழ்க்கைல அவனும் ஒரு பங்கா ஆயிட்டான். பழச எல்லாம் மறந்துடுவோம். நீ இங்கேயே அவன் நினைச்ச படி இந்த வீட்டிலேயே இரு. உனக்கு கொஞ்சம் ஆறுதலா இருக்கும். பாலு சாரும், அப்பாவும் சொன்னா!

இப்போ நீதான் அவனோட பிஸினெஸ்ஸெல்லாம் பாத்துக்கறன்னு! ப்ளீஸ் கன்டின்யூ டு டூ இட். வென் டைம் பர்மிட்ஸ், லெட்ஸ் மீட்!"

"உங்களோட முதன்முறையா பேசறேன் வித்யாக்கா. நீங்க சொன்னா மாதிரியே சூர்யாவை நினைச்சுண்டே வாழ்ந்துடுவேன். உங்களோட கண்டோலன்ஸுக்கு தேங்க்ஸ். நான் இருக்கிற வீட்லேர்ந்தே எல்லா காரியங்களையும் பண்றேன்!".

"நோ....நோ.... இவ்வளவு பெரிய வீடு, யாருக்குமில்லாம போயிடும். அவன் உன்ன நினைச்சுதான் ஒவ்வொரு செங்கல்லையும் சேர்த்திருப்பான். அவனுக்கு உன்னோட வாழணும்னு ரொம்ப ஆசை. அட்லீஸ்ட், அவன் இருந்த வீட்ல இருந்துண்டே நீ உன்னோட காரியங்கள பண்ணலாம் விஜி. வி ஆர் ஆல் வித் யூ! இதுதான் எங்கப்பாவின் அப்பாவின் ஆசையும்!". அவன் விஜி அவனுக்குத்தான்!"
"இருந்தவரைக்கும், அவனோட நான் சந்தோஷமாக பேசிய காலங்கள் குறைச்சல். இனிமே நான் பேசணும்னாலும், அவனில்லை. அதையும் தவிர, நீங்க சேராம இருந்ததுக்கு நானும் ஒரு காரணமா இருந்ததை நினைச்சா எனக்கு மனசு பாரமா இருக்கு. என்ன மன்னிச்சுடு விஜி!" என்று சொல்லி விஜியின் கைகளைப் பிடித்த வித்யா ஓவென்று அழுது விட்டாள்.

"அக்கா, நீங்கள் எனக்குத் தைரியம் சொல்லும் நிலைல நான் இருக்கேன். உங்களோட என்னிக்கும் பேசுவேன். தெரிந்தோ, தெரியாமலோ என் பக்கத்துல தவறு இருந்ததுன்னா, நான் அதற்கு மன்னிப்பு கேட்கறேன்!"

'நோ..நோ...அப்படி ஒண்ணுமேயில்ல!" என்று விஜியின் கன்னத்தில் வழிந்த கண்ணீரை தன்னுடைய கைகளால் துடைத்தாள் வித்யா.

விஜிக்கு மனதில் இருந்த ஒரு பெரிய சுமை இறங்கியது. இந்த நாள் வரை விஜியும், வித்யாவும் பேசியது கிடையாது. வித்யாவுக்கு முதலிலுருந்தே தன்னைப் பிடிக்காது என்று விஜி நினைத்தாள். அப்படி இருந்தாலும் இந்தமுறை வித்யா தன்னைப் புரிந்து கொண்டு பேசியது

ரொம்ப பிடித்தது. சூர்யா தனக்கென இன்னொரு புதிய உறவைத் தந்து விட்டு போய் விட்டானென விஜிக்குத் தோணியது.

விசுவநாதன் சொன்னது போல் நண்பன் கண்ணன் சுபம் வரை சூர்யாவுக்காக காரியங்களைச் செய்தான்.

சிறிது நாட்களில், வீட்டிலும், ஆஃபிஸுலும் சூர்யா சிரித்தபடியே போட்டோ ஃப்ரேமுக்குள் நுழைந்து விட்டான்.

மாதங்கள் நகர்ந்தன.

விஜியும், பாலு சாரும் தொழிலைக் கவனித்தார்கள். பாலு சாரும், நண்பர்களும் சொன்னதின் பேரில் விஜி சூர்யாவின் வீட்டிற்கே சேர்ந்தாள். அங்கிருந்தபடியே அவனிருந்த இடங்களை ஒவ்வொன்றாக ரசித்து வந்தாள். அவனுடைய அந்த நினைவுகளுடன் ஒன்றிவிட்டாள்.

அவனை நினைப்பாள் ! ரசிப்பாள் ! வாழ்க்கையை ஓட்டினாள் !

மொட்டை மாடியில் ஒரு மூலையில் உள்ளே பார்க்கும்படி நின்றிருந்தாள். நின்ற நினைவுகள் மீண்டும் எழுந்தது.

“அவன் என்னை தேடின போது நான் அவனுக்காக இல்லை. நான் அவனைத் தேடின போது அவனே இல்லை’ என நினைத்துக் கொண்டே மாடியிலிருந்து இறங்கினாள்.

மாடிப்படி திரும்பும் போது இருந்த பேரிய ஃப்ரேம் போட்ட பெரியதாக இருந்த போட்டோவில் சூர்யா அவனுக்கென்று இருந்த அந்த ஸ்டைலில் சிரித்துக் கொண்டிருந்தான். அதற்கு கீழே அவன் எழுதியிருந்த வரிகள், அவளை நனைத்துக் கொண்டிருந்தது.

இருக்கும்போது தூங்குகின்ற உணர்வுகள்,
இல்லாதபோது தாங்கத் துடிக்கின்றது. மனமே,
வாழ்வாய் உனக்காக, உணர்வுகளை கண்டுபிடித்து...! - சூர்யா

அதை அன்றும் படித்த பிறகு, ‘உன் விஜி உன்னிடம்தான், சூர்யா!” என்று சொல்லியபடி படிகளில் இறங்கிக் கொண்டிருந்தாள்.



எண்ணம்-எழுத்து
நைத்ருவன்